விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

இராகம் 01 | தாளம் 16 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 27 புதன்கிழமை (11.07.2012) | பக்கங்கள்: பதினாறு + 8

கல்வி ஒளி
இலவச
இணைப்பிதழ்
உள்ளே...

# ஆட்கடத்தலைத் தடுக்கும் பணியில் முப்படையினர், பொலிஸார் தீவிரம்!

## 16 பேர் கைது; மேலும் பலரைத் தேடி வலைவிரிப்பு

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக ஆட்களைக் கடத்துவதைத் தடுப்பதற்கான பாரிய நடவடிக்கையொன்று பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து முன்னெடுத்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக இத்தாலி மற்றும் அவுஸ்ரேலியாவுக்கு ஆட்களை கடத்தும் கும்பல்களைத் தேடி புலனாய்வுத்துறையிரும் பொலிஸாருடன் இணைந்து இராணுவம், கடற்படை, விமானப்படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் திகதி முதல் இன்று வரை 200 இற்கும் மேற்பட்டவர்கள் அவுஸ்ரேலியா செல்ல முற்பட்டதற்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை கடல்மார்க்கமாக அனுப்புவதற்காக செயற்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 16 பேரளவில் கைது செய்யப்பட்டும் உள்ளார்கள். 02

## சட்டவிரோத அவுஸ்ரேலிய பயணம்: திருகோணமலையில் சிக்கியது ரோலர்

**82 பேர் பிடிபட்டனர்**

திருகோணமலை கிழக்கு கடல் வழியாக வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட ரோலரில் 82 இலங்கையர்கள் இருந்ததாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கடற்படையினரால் பிடிக்கப்பட்ட இரு ரோலர் படகுகளை திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டு சென்று விசாரணை செய்தபோது 78 ஆண்கள், இரு பெண்கள் மற்றும் இரு சிறுவர்கள் படகில் இருந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

திருகோணமலை கிழக்கு கடல் ஊடாக நேற்று (10) காலை இரு ரோலர் படகு மூலம் வெளிநாட்டுக்குத் தப்பிச 02

## அரசுக்கு முஸ்லிம் காங்கிரஸ் முண்டு கொடுக்கக் கூடாது

**இரா.சம்பந்தன் எம்.பி**



தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைக்கு நிலைத்து நிற்கக்கூடிய நியாயமான அரசியல் தீர்வு ஒன்று காணப்படுவதை சர்வதேச சமூகம் பொறுப்பேற்றுள்ள இந்தத் தருணத்தில் அந்த வாய்ப்பை சிதறடிப்பதற்கு அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்கக் கூடாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தான் வலியுறுத்தியதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 02

## யாழ்.வைத்தியர்களின் பகிஷ்கரிப்பு வழக்கு எதிர்வரும் 19ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர்களின் உத்தேச பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தினைத் தடை செய்வதா? அல்லது அனுமதிப்பதா? என்பது தொடர்பாக மேலும் விளக்கமளிக்குமாறு யாழ் பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரிக்கு நேற்று யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா கட்டளை பிறப்பித்தார். இந்த வழக்கை எதிர்வரும் 19ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறும் மன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

டாக்டர்களின் உத்தேச பணிப் பகிஷ்கரிப்பும் ஆர்ப்பாட்டமும் இடம்பெறுமானால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் அவலங்களையும் கருத்திற்கொண்டு ஏற்கனவே இதற்கு நீதிமன்றம் தடை விதித்திருந்தது. இத்தடையுத்தரவை நீக்கக் கோரி டாக்டர்கள் சார்பில் 02

## நீதிமன்றத்தில் தடையை ஆட்சேபித்து மேன்முறையீடு

காணி சுவீகரிப்பு ஆர்பாட்டத்திற்கு எதிரான தடையை ஆட்சேபித்து வழக்கு தாக்கல் செய்ய தீர்மானம்

காணி சுவீகரிப்புக்கு எதிராக நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவை ரத்துச் செய்யக் கோரி 02

## தம்பலகாமத்தில் சேற்றில் புதைந்து யாழ்.இளைஞன் உயிரிழப்பு

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமத்தில் உள்ள சிவத்தப்பாலம் ஆற்றில் நீராடிய யாழ். இளைஞன் ஒருவர் சேற்றில் புதைந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் உயிரிழ்ந்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருந்தவகுமார் கைந்தன் (வயது-16) என்பவரென பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை தம்பலகாமத்தில் நடைபெற்ற தனது பாட்டனாரின் மரணச் சடங்கிற்கு குடும்பச் சடங்கிற்கு குடும்பத்தாருடன் சென்றிருந்த 02

**கல்வியமைச்சின் செயலாளருக்குக் கல்தா:**

## வேம்படி மகளிர் கல்லூரி விவகாரமும் ஒரு காரணமா?

ஒருவரை அதிபராக நியமிக்கத்தான் முயற்சி செய்யவில்லை என்று அமைச்சர் டக்லஸ் தேவானந்தா நேற்றுத் தெரிவித்தார். 'தமிழ்நாதம்' மேற்படி கல்லூரியில் எடுத்திருக்கும் சர்ச்சை தொடர்பாகக் கேட்ட போதே மேற்கண்டவாறு அமைச்சர் சொன்னார்.

நாடு முழுவதும் வழங்கப்பட்ட ஏழு அதிபர் நியமனங்களில் கல்வியமைச்சின் செயலாளர் மட்டத்திலேயே தவறுகள் இடம்பெற்றிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. 02

## மக்களின் காணிகளை சுவீகரிக்கும் தேவை இராணுவத்திற்கு இல்லை

**யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க**



யாழ். பலாலி விமானப் படைத்தளம் மற்றும் காங்கேசந்துறை துறைமுகம் என்பன தற்போது பாரிய அபிவிருத்திகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால், பாதுகாப்பு நடைமுறை கருதி குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்ட காணிப் பிரதேசம் பலாலி பாதுகாப்பு படைத் தலைமையகத்தால் சுவீகரிக்கப்படும்" என்று யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். இதேவேளை, "யாழ் குடாநாட்டு மக்களின் காணிகளை சுவீகரித்து அவற்றில் 02

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

நிமல ருபனின் மரணம் தொடர்பாக மீண்டும் பிரேதப் பரிசோதனை நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தி பல்வேறு அரசியல் கட்சிகள் நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. சிறை சாலை அதிகாரிகளால் நிமலருபன் கொல்லப்பட்டதாக 02

## பிச்சைக்காரர்களின் பின்னணியில் சில தனியார் நிறுவனங்கள்

**ஆய்வு நடவடிக்கையில் அம்பலம்**

சில தனியார் நிறுவனங்கள் சுய இலாபத்தை நோக்காகக் கொண்டு பிச்சைக்காரர்களை உருவாக்குகின்றன என்ற உண்மை ஆய்வுகள் மூலம் அம்பலத்திற்கு வந்துள்ளது.

இதனை முறியடிப்பதற்காக மேல்மாகாண சபை பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவிருப்பதாக சமூக சேவைகளின் மாகாணப் பணிப்பாளர் திருமதி அனுஷா கோகுல தெரிவித்தார்.

நாட்டில் பல முக்கிய நகரங்களில் அதிகரித்து வரும் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் பாரிய திட்டங்களை 02

**கிண்ணியாவில் பயங்கரம்**

## கருகிய நிலையில் தாயும் மகளும் சடலமாக மீட்பு

- கொலையா?
- தற்கொலையா?
- விபத்தா?

கிண்ணியாவில் தாயும் மகளும் எரிந்து கருகிய நிலையில் சடலமாக மீட்பு

கிண்ணியா - ஆலங்கேணி, கிண்ணியாவில் உள்ள வீடொன்றிலிருந்து எரிந்த நிலையில் இரு பெண்களின் சடலங்கள் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளன.

55 வயதுடைய மகேந்திரன் விஜயராணி மற்றும் அவருடைய 21 வயதுடைய மகள் 02

**தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்**

# நீதிமன்றத்தில் இன்று சிவாஜிலிங்கம் ஆஜர்

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளுக்காக இன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தனக்கு அழைப்பாணை கிடைத்துள்ள தாக முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இன்று காலை 9.00 மணியளவில் தான் யாழ்.நீதிமன்றத்தில் ஆஜராக உள்ளதாக சிவாஜிலிங்கம் கூறினார்.

அண்மையில் யாழ்.நகரில் நடைபெற்றகாணி பிரச்சினை தொடர்பான ஆர்ப்பாட்டம் ஒன்று தொடர்பாக நீதிமன்றம் பிறப்பித்த கட்டளைப்பத்திரத்தை கிழித்து எறிந்ததன் மூலம் இவர் நீதிமன்றத்தை அவமதித்துள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## யாழ். பஸ் நிலையத்தில் பாதுகாப்பு ஊழியர்கள் மிரட்டல்

கொழும்புக்குச் செல்வதற்காகயாழ். பஸ் நிலையத்துக்கு ஆசனப் பதிவுசெய்வதற்குநான் நேற்றுமுன்தினம் காலைசென்றபோதுஅங்கு பாதுகாவல் கடமையில் ஈடுபட்டிருந்தஊழியர்களால் விரட்டப்பட்டேன். நான் எனதுமோட்டார் சைக்கிளைஉருட்டிக் கொண்டுஆசனப் பதிவுசெய்யும் இடத்துக்குநடந்துசென்றேன். இடையில் குறுக்கிட்டஒருசெக்கியூரிட்டிகார்ட் "எங்கள் மோட்டார் சைக்கிளைக் கொண்டு செல்லமுடியாது" என்றுஎன்னைமிரட்டும் தொனியில் ஏசினார். இருந்தும் நான் செல்லும் நோக்கத்தைஅவரிடம் விளக்கிவிட்டுத் தொடர்ந்தும் செல்லமுயன்றேன். மீண்டும் மற்றொருபாதுகாவல் ஊழியர் இடையில் குறுக்கிட்டார். மோட்டார் சைக்கிளைஉருட்டிச் செல்ல முடியாதுஎன்றுகீழ்த்தரமாகப் பேசினார். அத்துடன் "மலசல கூடத்துக்காசெல்கிறீர்கள் என்றும் கேட்டுமிரட்டினார். மக்களோடு பண்பாக நடக்க வேண்டியதுபாதுகாவல் ஊழியர்களின் கடமையல்லவா?

- செந்தூரன், யாழ்ப்பாணம்.

# தங்கூசி வலைகளின் பயன்பாடு யாழில் அதிகரிப்பு

யாழில் சட்டவிரோதமான முறையில் கடற்றொழிலில் ஈடுபடுபவர்களின் தொகை அதிகரித்துள்ளதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்.குடாக் கடலில் சட்டவிரோதமான முறையில் தங்கூசிவலையைப் பயன்படுத்தி மீன்பிடி யில் ஈடுபடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

## சட்ட…(தொடர்)

செல்ல இவர்கள் முயற்சித்ததாக கூறப்படுகிறது.

கடற்படையினரால் குறித்த இரு ரோலர் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கமான்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

## கருகிய நிலையில்…. (தொடர்)

ஜனனி ஆகிய இருவரே இவ்வாறு எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று இரவு இவ்விருவரும் வீட்டில் இருந்தபோது விபத்திற்கு முகங்கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்பட வில்லை.

## அரசுக்கு முஸ்லிம்…. (தொடர்)

தெரிவித்தார். அத்துடன் எதிர்வரும் கிழக்கு மாகாண சபை தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெறுவதற்கு உதவக்கூடாது என்றும் வலியுறுத்தியதாக அவர் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை குறிப்பிட்டார்.

எதிர்வருகின்ற கிழக்கு மாகாண சபையின் தேர்தல் தொடர்பாக திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உப தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பதவி வகிக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கிழக்கு மாகாண சபை தேர்தல் தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சனை சர்வதேச மயமாக்கப்பட்ட பின்னர் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் சந்திக்க போகும் முதலாவது ஜனநாயக சோதனையாகும்.

இச்சோதனையில் தமிழ் பேசும் மக்கள் வெற்றியிட்ட வேண்டும். அவ்வெற்றி தேர்தலில் போட்டியிடும் ஆளும் கட்சியில் இடம் பெறும் ஒரு தமிழ் வேட்பாளர் கூட வெற்றி பெற முடியாத நிலையை ஏற்படுத்த வேண்டும்.

வெற்றி பெறும் தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களாக இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். தமிழ் மக்கள் இதனை தனது தலையாய கடமையாக எடுத்துக்கொண்டு செயற்பட வேண்டும் என்றார்.

## கொழும்பில்…. (தொடர்)

இக்கட்சிகள் குற்றம் சுமத்தின.

இம்மரணம் தொடர்பான நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையில் தமக்கு திருப்தியில்லை எனவும் மீண்டும் பிரேத பரிசோதனை நடத்தப்பட வேண்டுமெனவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறின

## பிச்சைக்காரர்களின் பின்னணியில்…. (தொடர்)

வகுத்துள்ளது.

அதிகரித்து வரும் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை தொடர்பில் மேல்மாகாண சபையின் சமூக சேவைகள் பிரிவு சத்தியக் கூற்று அறிக்கையொன்றினை தயாரித்துள்ளது. இந்த அறிக்கையினூடாக பல இரகசிய தகவல்கள் அம்பலத்திற்கு வந்துள்ளன. சில வியாபாரிகள் இலாபம் கருதி வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களை பிச்சைக்காரர்களாக உருவாக்கி வருகின்றனர்.

இந்த வியாபாரம் நிறுவன மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. உண்மையில் எவரும் தங்குமிட வசதியில்லாமை காரணமாகவோ அல்லது கவனிப்பாரற்ற நிலையிலோ வீதிக்கு வரவில்லை.

மனிதர்களின் ஏழ்மையை சாதகமாக பயன்படுத்தி சில தனவந்தர்கள் அவர்களை நாட்கூலிக்காக பிச்சை எடுக்க வைக்கின்றனர்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அங்கவீனமுற்றோர், குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் இதற்காக பெரிதும் பயன்படுத்தப் படுகிறார்கள். சிலர் அங்கவீனர், விழிப்புலனற்றோர் போன்று நடித்துப் பிச்சையெடுக்க கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். முதியவர்களது உடலில் தெம்பு உள்ளவரை அவர்களை பிச்சையெடுக்க வைத்து பணம் சம்பாதித்து விட்டு, இல்லாத கட்டத்தில் அவர்களை அனாதரவாக வீதியிலேயே விட்டு விட்டு சென்று விடுகிறார்கள்.

அதேவேளை நீண்டகாலமாக பிச்சையெடுத்து வருபவர்களுக்கு இன்னுமொரு சுகபோக வாழ்க்கையிருப்பதற்கான பல தடயங்களும் இந்த சத்தியக் கூற்று அறிக்கையினூடாக வெளிவந்துள்ளன.

இவர்கள் துர்நாற்றத்துடன் அழுக்குப் படிந்த உடையில் காணப்பட்ட மேலும் நாளொன்றுக்கு ஆகக் கூடியது 7ஆயிரம் முதல் 15 ஆயிரத்துக்குட்பட்ட பணத்தினை திரட்டுகின்றனர். தட்டிக் கேட்க முனையும் பட் சத்தில் கொலை அச்சுறுத்தல் விடுக்குமளவிற்கு இவர்கள் தமது வியாபாரத்தை தொடர்ந்து முன் னெடுப்பதில் உறுதியாக விருப் பதாகவும் தெரியவந்திருப்பதாக பணிப்பாளர் அனுஷா கோகுல கூறினார்.

## யாழ்.வைத்தியர்களின்…. (தொடர்)

நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் டாக்டர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி புவிதரன், தனது சமர்ப்பணத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் "இந்த உத்தேச ஆர்ப்பாட்டமானது அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 14(1)(ய)(டி) ஆகியவற்றின் கீழ் அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கே ஒழுங்கு செய்யப்பட்டது. அத்துடன் பேச்சு வெளிப்பாட்டிற்குமான சுதந்திரத்தையும் அவ்வுறுப்புரைகள் உறுதி செய்கின்றன. வைத்தியர்களால் மேற்கொள்ளப் படவிருந்த பணிப்பகிஷ்கரிப்பானது மட்டுப்படுத்தப்பட்ட ஓர் தொழிற்சங்க நடவடிக்கையாகும். இதனைத் தடை செய்வதற்குச் சட்டத்தில் இடமில்லை. பணிப் பகிஷ்கரிப்பானது வெளிநோயாளர் பிரிவுக்கு மட்டும் மட்டுப் படுத்தப்பட்ட ஒன்று" என்று சட்டத்தரணி புவிதரன் தனது சமர்ப்பணத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வழக்கில் இரண்டு விடயங்களை முன்வைத்து பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் சட்டத்தரணி புவிதரன் மன்றுக்குத் தெரிவித்திருந்தார். அதாவது வைத்திய கலாநிதி ஜெயக்குமார் மீதான தாக்குதலைக் கண்டிப்பது ஒரு விடயம், இத் தாக்குதலுக்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைக் கண்டிப்பது இரண்டாவது விடயம். இந்த இரண்டினையும் முன்வைத்தே பணிப்பகிஷ்கரிப்பு நடாத்தப் போவதாகக் கோரியிருந்தனர்.

இப் பணிப்பகிஷ்கரிப்பு நடத்தப்பட்டால் நோயாளர்களும், பொது மக்களும் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்ற அடிப்படையில் அதற்கு நீதிமன்றம் தடை விதித்திருந்தது. எவ்வாறாயினும் இத்தடை உத்தரவினை நீக்க வேண்டுமெனக் கோரி டாக்டர்கள் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு வைத்திய கலாநிதி எம். ஜெயக்குமார் வீட்டின் மீதான தாக்குதலைக் கண்டித்து தொடரப்பட்டுள்ளதால் தனி நபர் மீதான தாக்குதல் குறித்து பொலிஸாருக்கு சட்டபூர்வமான முறைப்பாட்டைச் செய்ய முடியும் அத்துடன் அதன் அடிப்படையில் குற்றவாளிகளைக் கைது செய்து மன்றின் முன் நிறுத்துவதற்கு சட்டத்தில் இடமுண்டு. எனவே இத்தாக்குதல் குறித்து முறையான விசாரணை நடாத்த வேண்டியது பொலிஸாரின் கடமை என்று நீதிவான் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும் தனி நபர் மீதான தாக்குதல் குறித்து முறையான நடவடிக்கையை சுகாதார அமைச்சின் மூலமாகவும், பொலிஸ்மா அதிபரின் மூலமாகவும் எடுப்பது தான் உசிதமானது. அதை விடுத்து இவ்வாறான பணிப் பகிஷ்கரிப்பு மூலம் ஏற்கனவே அவலங்களுக்குள் தள்ளப்பட்டுள்ள பொது மக்களை மீண்டும் அவல நிலைக்கு கொண்டு செல்வது கடவுளுக்கு அடுத்த படியாக வைத்து மதிக்கப்படுகின்ற வைத்தியர்கள் செய்யும் காரியமாக இருக்க முடியாது என்றும் நீதிவான் குறிப்பிட்டிருந்தார். எவ்வாறாயினும் 05.07.2012 அன்று யாழ் குற்றத்தடுப்பு பொலிஸாரினால் அனைக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும், பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரியின் சமர்ப்பணங்களின் அடிப்படையிலும் மன்று இத்தடைக் கட்டளையை வழங்கியிருக்கின்றது என்றும் நீதவான் குறிப்பிட்டார்.

## நீதிமன்றத்தில் … (தொடர்)

இன்று புதன்கிழமை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினால் யாழ். மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன் இது தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

"யாழ். பஸ் நிலையத்தில் தமிழ் மக்களினால் நடத்தப்படவிருந்த காணி சுவீரிப்பு போராட்டத்திற்கு யாழ்.நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம். அதற்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் முகமாக நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். எங்களுடைய சட்டத்தரணி ஊடாக இந்த வழக்கை தாக்கல் செய்யவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வேம்படி… (தொடர்)

இதனால் கல்வியமைச்சின் செயலாளர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இந்த விவகாரம் குறித்து ஜனாதிபதியும் அமைச்சரவையும் சரியானதொரு முடிவை எடுக்கும் என்றும் அமைச்சர் சொன்னார்.

(வேம்படி மகளிர் கல்லூரி புதிய அதிபர் தரப்பு நியாயங்கள் பற்றிய முழு விபரம் நாளை தமிழ்நாதத்தில் வெளியாகும்)

## தம்பலகாமத்தில் …

மேற்படி இளைஞன் நண்பர்களுடன் சேர்ந்து ஆற்றில் நீராடிய போதே சேற்றில் புதைந்து உயிரிழந்துள்ளார்.

சேற்றில் புதைந்த இளைஞனின் சடலம் பொலிஸாரின் உதவியுடன் மீட்டெடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக தம்பலகாமம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## மக்களின் காணிகளை…. (தொடர்)

இராணுவ முகாம்களை அமைக்கும் நோக்கம் இல்லை. யுத்தத்தின் போது தனியார் காணிகளில் முகாம்களை அமைத்த இராணுவம், தற்போது அவற்றை மீண்டும் பொதுமக்களிடமே கையளித்து வருகின்றது" எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ருன்கின் உடனான சந்திப்பின் போதே யாழ். கட்டளைத் தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் கூறியுள்ளதாவது.

"கடந்த 2009ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றனர். தற்போது யாழ். குடாநாட்டில் எஞ்சியுள்ள படையினர் அங்குள்ள பொதுமக்களின் நலன்புரி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களைப் போன்றே தேசிய பாதுகாப்புக்கு இராணுவத்தின் தேவை அவசியமாகின்றது. அவ்வாறு தேவைப்படும் பகுதியினரே தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ளனர். அவர்களும் எதிர்காலத்தில் குறைக்கப்பட வாய்ப்புண்டு.

எவ்வாறாயினும் 1980களின் ஆரம்பத்தில் ஏற்பட்டதானதொரு நிலைமையை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள இராணுவம் ஒரு போதும் இடமளிக்காது" [illegible] யாழ். கட்டளைத் தளபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஆட்கடத்தலைத் தடுக்கும்…. (தொடர்)

முப்படையினர், பொலிஸ் மற்றும் புலனாய்வுத்துறையினரின் உதவியுடன் தமது நடவடிக்கைகளை மூன்று பிரிவுகளாக முன்னெடுப்பதாக பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்கு அனுப்புவதாகக் கூறி பணம் சேகரிக்கும் மற்றும் பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளும் நபர்கள் அத்துடன் இதற்குத் துணை போகும் நபர்கள் தொடர்பாக ஆட்களை ஒன்று திரட்டும் இடங்கள் தொடர்பாக நாட்டுக்குள் புலனாய்வுப் பிரிவு, பொலிஸ், இராணுவம் என்பன தமது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவற்றையும் மீறி அவுஸ்ரேலியா செல்வதற்காக கடற்கரையோரங்களுக்கு வரும் கரையோரங்களுக்கு வரும் ஆட்களைக் கண்காணிக்கவும் வள்ளங்களைக் கண்காணிக்கவுமென நாட்டின் சகல கரையோர பகுதிகளிலும் இராணுவத்தினர் கடற்படையினரதும், பொலிஸாரினதும், புலனாய்வுப் பிரிவினரதும் உதவியுடன் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

இதனையும் மீறி கடலில் ஆழ்கடல் வள்ளங்களில் அவுஸ்ரேலியா செல்லும் சட்டவிரோத செயற்பாட்டாளர்களை தேடி கைது செய்ய கடற்படையினரும் விமானப் படையினரும் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இவ்வாறான ஒரு நடவடிக்கையின் ஊடாகவே, நேற்று இரண்டு ஆழ்கடல் வள்ளங்கள் திருமலைக்கு தென்கிழக்கே கைப்பற்றப்பட்டதாக பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டில் இருந்து சட்டவிரோதமாக அவுஸ்லேியா செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பலரும் பல இலட்சங்கள் கொடுத்து ஆழ்கடல் வழியாக செல்வதற்கு முற்பட்டுள்ளனர். சிலர் அவுஸ்ரேலியா அனுப்புவதாகக் கூறி பெருந்தொகை பணத்தை பறிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்வதற்காக வள்ளங்களில் ஏறி கடற்படையினரால் கைதான சுமார் 50 இற்கும் மேற்பட்டோர் இன்னும் தடுப்புக் காவலில் உள்ளனர்.

அவுஸ்ரேலியாவுக்கு கடல் மார்க்கமாக அனுப்புவதாக கூறி பணம் சேகரிக்கும் நபர்கள், தரகர்கள், வள்ளங்கள் தொடர்பாக தகவல்கள் தெரிந்திருப்பின் உடனடியாக 0112674505 அல்லது 0112674506 அல்லது 0112674503 என்ற தொலைபேசிகளுடாக அறியத்தருமாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

# வவுனியா வைத்தியசாலைக்கு வந்த புற்றுநோயாளர் திருப்பி அனுப்பப்பட்டனர்

## வைத்தியர் வராததால் பரிதாபம்

(வவுனியா)

வவுனியா பொது வைத்திய சாலையில் மாதாந்தம் இரண்டாவது செவ்வாய்க்கிழமை இடம்பெறும் புற்றுநோய் சிகிச்சைக்காக மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா ஆகிய பிரதேசங்களில் இருந்து வருகைதந்த 80 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் வைத்திய கலாநிதி வராமையினால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து புற்றுநோய் சிகிச்சைக்காக வருகை தரும் வைத்தியகலாநிதி ஜெயக்குமார் வருகை தராமையினால் தம்மை திரும்பி செல்லுமாறும் எதிர்வரும் மாதம் இரண்டாவது செவ்வாய்கிழமை சிகிச்சைக்காக வருமாறும் வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளதாக நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக திருகோணமலையில் இருந்து வருகை தந்திருந்த ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,எனது மனைவிக்கு புற்றுநோய்க்கான சிகிச்சை பெற இங்கு வந்தேன் எனினும் வைத்தியர் வராமையினால் என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் உள்ளேன்.

யாழ்ப்பாணம் சென்று வெள்ளி மற்றும் சனி ஆகிய தினங்களில் சிகிச்சை பெற முடியும் என தெரிவித்தனர். ஆனால் மனைவிக்கு மருந்துகள் தீர்ந்து விட்டன. எனவே அவசரமாக மருந்துகளை பெறுவதற்கு வைத்தியரை காண வேண்டியுள்ளது. அதற்கு என்ன செய்வதென்று புரியாதுள்ளது என தெரிவித்தார்.

இதேவேளை கருத்து தெரிவித்த முல்லைத்தீவை சேர்ந்த பெண்ணொருவர், முல்லைத்தீவில் இருந்து காலை 6 மணிக்கே வைத்தி சாலைக்கு வந்துவிட்டோம் எனினும் 9 மணியளவில் வைத்தியர் வர மாட்டார் என தெரிவித்துள்ளனர். நாங்கள் பாரதூரமான நோயாளர்களாக இருப்பதனால் சிகிச்சையை தொடர்ச்சியாக பெறவேண்டும். எனினும் வைத்தியர் வாராமையினால் ஏமாற்றதுடன் செல்லவேண்டியுள்ளது என தெரிவித்தார்.

# மொரட்டுவ பல்கலைக்கழக மாணவிகள் 9 பேர் மாயம்

கண்டி, ஹந்தான மலைக்குச் சென்ற மொரட்டுவ பல்கலைக் கழக மாணவிகள் சிலர் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

காணாமல் போனதாகக் கூறப்படும் 9 மாணவிகளைத் தேடும் பணியில் கண்டி விசேட பொலிஸ் குழுவொன்று ஈடுபட்டு வருகிறது.

அவர்கள் சென்ற இடம் தொடர்பான விபரங்களின் அடிப்படையில் பொலிஸார் காணாமற்போனவர்களைத் தேடி வருகின்றனர்.

# தெல்லிப்பளையில் பொலிஸாரின் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை





(வலிகாமம்)

டெங்கு ஒழிப்பு மாதத்தை முன்னிட்டு தெல்லிப்பளை பொலிஸாரினால் இடம் பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் சிரமதானப் பணிகள் மூலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

திங்கள் கிழமை தெல்லிப்பளை பொலிசார் வலி.வடக்குப் பிரதேச சபை மற்றும் மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலைய மக்கள் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதயில் உள்ள பற்றைகள்; குப்பைகள் அகற்றப் பட்டதுடன் கழிவு நீர் தேங்கும் வாயக்கால்களும் துப்பரவு செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் காமின் நவரத்தின, தெல்லிப்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்ச்சி மற்றும் வலி வடக்குப் பிரதேச சபைத் தலைவர் கோ.சுகிர்தன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

# அச்சுவேலி பண்பாட்டு விழா மலருக்கு ஆக்கம் கோரல்

(மாவிட்டபுரம்)

அச்சுவேலி பண்பாட்டு பெருவிழா மலருக்கான ஆக்கங்கள் பொருத்தமானவர்களிடமிருந்துகோரப்படுகின்றன. அச்சுவேலி பண்பாட்டு பெருவிழாவானது அச்சுவெலி தெற்கு, அச்சுவேலி வடக்கு, அச்சு வேலி மேற்கு, கதிரிப்பாய், தம்பாலை,இடைக்காடு,வளலாய், பத்தமேனி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாகஆவணி மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

# பயிற்சி பத்திரிகையாளர்களுக்கு ஒரு சந்தர்ப்பம்

தமிழ்நாதம் பத்திரிகையில் பயிற்சிப் பத்திரிகையாளர்களாகச் சேர விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன. விண்ணப்பதாரிகள் இருபது வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்குக் குறைவானவராகவும் இருத்தல் வேண்டும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஜீ.சி.யு. சாதாரண தரம் அல்லது உயர்தரம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் தமது சுய விபரக்கோவையை அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 20.07.2012.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

**பிரதம ஆசிரியர்,**
**"தமிழ் நாதம்"**
**267, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# காணாமற்போன 6 மாணவிகள் கண்டுபிடிப்பு

ஹட்டன் பிரதேச மகளிர் பாடசாலையில் காணாமல் போன 6 மாணவிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அதில் ஒரு மாணவி அம்பாறையில் உள்ள தனது வீட்டிற்குச் சென்றுள்ளதாகவும் ஏனைய ஐவர் மின்னேரியா பிரதேசத்தில் உள்ள தமது நண்பர்கள் வீட்டிற்குச் சென்றிருந்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஹட்டன் பிரதேச மகளிர் பாடசாலை மாணவிகள் அறுவர் காணாமல் போனதாக ஹட்டன் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(மாவிட்டபுரம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளிலிருந்து இவ்வாண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு எதிர் வரும் 14ஆம் திகதி திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கின் வளவாளராக வவுனியா தமிழ்மகாவித்தியாலய அதிபர் என்.எஸ். செல்வரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார்.

எனவே தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள வலிகாமம் கல்வி வலயப்பாட சாலையைச் சேர்ந்த மாணவர்களை உரிய நேரத்தில் கருத்தரங்கில் பங்குபற்ற செய்யுமாறு பாடசாலை அதிபர்களுக்கு விலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

# பலத்த காற்று எச்சரிக்கை

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி காற்று சூழ்நிலை காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளிலும் சூழவுள்ள கடற்பகுதிகளிலும் பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# யாழ்.மத்திய கல்லூரியில் சொல்லாடு களம் நிகழ்வு

(மாவிட்டபுரம்)

யாழ்ப்பாணத்தின் பண்பாட்டை பதிவு செய்வதில் முன்னனி வகிப்பவர் கே.டானியலா? செ.கணேசலிங்கனா? என்னும் தலைப்பிலான சொல்லாடு களம் நிகழ்வு யாழ்ப் பாணம் மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இடம்பெற்றது.

கே.டானியல் அணி சார்பாக யாழ்.எயிட் தொண்டு நிறுவன இணைப்பாளர் திருமதி றஜிவன் தர்மினி, கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் ச.சந்திரசேகர், மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர் வே.நகுலன், ஆகியோரும் செ.கணேசலிங்கன் அணி சார்பில் கரைச்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கு.றஜீவன், ஆசிரியர் த.அஜந்தகுமார், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் நாக.தமிழிந்திரன் ஆகியோரும் தமது வாதத்தினை முன் வைத்தனர்.

இச்சொல்லாடு களத்தின் நோக்குனர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் வேல்நம்பி, சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல், ஆகியோரும் நடுவராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாட்பேராசிரியர் அ.சண்முகதாசும் கலந்து கொண்டனர்.

# தமிழ் நாதத்தில் வேலைவாய்ப்பு, பரீட்சை விளம்பரங்கள் திங்கட்கிழமைகளில்

அரசாங்க திணைக்கள, கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சபைகளில் வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் மற்றும் பரீட்சைகள் தொடர்பாக வாராவாரம் அரசாங்க வர்த்தமானியில் வரும் விளம்பரங்கள் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் "தமிழ் நாதம்" பத்திரிகையில் பிரசுரமாகும்.

# இன்றைய இராசி பலன் (11.07.2012)

நந்தன வருடம் ஆனித் திங்கள் 27ஆம் நாள் புதன்கிழமை
**நட்சத்திரம்:** ரேவதி இரவு 8.24 வரை. அதன் பின் அச்சுவினி
**திதி:** அட்டமி இரவு 11.21 வரை. அதன் பின் நவமி
**சுபநேரம்:** 4.29 - 5.59 இராகுகாலம்: 11.59 - 1.29
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** ; சுப காரியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, புதுமுயற்சி
**இடபம்:** பணப்புழக்கம் குறைவு, தொழிலகத்தில் விரோதம்,சிறு தூரப் பிரயாணம்.
**மிதுனம்:** உடல்நிலை பாதிப்பு, செலவினம், வீண்பழி கேட்டல்
**கடகம்:** முயற்சி தடை, மருத்துவச் செலவு, மனக்கவலை
**சிங்கம்:** நற்காரிய விருத்தி, பிரயாணம், உடற்சோர்வு
**கன்னி:** பொருட்சேர்க்கை, இனசன வருகை, விருந்துபசாரம்
**துலாம்:** நற்காரியம், எதிர்பாராத வரவு, இருப்பிட மாற்றம்
**விருச்சிகம்:** காரியத் தடை, பணச்செலவு, பிரயாணக் கஷ்டம்
**தனுசு:** தொழில் மந்தம், கடன் படல், அயலவரால் கஷ்டம்
**மகரம்:** பொருள் வரவு, தொழில் சிறப்பு, போசன சுகம்
**கும்பம்:** வாகன நஷ்டம், வயிற்றில் ரோகம், வாக்கு விரோதம்
**மீனம்:** சிரசு ரோகம், ஆயுதபீடை, புத்திரரால் சஞ்சலம்

-ஜோதிடர் பால. இரத்தினசேகர் -

நிமலரூபனின் இறுதிச்சடங்கு :

# தீர்மானம் மேற்கொள்ள நீதிமன்றுக்கு இரு வார அவகாசம்

றாகம வைத்தியசாலையில் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதி கணேசன் நிமலரூபனின் சடலத்தை அடக்கம் செய்யும் விவகாரம் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுவதற்காக 23 ஆம் திகதி வரையில் கடவத்தை நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியிருக்கின்றது.

வவுனியா சிறைச்சாலையில் 3 சிறைக்காவலர்கள் அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகளினால் பணயமாக வைக்கப்பட்டிருந்ததையடுத்து, அவர்களை கூட்டு இராணுவ நடவடிக்கையின் மூலம் மீட்டெடுத்த சிறைச்சாலை அதிகாரிகள் அங்கிருந்த கைதிகள் அனைவரையும் அனுராதபுரம் உட்பட வேறு சிறைகளுக்கு இடமாற்றம் செய்திருந்தனர

இதன்போது வவுனியாவில் தடுப்புக்காவலில் இருந்த நிமலரூபன் என்ற அரசியல் கைதியும் காயங்களுக்குள்ளாகி றாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் அங்கேயே அவர் மரணமானார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அடிகாயங்களுக்கு உள்ளாகிய நிலையிலேயே அவர் மரணமாகியதாகப் பலரும் குற்றம் சுமத்தியிருந்தனர். இந்தக் குற்றச்சாட்டை அரச தரப்பினர் மறுத்துள்ளனர்.

இந்லையில் நிமலரூபனின் சடலத்தை வவுனியாவுக்குக் கொண்டு சென்றால் அங்கு அசம்பாவிதங்கள் ஏற்படலாம், அதனால் அங்கு அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என வவுனியா பொலிசார் தெரிவித்திருந்தார்கள்.

எனவே நிமலரூபனின் சடலத்தை வவுனியாவுக்குக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்காமல், கடவத்தை நீதிமன்றப் பிரதேசத்திற்குள் அதனை நல்லடக்கம் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என கடவத்தை பொலிசார் செய்த விண்ணப்பத்தை நீதிமன்றம் ஏற்றிருந்தது.

அதன்படி அந்த சடலத்தை வவுனியாவுக்குக் கொண்டு செல்ல முடியாது என்றும் கடவத்தை நீதிமன்ற நியாயாதிக்கப் பகுதியில் நல்லடக்கம் செய்ய வேண்டும் என்றும், அதற்கு நேற்று 9 ஆம் திகதி வரை அவகாசம் தருவதாகவும் கடவத்தை நீதவான் கடந்த வியாழக்கிழமை தனது உத்தரவில் தெரிவித்திருந்தார்.

எனினும் நிமலரூபனின் சடலத்தை வவுனியாவிலேயே நல்லடக்கம் செய்ய வேண்டும் என்று விரும்பி அவரது பெற்றோர், அதற்கான அனுமதியைப் பெறுவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

இதற்காக அவர்களின் சார்பில் கடவத்தை நீதிமன்றத்தில் சட்டத்தரணி இளையதம்பி தம்பையா ஆஜராகி வவுனியாவில் சிவில் இயல்பு நிலை நிலவுகின்றது.

எனவே அங்கு நிமலரூபனின் சடலத்தைக் கொண்டு சென்றால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. சடலம் வவுனியாவுக்கு கொண்டுசெல்லப்படுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

பாதுகாப்பு விடயம் தொடர்பில் பொலிசாரின் அறிக்கையைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் முடிவு எடுக்க முடியும் என கடவத்தை நீதிவான் பதிலளித்தார். எனினும் மேலதிக உத்தரவு கிடைக்கப் பெற்றால் அனுமதி வழங்க முடியும் எனவும் தெரிவித்தார். அதற்கென வருகின்ற 23ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியிருப்பதாக சட்டத்தரணி தம்பையா தெரிவித்துள்ளார்.

இதேவேளை உயர் நீதிமன்றத்தில் இதற்கான உத்தரவைப் பெறுவதற்குரிய முயற்சிகளில் நிமலரூபனின் பெற்றாருடைய சார்பில் சட்டத்தரணிகள் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும் சட்டத்தரணி தம்பையா தெரிவித்துள்ளார்.

# கனடாவின் குற்றச்சாட்டுக்கு இலங்கை கண்டனம்!

கனேடிய நீதிமன்றமொன்றில் இலங்கைக் கடற்படையினர் மீது குற்றம் சுமத்தி வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு இலங்கை அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

முறைப்பாட்டாளர், சாட்சியாளர் இன்றி இலங்கைக் கடற்படையினர், போர்க்குற்றங்களைப் புரிந்ததாக கனேடிய நீதிமன்றம் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசியல் தஞ்சம் கோரி, இலங்கையின் கடற்படையைச் சேர்ந்த முன்னாள் தமிழ் அதிகாரியான நடராஜா குருபரன் என்பவர், கனேடிய குவரவு அமைச்சருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளாது, அரசியல் புகலிடம் கோரிய நபர் ஒரு பொய்க்காரர் என தீர்மானித்ததுடன், கடற்படையினர் போர்க் குற்றங்களைப் புரிந்ததாகவும் குறிப்பிட்டதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு பக்கசார்பானது எனவும் கனேடிய நீதிமன்றம் எதனடிப்படையில் இந்த முடிவுக்கு வந்தது என்பதை வெளியிட வேண்டும் எனவும் இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ் கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களுடன் கலந்துரையாடல்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமனம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் கல்வியற்கல்லூரி ஆசியரியர்களுடனான கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மகளிர் இந்து கல்லூரியில் நடைபெற்றுள்ளது.

வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் வடமாகாண அளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பிரதிச் செயலாளர் விக்னேஸ்வரன், அளுநரின் செயலாளர் இளங்கோவன் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாணத்திற்கு நியமனம் வழங்கப்பட்ட 58 தொழில்நுட்ப ஆசிரியர்களும் 190 கல்வியற் கல்லூரி பட்டதாரி ஆசிரியர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




பட்டதாரி பயிலுனர்களாகத் தெரிவான 245 பேருக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி நிர்வாகப் பொறுப்புக்கள் தொடர்பான அறிவுரைகளை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன்,திட்டமிடல் உதவி பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், கணக்காளர் ஆகியோரால் வழங்கப்பட்டபோது எடுத்த படம்.

டெங்கு ஒழிப்பு திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பாக யாழ். பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள் இணைந்து பொது மக்களுடன் கலந்துரையாடுவதைக் காணலாம். (ல)

# கழுகுக் கண்கள்

வடமத்திய மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் உள்ள கிராமங்களில் விரியன் பாம்பிள் அட்டகாசத்தினால் பலர் பாம்புக் கடியினால் மரணித்து வருகிறார்கள் என்ற செய்தியைக் கேட்டு, மன வேதனைப்பட்ட நான், அப்பிரதேசங்களுக்கு சென்று விரியன் பாம்புகளின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் முதலில் திருகோணமலை மாவட்டத்தை நோட்டமிடுவதற்காக தாழப் பறந்து கொண்டிருந்தேன்.

அப்போது நான் விரியன் பாம்பை பார்ப்பதற்கு பதில் தம்பலகாமம் கிராமத்தில் மனித உருவில் இருந்த ஒரு மிருகம் ஒரு அப்பாவி பொது சுகாதார பரிசோதகரை உலக்கையினால் அடித்துப் படுகொலை செய்த சம்பவத்தை ஆகாயத்தில் இருந்து பார்த்தேன். நான் மட்டும் ஒரு இராட்சதக் கழுகாக இருந்தால் அந்தக் கொடிய மனித மிருகத்தை அலாக்காக ஆகாயத்திற்கு தூக்கிச் சென்று கடலில் வீசியெறிந்திருப்பேன். அந்த தண்டனையை என்னால் கொடுக்க முடியவில்லை.

இந்நாட்டு மக்களின் உயிரைப் பேணிப் பாதுகாப்பதற்காகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் அவர்களுடைய உதவியாளர்களும் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை நாடெங்கிலும் ஒழித்துக் கட்டுவதற்கு எடுத்துவரும் நற்பணிக்கு பெரும் பாலான மக்கள் தங்களின் பூரண ஒத்துழைப்பை நல்கி வருகின்ற போதிலும், தானும், தனது குடும்பமும், சுற்றத்தாரும் டெங்கு நோய் அச்சுறுத்தல் இன்றி வாழ்ந்தால் போதும். மற்றவர் கள் எப்பாடு பட்டாலும் எமக்கு கவலையில்லை என்ற சுயநலப் போக்கில் வாழ்ந்து கொண்டிருப் பவர்களும் நம் நாட்டு சமூகத் தில் இருக்கிறார்கள்.

வேறொரு பிரதேசத்தில் ஓரிருவர் மரணித்துவிட்டால் இவர்கள் அதைப்பற்றி அயலவர்களுடன் அரட்டையடிப்பார்களே ஒழிய, டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை ஒழித்துக்கட்டுவதில் எவ்வித அக்கறையும் எடுத்துக் கொள்வதில்லை. இப்படியும் ஒரு சாரார் எங்கள் நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

டெங்கு நுளம்பு ஓரினத்தைச் சேர்ந்தவர்களையோ, ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்களையோ, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழ்ந்தவர்களையோ தாக்கி அவர்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்துவதில்லை. இந்த ஆறறிவு இல்லாத நுளம்புகள் தாங்கள் சந்திக்கும் மனிதர்களின் உடம்பில் துறையிட்டு, அவர்களின் இரத்தத்தையே உறிஞ்சிக் குடிக்கின்றன. இந்தத் தாக்குதலின்போது அவை தங்களை அறியாமலேயே தாங்கள் கடிக்கும் மனிதர்களுக்கு டெங்கு நோய்க் கிருமிகளை உடலில் செலுத்தி விடுகின்றன.

இந்த நுளம்புகளைக் கூட நாம் மன்னித்துவிடலாம். ஆனால், தேசிய ரீதியில் மேற்கொண்டு வரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு தீங்கிழைப்பவர்களையும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தடை விதிப்பவர்களையும் நாம் மன்னிக்க முடியாது. அரசாங்க ஊழியர்களான பொது சுகாதாரப் பரிசோதகர்களும் அவர்களின் உதவியாளர்களும் காலநிலையை பொருட்படுத்தாமல் மழையிலும், வெயிலிலும் நாடெங்கிலும் வீடு வீடாக சென்று டெங்கு நோய் பரவும் இடங்களை இனங்கண்டு அப்பிரதேசங்களை சுத்தம் செய்யும் பணியை பிரதேசவாசிகளினதும், பொலிஸாரினது உதவியுடன் மேற்கொள்ளும் போது அவர்களுக்கு தடை விதிக்கும் அல்லது உடல் ரீதியில் தாக்கிக் காயப்படுத்தும் மனிதர்களை மன்னிக்கவே முடியாது.

டெங்கு ஒழிப்புப்பணியில் ஈடுபட்டுவரும் அரச ஊழியர்கள் எங்களுக்கு உதவி செய்கிறார்கள் என்பதை நம்நாட்டு மக்கள் உணர்ந்து அவர்களுக்கு உதவியும், ஒத்தாசையும் வழங்க வேண்டும்.

இவர்களைத் துன் புறுத்தும் சில சமூக விரோதி களை மக்கள் தடுத்து வைத்து, அவர்களை பொலிஸாருக்கு பிடித்துக் கொடுத்து தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும். இவ்விதம் மக்கள் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டால் எங்கள் நாட்டில் இருந்து டெங்கு அரக்கனை பூண்டோடு ஒழித்துக்கட்ட முடியும்.

மக்கள் இவ்விதம் சுயநலப் போக்கில் பொறுப்பற்றவர்களாக தொடர்ந்தும் இருக்கிறார்களா என்பதை கழுகு கண்கள் ஆகாயத்தில் இருந்து அவதானித்து அவர்களுக்கு எதிராக தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதையும் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

# இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை சிலர் மிகைப்படுத்துகின்றனர்

## இறந்த 7896 பேரில் பெரும்பாலானோர் புலிகள் என்கிறார் பாதுகாப்பு செயலாளர்

இறுதிக்கட்டப் போரின்போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை பல தரப்பினரும் தமது நலன்கள் சார்ந்த உள்நோக்கத்தோடு மிகைப்படுத்திக் கூறிவருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

பதுளை மாவட்டம் தியதலாவ நகரில் அமைந்துள்ள இராணுவ கல்லூரியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வெளிநாட்டுத் தூதர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாமொன்று கடந்த சனி, ஞாயிறுக்கிழமைகளில் நடந்தது.

இங்கு பேசியபோதே பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

மெலும் கூறிய அவர், ஐ.நா தலைமைச் செயலர் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்கள் குழு அடங்கலாக சர்வதேச சமூகத்தில் பல்வேறு தரப்பினரும் இறுதிக்கட்டப்போர்ச் சம்பவங்கள் குறித்துதான் கவனம் செலுத்தி வருகின்றனர்.

குறிப்பாக, கொல்லப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கை தொடர்பில் அடிப்படை ஆதாரமற்ற தகவல்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றனர்.

7 ஆயிரம் முதல் 40 ஆயிரம் பேர் வரையில் என அமைந்துள்ள இந்த எண்ணிக்கைகள் சுயாதீனமான ஆதாரங்களை கணக்கில் எடுக்காமல் கூறப்பட்டவை.

ஆட்சேதங்கள் பற்றிய ஐ.நா.வின் இலங்கைக்கான ஆய்வுக் குழுவின் அறிக்கையில், 2008-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் 2009ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி வரையான காலப்பகுதயில், அதாவது போர் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்ட மே 18ம் திகதிக்கு சில தினங்களுக்கு முன்னர்வரை, 7,721 பேர் தான் கொல்லப்பட்டிருக்கிறார்கள் 18,479 பேர் காயமடைந்திருக்கிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அதனைக் கருத்தில் கொள்ளாமலேயே ஐ.நா.வின் நிபுணர்குழு 40,000 பேர் அளவில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறியிருக்கின்றது.

இதனை தெளிவுபடுத்த வேண்டிய தேவை அரசுக்கு இருந்தபடியால்தான், அரசாங்கத்தின் சனத்தொகை புள்ளிவிபரத்துறை, வட மாகாணத்தில் இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை கணக்கெடுத்துள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கூறினார்.

இதன்படி, இறுதிக்கட்டப் போரின் போது, 8000க்கும் குறைவானவர்கள்தான் கொல்லப்பட்டிருக்கிறார்கள். என்றும் இவர்களில் விடுதலைப் புலிகளும், அவர்களால் கொல்லப்பட்ட பொதுமக்களும், மோதலின் இடைநடுவில் சிக்கிக் கொல்லப்பட்டவர்களும் அடக்கம்.

இறுதிக்கட்டப் போர் தொடங்கியபோது கிட்டத்தட்ட 25 ஆயிரம் விடுதலைப்புலிகள் இருந்தார்கள், அவர்களில் 12 ஆயிரம் பேர் வரையில் படையினரிடம் சரணடைந்துவிட்டார்கள்.

இதன்படி, கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் சடலங்களின் எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால், கிட்டத்தட்ட 4600 போராளிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் போரிடுவதற்காக விடுதலைப் புலிகளால் நிர்ப்பந்திக்கப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை.

இதேவேளை, இறுதிப்போரில் கொல்லப்பட்டதாகக்கூறப்படும் 7,896 பேரில் பெரும்பாலானவர்கள் புலிகள் தான்.

அதேபோல், 2009 ஜனவரி முதல் மே வரையான காலப்பகுதியில் 2,635 பேர் காணாமல் போயிருக்கிறார்கள், அவர்களில் பலர் வெளிநாடுகளுக்கு படகுகளில் சென்றுவிட்டார்கள். இவர்கள் பற்றிய விபரங்களை மற்ற நாடுகள் தந்து உதவவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மேலும் காணாமல் போனவர்களை கண்டுபிடிப்பதற்காக அரசு யுனிசெஃப்பின் உதவியுடன் வேலைத் திட்டத்தை முன்னெடுத்திருப்பதாகவும், வயது வந்தவர்கள் 1888 பேரையும், சிறார்கள் 676 பேரையும் கண்டுபிடித்துத் தருமாறு குடும்பங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளதாகவும், காணாமல் போயுள்ள 64 வீதமான சிறார்கள் விடுதலைப் புலிகளால் படையில் சேர்க்கப்பட்டவர்கள் தான் என்றும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## குளவிசுட்டான் பழை வைரவர் ஆலய பொங்கல்

(வவுனியா)

வவனியா நெடுங்கேணி குளவிசுட்டான் பழை வைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் 13 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக ஆலயத்தின் பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர்.

அன்றைய தினம் பகல் விசேட அபிஷேக ஆராதனைகளும் இரவு பொங்கல் திருவிழா இடம்பெறவுள்ளதாகவும் தெரிவத்துள்ள அவர்கள், ஆலய கிரியைகளை ஆலய பூசகர் சி.தணிகாசலமும் சி.அமிர்தலிங்கமும் நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர்.





யாழ்பாணம் மத்திய கல்லூரியின் நாடக மன்றத்தினால் நடத்தப்பட்ட தனி நடிப்பு போட்டி நிகள்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் தனி நடிப்பு நிகழ்வையும் பங்களில் காணலாம். (படம் : மாவிட்டபுரம்)

## வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த 717 பட்டதாரிகளுக்கு நியமனம்

(வவுனியா)

வன்னிப்பிரதேசமான வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை சேர்ந்த 717 பட்டதாரி பயிலுனர்களுக்கு நேற்று முன்தினம் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் வைத்து பயிலுனர் நியமனங்கள் வழங்கப்பட்டது.

வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் வவுனியாவை சேர்ந்த 326 பட்டதாரிகளுக்கும் முல்லைத்தீவைச்சேர்ந்த 137 பட்டதாரிகளுக்கும் மன்னாரை சேர்ந்த 254 பட்டதாரிகளுக்கும் இந் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந் நியமனமானது 6 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலானது என தெரியவருவதுடன் இவர்களுக்கான வேதனமாக மாதாந்தம் பத்தாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் உனைஸ்பாருக், ஜனாதிபதியின் இணைப்பாளர்கள், மூன்று மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், வவுனியா நகரசபை உறுப்பினர் அப்துல் பாரி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## பண்டத்தரிப்பு பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கத்துக்கு வெற்றி

(மாவிட்டபுரம்)

90வது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட சைக்கிள் ஓட்ட நிகழ்வின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அவற்றின் விபரம் வருமாறு:

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சபை அங்கத்தவர்கள் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டனர். இவர்களில் த.தனிஸ் முதலாமிடத்தினையும் அ.சலக்சன இரண்டாமிடத்தினையும் தி.கமல் ராஜ் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை - ஆர்.பருவநிலாவும் (தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) இரண்டாம் இடத்தினை இ.தனுசாவும் (பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சபை) மூன்றாமிடத்தை பு.மலாவும் (கோண்டாவில் பனை

தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சபை) ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

## பொன்சேகாவின் மனுமீதான விசாரணை ஒக்டோபர் 2 இல்

முதலாவது இராணுவ நீதிமன்றின் தீர்ப்புக்கு எதிராக முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்த ஆணைகோரும் மனு தொடர்பான விசாரணை ஒக்டோபர் இரண்டாம் திகதி நடைபெறும் என மேல் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இராணுவ கௌரவம் சகலதும் பறிக்கப்பட்டு இராணுவத்திலிருந்து விலக்கப்பட வேண்டுமென இராணுவ நீதிமன்றம் சரத்பொன்சேகாவுக்கு அளித்த தண்டனையை எதிர்த்து இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

## புதிய வகை மாம்பழ உற்பத்தியில் வவு.விவசாய திணைக்களம் வெற்றி

(வவுனியா)

வவுனியா விவசாய திணைக்களத்தால் டொம் ஈசிஜி வகை மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெற்றி காணப்பட்டுள்ளதாக வவுனியா விவசாய விரிவாக்கல் பிரதிப் பணிப்பாளர் சகிலாபானு தெரிவித்தார்.

டொம் ஈசிஜி மாமர வகை வருடம் முழுவதும் காய்க்கும் தன்மை கொண்டதாகவும் ஒரு பழத்தின் நிறை 500 கிராமுடையதாகவும் காணப்படும் எனவும் தெரிவித்த அவர் இதன் விதைகள் மெல்லியதாகவும் நீண்டதாகவும் உள்ளதுடன் தசைப்பிடிப்புள்ளதாகவும் உள்ளதாகவும் இவை அனுராதபுரம் கெக்கிராவை பகுதிகளில் இருந்து வவுனியாவிற்கு கொண்ட வரப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு 261 மரக்கன்றுகள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் இதன் மூலம் விவசாயிகள் அதிக வருமானத்தை பெற்றுள்ளமையினால் ஏனைய விவசாயிகள் இக்கன்றுகளை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுவதாகவும் விவசாய விரிவாக்கல் பிரதிப்பணிப்பாளர் தெரிவித்தார்.

## யாழ்.குடாநாட்டில் மீண்டும் மலேரியா பரவும் அபாயம்

(வலிகாமம்)

யாழ்.குடா நாட்டில் மீண்டும் மலேரியா பரவும் அபாய நிலமை ஏற்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மலேரியா நோய் தடுப்பு வைத்தியதிகாரி பிரிவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கட்டுப்பாட்டில் இருந்த இந்நோய் தற்போது ஆபிரிக்க நாடுகளில் இருந்து வருபவர்கள் மூலம் பரவத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் கூட இத்தகைய மலேரியா நோய் தாக்கத்திற்கு இலக்கான ஒருவர் வலி.வடக்குப் பகுதியில் இனம் காணப்பட்டதாகவும் இவர் ஆபிரிக்க நாட்டில் இருந்து திரும்பியவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஜுலை மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை

## கட்டாக்காலி நாய்களுக்கும் எருமைகளுக்கும் கடும் தண்டனை வேண்டும்

ஊழல்கள் மற்றும் மோசடிகளில் ஈடுபடும் அரசியல்வாதிகள் மறு பிறப்பில் எருமைகளாகத்தான் பிறப்பார்களென்று முன்னாள் சபாநாயகரான டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார ஒரு தடவை கூறியிருந்தார். மறுபிறப்பு என்ற ஒன்று இருக்கிறதோ? இல்லையோ? ஊழல் பெருச்சாளிகளான அரசியல்வாதிகள் மீது அவர் கொண்டிருந்த கோபக் கனலையே இந்த வசனம் பிரதிபலிக்கிறது. இதேவிதமான கோபப் பாணியிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரான, அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களைக் 'கட்டாக்காலி நாய்கள்' என்று வர்ணித்துள்ளார். அத்துடன் குற்றச் செயல்கள், ஊழல்கள், மோசடிகளில் ஈடுபடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பைச் சேர்ந்த பிரதேச சபைத் தலைவரொருவர் சிறுமியொருத்தியைப் பாலியல் வல்லுறவுக்கு இலக்காக்கினாரென்ற தகவல் வெளிவந்த கையோடுதான் மேற்படி காட்டமான கருத்தை அமைச்சர் வெளியிட்டார்.

"பொதுவாகக் கூறுவதானால், நாட்டில் குற்றச் செயல்களில் பெருமளவு அதிகரிப்பில்லை. ஆனால் சிறுவர், சிறுமியர்க்கு எதிரான குற்றச் செயல்கள் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளன" என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்திருக்கும் தகவலுக்கு மத்தியிலேயே இந்தக் 'கட்டாக்காலி நாய்கள்' பற்றி அமைச்சர் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

இதுவரை இடம்பெற்ற 975 பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் 775 பிள்ளைகள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்றால், நாளாந்தம் நான்கு பிள்ளைகளுக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதே அர்த்தம். சட்டத்தின் பிடியில் சிக்காமல் தப்பியிருக்கும் எத்தனையோ துஷ்பிரயோக சம்பவங்கள் இந்த எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை. அவற்றையும் சேர்த்தால் நாளாந்தம் பத்துக்கு மேற்பட்ட பிள்ளைகளாவது பாதிப்புகளைச் சந்தித்திருப்பார்கள்.

கடந்த வருடம் முழுவதும் 1775 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றில் 1169 பிள்ளைகளோடு சம்பந்தப்பட்டவையென பொலிஸாரின் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. பதின்மூன்று வயதுக்கும் பதினாறு வயதுக்கும் இடைப்பட்ட சிறுமிகளே பாலியல் ரீதியான ஆபத்துகளை எதிர்நோக்குகிறார்களென்றும் பொலிஸ் பேச்சாளர் எச்சரித்துள்ளார். மிகக் கூடுதலான சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் கொழும்பு மாவட்டத்தை உள்ளடக்கிய மேல் மாகாணத்திலேயே இடம்பெற்றுள்ளன. இதற்கு அடுத்தபடியாக வடமத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம் ஆகியவற்றில் அதிகளவில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இந்த வேகத்தில் அதிகரித்துச் செல்லுமானால் முழுநாடே ஒரு காட்டுமிராண்டித்தனமான நிலைக்குச் செல்வதைத் தடுக்க முடியாது. பொலிசாரினால் மட்டும் சம்பவங்கள் கட்டுமீறிச் செல்வதைக் கட்டுப்படுத்த முடியாது. பொதுமக்கள் மற்றும் சமூக சேவை நிறுவனங்களும் இந்தப் பணிக்குப் பெரும் பங்காற்ற முடியும்.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் பெரும்பாலும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார். இது ஓரளவுக்கேனும் நிம்மதியைத் தரும் தகவலாகும். பெரும்பாலும் வயது முதிர்ச்சியடையாத பிள்ளைகளைத் தனியாக வீடுகளில் விட்டுவிட்டுத் தாய், தந்தையர்கள் வெளிநாட்டுக்குத் தொழில் தேடிச் செல்வது இவ்வாறான துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிப்பதற்குக் காரணமாகிறது. குறிப்பாக மற்றவர்களின் தயவில் பிள்ளைகளை விட்டுவிட்டு பணிப்பெண்களாகத் தாய்மார்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதாலேயே இவ்வாறான துயர சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

நெருங்கிய உறவினர்கள், பிள்ளைகளின் பாதுகாப்புக்கென நியமிக்கப்படுபவர்கள், பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை வாகனங்களில் அழைத்துச் செல்பவர்கள் ஆகியோரே பெரும்பாலும் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றனரென்ற இனங்காணப்பட்டுள்ளனர். எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகள் குறித்துக் கூடுதல் கவனமும், அக்கறையும் எடுத்துச் செயல்படுவார்களானால் துஷ்பிரயோக சம்பவங்களை முன்கூட்டியே தடுக்க முடியும். அது மட்டுமல்ல, கட்டாக்காலி நாய்களைப் போல் திரியும் இந்தச் சமூக விரோதிகளைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டுமானால் கடுமையான தண்டனை வழங்கும் முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். அதற்கெனத் தேவையான தண்டனைச் சட்டக் கோவைகள் திருத்தப்பட வேண்டும். இவ்வாறு குற்றம் புரிபவர்கள் மறுபிறப்பில் எருமைகளாகப் பிறப்பார்களென்று கூறுவதில் அர்த்தமில்லை. இந்தப் பிறப்பிலேயே எருமைகளாகவும் கட்டாக்காலி நாய்களாகவும் நடந்துகொள்ளும் இந்த ஈனப் பிறவிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# அமிர்தலிங்கம் கொலையுண்டு 23 வருடங்களாகின்றன

(நேற்றைய தொடர்ச்சி..)

1986ஆம் ஆண்டு புலிகள் நடத்திய தாக்குதல்களில் ஏனைய தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டனர்.

1972ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தமிழகத்திலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களை எஸ்.ஜே.வி.செல்வநாயகமும், அமிர்தலிங்கமும் சந்தித்து இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடினர். அங்கு உரையாற்றிய செல்வநாயகம், "இலங்கை வாழ் தமிழர்கள் தனிநாடொன்றினை உருவாக்குவதற்கு விரைவிலேயே அஹிம்சை வழியில் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்" என்று கூறினார்.

காலவோட்டத்தில் ஆயுதப் போராட்டத்தில் அக்கறை கொண்ட தமிழ் இளைஞர்களின் எடுகோள்களுக்கு முற்றுமுழுதான விருப்பமில்லாமலேயே கைதியானார் அமிர்தலிங்கம். 1972ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே உமாமகேஸ்வரன், பிரபாகரன், செட்டி தனபாலசிங்கம், ஆகியோர் இணைந்து புதிய தமிழ் புலிகள் என்ற அமைப்பைத் தோற்றுவித்தனர். இதுவே 1975ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமாக மாற்றம் பெற்றது. புதிய தமிழ் புலிகள் என்று அமைப்பே வன்செயல்களுக்குப் பிள்ளையார் சுழி போட்டது. 1972இல் தமிழரசுக் கட்சித் தலைவர்களின் முன்முயற்சியின் பேரில் தமிழர் ஐக்கிய முன்னணி தோற்றம் பெற்றது. இதுவே 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைப் பிரகடனம் வெளியிடப்பட்ட தினத்தன்று தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாக விரிவு பெற்றது.

1978ஆம் ஆண்டு வாக்கிலேயே புலிகள் இயக்கத்துக்குள் உள்முரண்பாடுகள் கூர்மையடைந்ததோடு, உட்கட்சிப் படுகொலைகளும் இடம்பெறத் தொடங்கின. பிரபாகரன் சுத்த இராணுவக் கண்ணோட்டத்துடன் இயங்குகிறாரென்று உமாமகேஸ்வரன், சுந்தரம் ஆகியோர் குற்றம்சாட்டினர். அரசியலுக்காகவே இராணுவம் என்பது உமாமகேஸ்வரன், சுந்தரம் போன்றோரின் கருத்தாக இருந்தது.

1980களின் ஆரம்ப வருடங்களில் சுந்தரம் குழுவினர் "புதிய பாதை" என்ற பெயரில் பத்திரிகையொன்றினை வெளியிட்டு வந்தனர். மாவட்ட அபிவிருத்திச்சபை தொடர்பான தொடர் பேச்சுவார்த்தைகளில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசுடன் அமிர்தலிங்கம் ஈடுபட்டிருந்த காலமது. அமிர்தலிங்கத்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் "புதிய பாதை" கடுமையாக விமர்சித்து வந்தது. 1982ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் திகதீ சுந்தரம் சுட்டுக் கொல்லப்பட்டார். யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டருக்கு எதிரிலிருந்த சித்திரா அச்சகத்தில் "புதிய பாதை" பத்திரிகை வெளியீடு தொடர்பான வேலைகளுக்காகச் சென்றிருந்த வேளை சுந்தரம் சுட்டுக் கொல்லப்பட்டார். பிரபாகரன் குழுவினரே சுந்தரத்தைச் சுட்டுக் கொன்றனர். இக் காலகட்டத்தில் அமிர்தலிங்கத்தின் செல்லப்பிள்ளையாக பிரபாகரன் செயற்பட்டு வந்தாரென்று உமாமகேஸ்வரன் குழுவினர் குற்றஞ்சாட்டி வந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பிரபாகரனுக்குமிடையிலான நெருக்கத்தைக் குறிப்பதற்கு இன்னுமொரு சம்பவத்தையும் குறிப்பிட முடியும். தமிழர்



விடுதலைக் கூட்டணியின் அஹிம்சை வழி அரசியல் நடவடிக்கைகளை விமர்சிப்பதெனப் புலிகள் இயக்கம் தீர்மானம் எடுத்திருந்தது. இந்தத் தீர்மானத்துக்கான முன்முயற்சியை மேற்கொண்டவர் உமாமகேஸ்வரன். 1970களில் பிற்பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது. கூட்டணியை விமர்சித்து உமாமகேஸ்வரன் எழுதி அச்சிட்ட துண்டுப் பிரசுரங்களை இந்தியாவிலிருந்து இலங்கையின் வடபகுதிக்குக் கொண்டுவரும் பொறுப்பு பிரபாகரனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

**எஸ்.அருளானந்தன்**

இராமேஸ்வரத்திலிருந்து களவாக படகுமூலம் துண்டுப் பிரசுரங்களை இலங்கையின் வடபகுதிக்குப் பிரபாகரன் கொண்டு வந்தும்விட்டார். இப் பிரசுரங்களை மக்களுக்கு விநியோகிக்க வேண்டாமென்று அமிர்தலிங்கமும் காசிஆனந்தனும், பிரபாகரனிடம் வேண்டுகோள் விடுத்தனர். அதற்கிணங்க பிரபாகரன் துண்டுப் பிரசுரங்களை எரித்து அழித்துவிட்டார்.

புதிய தமிழ் புலிகள் முதலாவது வங்கிக் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது, தப்பியோட முனைந்த பொன்.சிவகுமாரன் பொலிசாரிடம் சிக்கிக் கொண்டார். சிவகுமாரன் கழுத்தில் அணிந்திருந்த சயனைட் குப்பியை விழுங்கித் தற்கொலை செய்துகொண்டார். இந்தச் சம்பவம் 1974ஆம் ஆண்டு ஜுன் மாதம் நான்காம் திகதி நடைபெற்றது. புதிய தமிழ் புலிகள் எடுத்துக்கொண்ட உறுதிமொழிக்கேற்ப பிடிபடாமல் தப்புவதற்காகச் சயனைட் விழுங்கித் தற்கொலை செய்துகொண்ட முதலாவது நபர் சிவகுமாரன்தான். கோப்பாயிலுள்ள மக்கள் வங்கியைக் கொள்ளையிடும் முயற்சியின்போதே இச் சம்பவம் இடம்பெற்றது. சிவகுமாரனின் பூதவுடல் யாழ் ஆஸ்பத்திரிச் சவச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. சவச்சாலைக்குச் சென்று அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும் அஞ்சலி செலுத்தியதோடு சிவகுமாரனின் பிரேத ஊர்வலத்திலும் இருவரும் பங்குபற்றினர். மரணச் சடங்கில் அமிர்தலிங்கம் ஆற்றிய உரை தென்னிலங்கையில் பெரும் எதிர்ப்பலைகளைக் கிளப்பியது.

"தமிழ் மக்களுக்காகத் தம்பி சிவகுமாரன் மாபெரும் தியாகத்தைச் செய்துள்ளார். இது அவரது வீரச்செயல். தமிழ் மக்களின் பிறப்புரிமையைப் பெற்றுக் கொள்ளும் இலக்கை அடைவதற்கு அவர் ஏற்றுக்கொண்டு செயற்பட்ட வன்செயல்பாணிச் செயற்பாட்டை நான் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவரின் தியாகத்துக்கும் அர்ப்பண சிந்தைக்கும் தலை வணங்குகிறேன்" இவ்வாறு அமிர்தலிங்கம் கூறியமை தென்னிலங்கையில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. அக் காலகட்டத்தில் வடக்கிலும் கிழக்கிலும் முப்பதுக்கு மேற்பட்ட தமிழ்க்குழுக்கள் செயற்பட்டு வந்தன. வங்கிக் கொள்ளைகள், மாற்றுக் கருத்தாளர் படுகொலைச் சம்பவங்கள் பல இடம்பெற்று வந்தன. இதனால் அமிர்தலிங்கம் வன்செயல்களுக்குத் தூபமிடுகிறார் என்று பலமான விமர்சனங்களைத் தென்னிலங்கைச் சிங்கள அரசியல்வாதிகளும் ஊடகங்களும் காரசாரமாக மேற்கொண்டன. ஆனால் தனித் தமிழ்நாட்டுப் பிரிவினையை ஆதரித்து வந்த தமிழ் மக்கள் மத்தியில் அவர் கதாநாயகனாகப் பார்க்கப்பட்டார்.

அஹிம்சை வழிமுறையைத்தான் மனப்பூர்வமாக அமிர்தலிங்கம் வலியுறுத்தினாரென்றால், வன்செயல்பாணி வங்கிக் கொள்ளையில் ஈடுபட்ட ஓர் இளைஞனின் செயற்பாட்டைத் தியாகமென்றும் அர்ப்பணிப்பு என்றும் அமிர்தலிங்கம் வர்ணித்தது நியாயமா? அமிர்தலிங்கம் ஆயுதக் குழுக்களின் துப்பாக்கிகளுக்கு பயந்தாரா? அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைகளின் சிறைக் கைதியானாரா? அல்லது தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைப் பெறுவதற்கு அஹிம்சை வழிமுறையும், ஆயுதப் போராட்டமும் தேவையென்று கருதினாரா?

ஆனால், அமிர்தலிங்கத்தின் தொடர் செயற்பாடுகளில் முரண்பாடுகளின் முகங்கள் தெளிவாகவே தெரிந்தன. 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் பொத்துவில் தொகுதியிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட கனகரட்ணம், ஐ.தே.க.வுக்கு கட்சி மாறியபோது அவரைத் துரோகியென வர்ணித்தார். அவரை உமாமகேஸ்வரனும் பிரபாகரனும் சுட்டுக்கொன்றபோது அக் கொலைச் சம்பவத்தைக் கண்டித்தார். 1981இல் இடம்பெற்ற யாழ் மாவட்ட சபைத் தேர்தலில் ஐ.தே.க.சார்பில் போட்டியிட்ட தியாகராசா சுட்டுக்கொல்லப்பட்டபோது அதற்குப் பலத்த கண்டனம் தெரிவித்தார். வன்செயல்கள் மூலம் தமிழ் மக்கள் தமது இலட்சியத்தை அடைந்துவிட முடியாது என்றும் சொன்னார்.

1979ஆம் ஆண்டு மார்ச் மாதம் சென்னை செய்தியாளர்கள் மத்தியில் அமிர்தலிங்கம் உரையாற்றினார். கேள்வியொன்றுக்குப்

(தொடர்ச்சி 7 ஆம் பக்கம்)

# இலங்கை திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை குறைகிறது

வெளிநாடுகளிலிருந்து இலங் கைக்குத் திரும்பிவரும் அகதி களின் எண்ணிக்கை இந்த வருடம் வெகுவாகக் குறைந்துள்ளதாக அகதிகளுக்கான ஐ.நா.வின் உயர்ஸ் தானிகராலய அதிகாரி மைக்கல் ஸ்வாக் தெரிவித்தார். அகதிகளுக்கான ஐ.நா.உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் கடந்த வருடம் முதல் ஆறு மாதங்களிலும் 962 அகதிகள் இலங்கை திரும்பியிருந்தனர். ஆனால் இந்த வருடம் முதல் ஆறு மாதங் களிலும் 662 பேரே இலங்கை வந்து சேர்ந்துள்ளனரென்றும் அவர் மேலும் கூறினார்.

இலங்கைக்குத் திரும்பி வரும் அகதிகளின் எண்ணிக்கை வீழ்ச் சியடைந்ததற்கான காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டமானது. தனிநபர்கள் தாமதமாகவே முடி வெடுத்து வெளிநாடுகளிலிருந்து திரும்பி இலங்கை வந்து சேர் கின்றனர் என்று அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலய அதிகாரி மேலும் கூறினார்.

2011ஆம் ஆண்டின் முடிவில் 1 இலட்சத்து 36ஆயிரம் இலங்கை அகதிகள் 65 நாடுகளில் இருந் தனர். இவர்களில் 68 ஆயிரத்து 152 பேர் தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்தனர். மேலும் 32 ஆயிரத்து 467 பேர் முகாம்களுக்கு வெளியே உள்ள வீடுகளில் வாழ்ந்து வந்தன ரென்றும் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# டாக்டர் மென்டிஸின் மரணத்தில் சந்தேகமில்லை



விளையாட்டுத்துறை அமைச் சின் மருத்துவப் பிரிவு பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றிய டாக்டர் கீதாஞ்சன மென்டிஸ் இயற்கைக் காரணங்களாலேயே காலமானா ரென்று அவரது மனைவி விநோதினி மென்டிஸ் கொழும்பு நீதிமன்றில் தெரிவித்தார்.

இதனையடுத்து டாக்டர் மென்டிஸின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத் துமாறு கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதிமன்றம் ஏற்கனவே விடுத்த உத்தரவை வாபஸ் பெற்றுக் கொண்டது.

தனது கணவரின் மரணத்தில் எவ்வித சந்தேகமுமில்லையென்று நீதிமன் றுக்குப் பின்னர் சமர்ப்பித்த மனு வில் திருமதி விநோதினி மென்டிஸ் தெரிவித்திருந்தார்.

டாக்டர் மென்டிஸின் மனைவியும், அவரது சகோதரரும் முன்னர் பொலிசாருக்குத் தெரிவித்த முறைப் பாட்டில் டாக்டர் மென்டிஸின் மரணத்தில் சந்தேகமிருப்பதாகத் தெரிவித்திருந்தனர்.

# பண்டாரகம தேரருக்கு விளக்கமறியல்!

குற்றச் செயல்கள் பலவற்றுக்கு துணைபோன குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பண்டாரகம விகாரை தேரர் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார். குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் சந்தேக நபரான தேரர் நேற்று பலபிட்டி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டதை அடுத்து தேரரை விளக் கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். கொஸ்கொட, பெந்தர ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக் கிச்சூடு, கொள்ளை உள் ளிட்ட பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்பு டைய சந்தேகத்தில் பண் டாரகம விகாரையின் தேரர் கைது செய்யப்பட்டார்.

# மத்திய மாகாணத்தில் இரண்டு சுகாதார பணிப்பாளர்கள்

மத்திய மாகாணத்திலுள்ள சுகாதார சேவைகளுக்குப் பொறுப்பாக இர ண்டு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள் ளனரென்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டி யுள்ளது.

இந்த விடயம் சுகாதார அமைச்சு அதிகாரியின் கவனத் துக் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் எந்த விதமான சாதக மான பதிலும் இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை என்று அர சாங்க மருத்துவ அதிகாரிகளின் சங்க உதவிச் செயலாளர் டாக்டர் நவின் டி சொய்ஸா கூறினார்.

# அழிந்துபோன பிரதேசத்தின் அபிவிருத்திக்கு தனியார்துறையின் பங்களிப்பும் அவசியமானது

## - சந்திரகுமார் எம்.பி.



முப்பது வருட யுத்தத்தின் அழிவுகளை சுமந்து அழிந்து போன பிரதேசத்தை மீளவும் கட்டியெழுப்ப தனியார் துறை யினரின் பங்களிப்பும் அவசியமா னது என பாராளுமன்ற உறுப்பி னரும் குழுக்களின் பிரதித் தலை வருமான மு.சந்திரகுமார் தெரிவ-ித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ் சுண்டிக்குளி தெற்கு கிறீன் கிங்ஸ் சன சமூக நிலைய கட்டித்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில்

அமரர் டேவிற் அல்வின் ஞாபகார்த்தமாக அவரது குடும் பத்தினர் முப்பது மூன்று இலட்சம் ரூபா செலவில் கிறீன் கிங்ஸ் சன சமூக நிலையத்திற்கு ஒரு அழகான கட்டிடத்தினை கட்டிக் கொடுத்தமை முன்மாதிரி-யான வரவேற்கத்தக்க விடயம் இவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய குடும்பங்களும் பாதிக் கப்பட்ட பிரதேசங்களின் அபி விருத்தியில் பங்குகொள்ள வேண்டும்.


யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் புலம்பெயர் நாடு ஒன்றி லிருந்து இங்கு வருகை தந்து இந்த பிரதேசத்தின் அபிவிருத்தி யில் பங்கெடுக்கும் அளவுக்கு இயல்பு சூழல் தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

இந்தச் சூழலை நாம் மேலும் வலுப்படுத்தி எமது மக்களினது வாழ்வை மேம்படுத்தி எமது பிரதேசத்தினது அபிவிருத்தியை முன்னேற்றகரமான நிலைமைக்கு கொண்டு செல்ல வேண்டும் என சந்திரகுமார் எம்.பி அங்கு குறிப் பிட்டார்.

ஒரு காலத்தில் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் இந்த நாட்டில் முன்னனியில் விளங்கிய பிரதேசம் இன்று கவலையளிக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது இந்த நிலைமையினை மாற்ற வேண்டிய பொறுப்பு எம் அனைவ ருக்கும் உண்டு அந்த பொறுப்பை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து மேற்கொள்கின்ற போது விரை வான முன்னேற்றகரமான நிலைமை க்கு எமது பிரதேசத்தை இட்டுச் செல்ல முடியும் எனவும் தெரிவ-ித்தார்

இந் நிகழ்வில் அமரர் டேவிற் அல்வின் அவர்களின் குடும்பத்தினர், சன சமூக நிலைய உறுப்பினர்கள், பொது மக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# தூக்குத்தண்டனை எதிர் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை குற்றவா-ளிகள் மீதான வழக்கு விசா ரணை மீண்டும் நேற்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளான முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோ ருக்கு தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இத்தூக்கு தண்டனையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட் டுள்ள வழக்கு தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

இவ்வழக்கின் தீர்ப்பு இன்று அறிவிக்கப்படும் என ஏற்கனவே கூறப்பட்டிருந்த நிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட வழக்கு விசாரணையை உச்ச நீதிமன்றம் எதிர்வரும் 24ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

# வழிபாட்டு இடங்கள் தாக்கப்படுவதற்கு சென்னையில் எதிர்ப்பு



இலங்கையில் சிறுபான்மையின ருக்கு எதிரான போக்கிற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும் என்று கூறி சென்னையில் சர்வமதத் தலைவர்கள் பங்குபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இஸ்லாமிய, இந்து, கிறுத்துவ மத வழிபாட்டுத் தலங்கள் தொடர்ந்து தாக்கப்படுவதாகவும், அழிக்கப்ப டுவதாகவும் சென்னையில் நடை பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கூறுகிறார்கள்.

அப்படியான ஒரு போக்கு நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காவே அனைத்து மத தமிழ் மக்கள் மன்றம் எனும் அமைப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப் பாட்டத்தை நடத்தியது.

தமிழக ஆயர் பேரவைத் தலை வர் பேராயர் ஏ.எம். சின்னப்பா இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை யேற்றிருந்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், தமிழ் நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழ கத்தைச் சேர்ந்தவர்கள், இந்திய தௌஹீத் ஜமாத் அமைப்பினர், தென்னிந்திய திருச்சபையின் தலை வர், மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் உறுப்பினர்கள், மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் கத்தோலிக்கத் திருச்சபை வழிபாட்டுத் தலங்கள் சேதப்படுத்தப்படுவது ஏற்கனவே போப் பெனடிக்ட் அவர்களின் கவனத்துக்கு கொண்டு செலப்ப பட்டுள்ளது என்றும் இந்த ஆர்ப் பாட்டக் கூட்டத்தில் தெரிவிக் கப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை-னயில் ஐ.நா தலையிடவும், அவர் கள் அனைத்துரிமைகளை யும் பெற்று வாழும் வகையில் அரச-ியல் தீர்வு உருவாகவும் இந்தியா பல்வேறு தளங்களில் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கோரினர்.

# குழந்தைகள் நாயுடன் விளையாடலாம்

குழந்தைகளை, நாய்களோடு சேர்ந்து விளையாடவிட்டால், பல்வேறு தொற்றுநோய்களிடமிருந்து குழந்தைகளை பாதுகாக்க லாம் என்பது ஆய்வின் மூலம் தெர-ியவந்துள்ளது.

குழந்தைகள் நலன் தொடர்பாக, அமெரிக்காவிலிருந்து வெளிவரும் பீடியாட்ரீக்ஸ் ஜர்னலில், இந்த ஆய்விற்கான முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

அதன்படி, நாய்களுடன் நெருங் கிப் பழகும் குழந்தைகளுக்கு காதுகளில் ஏற்படும் தொற்றுகள், சுவாசப் பாதையில் ஏற்படும் தொற்றுகள் உள்ளிட்டவைகள் ஏற்படும் வாய்ப்பு குறைவாக உள்ளதாகவும், மேலும் அவர்க ளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கவும் செய்வதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# (அமிர்தலிங்கம் கொலையுண்டு....)


(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கையில், இலங்கை யில் தமிழ் இளைஞர்களின் வன் செயல் இயக்கமே இல்லை யென்று அடியோடு மறுத்தார். "இன்னும் பத்து வருடங்களில் சுதந்திரமும் இறைமையும் மிக்க தனிநாடொன்றினை இலங்கைத் தமிழர்கள் ஈட்டுவார்கள்" என்று அதே மாதம் மதுரையில் உரையாற் றுகையில் கூறினார். ஆனால் பத்து வருடங்கள் கழிந்த பின்னர் 1989ஆம் ஆண்டு புலிகளால் அமிர்த லிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார். இலங்கையில் தமிழ் இளைஞர்களின் வன்செயல் இயக்கமே இல்லை யென்று கூறிய அமிர்தலிங்கம், பத்து வருடங்களில் தனித்தமிழீழம் கிடைத்துவிடு மென்று கூறிய அமிர்தலிங்கம் தனித்தமிழ் நாட்டை உருவாக்கு வதற்காக இலங்கையில் ஆயுதமேந்திய புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1975, 76ஆம் ஆண்டுகளில் தனித் தமிழீழம் பற்றியும், ஆயுதப் போராட்டம் பற்றியும் பேசியவர் அமிர்தலிங்கம். ஆனால் 1980களின் ஆரம்ப வருடங்களில் இவற்றுக்கு எதிரான கருத்துகளை வெளியிடத் தொடங்கினார். இதனால் அவருக்கு மரண தண்டனை எச்சரிக்கை விடுக்கப் பட்டிருந்தது.

1982ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஐந்தாம் திகதி அமெரிக்காவின் புறநகரப் பகுதியான நனுஎட் என்ற இடத்தில் உலகத் தமிழர் மாநாடு நடைபெற்றது. இக் கூட் டத்தில் அமிர்தலிங்கமும் கலந்து கொண்டார். நாடு கடந்த இடைக் காலத் தமிழீழ அரசாங்கம் அமைக்கும் பிரேரணை அங்கு முன்வைக்கப்பட்டபோது அதனை எதிர்த்து அமிர்தலிங்கம் பேசினார்.

"தமிழீழ இராஜ்யம் உருவாகும் என்பது நிச்சயமானால் - ஆகக் குறைந்தது ஐம்பது சதவீதமாவது அது நிறைவேறுமென்பது நிச்சய மென்றால் அந்த ஆபத்தை நாம் எதிர்கொள்ளலாம். இலங்கை வாழ் தமிழ் மக்களின் உயிர்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவன் நான். விடுதலையை அனுபவிப்பதற்கு மக்களே உயிருடன் இருக்க மாட்டார்கள் என்றால் அந்த விடு தலையால் என்ன பயன்? பங்களா தேஷ் பிரிவினையைப் பலரும் உதாரணமாகச் சுட்டிக் காட்டுகின் றனர். அங்கு முப்பது இலட்சம் மக்கள் கொல்லப்பட்டார்கள். இலங்கை யில் வாழும் தமிழ் மக்களின் மொத்தத் தொகையும் அதுதான்" என்றார் அமிர்.



# வாக்காளர் இடாப்பும் வடக்கு மக்களும்

தற்போது 2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு புதுப்பித்தல் பணி நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது. வாக்காளர் இடாப்பு புதுப்பித்தல் என்றால் என்ன என்பதை ஒவ்வொருவரும் சரியாகப் புரிந்துகொள்வது அவசியம். குறிப்பிட்ட ஆண்டின் ஜுன் மாதம் முதலாம் திகதி முதல் சுமார் ஒன்றரை மாதங்கள்வரை இப்பணி தொடர்கின்றது. தேர்தல் திணைக்களத்தால் இதற்கான படிவம் கிராம சேவை அலுவலகர்களூடாக சில விசேட ஏற்பாடுகள் மூலம் தேர்தல் திணைக்களத்தால் நியமிக்கப்படும் கணக்கெடுப்பு அலுவலர் மூலமாகவும் ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப்படுகின்றது.

ஆண்டு தோறும் இவ்வாறு வாக்காளர் இடாப்பு திருத்தத்தின் போது எதிர்பார்க்கப்படுவது என்ன? ஏற்கனவே குறிப்பிட்ட முகவரியில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தவர்களின் பெயர்களை இவ்வாண்டும் பதிவு செய்வதும் பதினெட்டு வயதை இவ்வாண்டு ஜுன் மாதம் 1 ஆம் திகதி பூர்த்தி செய்தவர்களது பெயர்களையும் புதிதாகக் குறிப்பிட்ட முகவரியில் குடியிருப்பவர்களது பெயர்களையும் புதுப்பிக்கப்படும் வாக்காளர் இடாப்பில் உள்ளடக்குவதுமாகும்.

அத்துடன் குறிப்பிட்ட முகவரியில் பெயர் பதிவாகியிருந்தவர்களது பெயர்களை நீக்குவது என்பது குறிப்பிட்ட முகவரியில் கடந்த ஆண்டு பெயர் பதிவாகியிருந்தவர்கள் அம் முகவரியிலிருந்து வேறு முகவரியில் தமது வசிப்பிடத்தை மாற்றிக் கொள்ளும் போதும் அதுபோல பெயர் பதி விருந்தவர்கள் மரணிக்கும் போதுமாகும்.

இந்த நிலையிலே ஏற்கனவே குறிப்பிட்ட முகவரியில் பெயர்கள் வாக்காளர்கள் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருப்பவர்களும் பதினெட்டு வயதை இவ்வாண்டு ஜுன் மாதம் முதலாம் திகதியன்று பூர்த்தி செய்தவர்களும் புதிதாகக் குடியிருப்பாளர்களாக இருப்பவர்களும் தவறாது வாக்காளர் இடாப்பு புதுப்பித்தலுக்கான படிவத்தை உரிய அதிகாரிகளிடமிருந்து பெற்று தாமதமின்றி உரிய சகல கேட்கப்பட்டுள்ள விபரங்களையும்பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டும்.

அவ்வாறு செயற்படுவதன் மூலம் மட்டுமே புதிய அதாவது இவ்வாண்டுக்கான திருத்தப்படும் வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள முடியும். இவ்வாண்டில் புதுப்பிக்கப்படும் வாக்காளர் திருத்தப் படிவத்தைப் பூர்த்தி செய்து

> ❝ஏற்கனவே தமது பெயர்கள் வாக்காளர்கள் இடாப்பில் இடம்பெற்றிருந்தன. நடந்து முடிந்த தேர்தல்களில் நாம் வாக்களித்தோம். வாக்காளர் அட்டை கிடைத்தது. அதனால், அடுத்து வரும் தேர்தல்களிலும் எமக்கு வாக்களிக்கும் உரிமை உள்ளது. பல ஆண்டுகள் தொடர்ந்து நமது பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இருந்து வருவதால் இயல்பாகவே எமது பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இடம் பெறும் என்ற தப்புக்கணக்குடன் பலர் இருக்கின்றனர். தவறாகச் சிந்திக்கின்றார்கள்.❞

ஒப்படைக்காதவர்களது பெயர்கள் எக்காரணம் கொண்டும் புதுப்பிக்கப்படும் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் இடம்பெறாது என்பதை ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏற்கனவே தமது பெயர்கள் வாக்காளர்கள் இடாப்பில் இடம்பெற்றிருந்தன. நடந்து முடிந்த தேர்தல்களில் நாம் வாக்களித்தோம். வாக்காளர் அட்டை கிடைத்தது. அதனால், அடுத்து வரும் தேர்தல்களிலும் எமக்கு வாக்களிக்கும் உரிமை உள்ளது. பல ஆண்டுகள் தொடர்ந்து நமது பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இருந்து வருவதால் இயல்பாகவே எமது பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இடம் பெறும் என்ற தப்புக்கணக்குடன் பலர் இருக்கின்றனர். தவறாகச் சிந்திக்கின்றார்கள்.



ஏற்கனவே வாக்காளர் இடாப்பில் பெயர் இருந்தவர்களின் இவ்வாறான சிந்தனையும் அலட்சியமும் அவர்களை வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கிவிட அவர்களது வாக்களிக்கும் உரிமையை இழக்கவழி செய்கின்றது. கற்றவர்கள் கூட இவ்வாறான அலட்சியப் போக்கால் நடைமுறை விளக்கமின்மையால் வாக்குரிமையை இழந்து விட்ட சந்தர்ப்பங்கள் நிறையவேயுள்ளன.

அதனால் ஒவ்வோராண்டும் வாக்காளர் இடாப்பு புதுப்பிக்கப்படுவதற்காக விநியோகிக்கப்படும் தேருநர் இடாப்பு திருத்தம் என்ற படிவத்தை உரியபடி பூர்த்தி செய்து அதன் பொருட்டு தேர்தல் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ள கிராம சேவை அலுவலர் அல்லது விசேட கணக்கெடுப்பு அலுவலரூடாகச் சம்பந்தப்பட்ட தேர்தல் அலுவலகத்திற்குக் கிடைக்கச் செல்வதன் மூலமே நடப்பாண்டுக்கான வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள முடியும் என்பதை ஒவ்வொருவரும் தவறாது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

முன்னர் வேறு முகவரியில் வசித்த ஒருவர் அம்முகவரியில் கடந்த காலங்களில் வாக்காளராகப் பெயர் பதிந்திருந்த நிலையில் தற்போது வேறு புதிய முகவரியில் வசிப்பாரானால் அவர் தான் தற்போது வசிக்கும் முகவரியிலேயே வாக்காளராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதற்கான பூரண உரிமை அவருக்குண்டு.

அவ்வாறு புதிய முகவரியில் பெயரைப் பதிவு செய்து கொள்வதற்கு உரிய தேருநர் இடாப்பு திருத்தப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த அதாவது தான் ஏற்கனவே வசித்த முகவரியையும் அம்மாவட்டத்தையும் தவறாது கு[illegible]தல் வேண்டும்.

எவராவது தான் வசித்த முன்னைய முகவரியில் தன்பெயர் இடம்பெறும் என்று எதிர்பார்ப்பது தவறாகும். அம்முகவரியில் புதிதாகக் குடிந்தவரது பெயரே அம்முகவரியில் பதிவுக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

வாடகைக் குடியிருப்பாளருக்கும் தாம் குடியிருக்கும் வாடகை வீட்டு முகவரியில் வாக்காளராகப் பதிவு செய்து கொள்ளும் உரிமை சட்டப்படியுள்ளது. சில வீட்டு உரிமையாளர்கள் வாடகைக் குடியிருப்பாளர்களது பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதைத் தடுக்கும் சந்தர்ப்பங்களும் வெளிப்பட்டுள்ளன.

வாக்காளர் பதிவுக்கும், வீட்டுரிமைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இதைப் புரிந்து கொண்டு வீட்டுரிமையாளர்களும் குடியிருப்பாளர்களும் தேர்தல் சட்ட விதிகளை மதித்து செயற்பட வேண்டும்.

ஒருவர் நாட்டில் உள்ள ஏதாவது முகவரியில் மட்டுமே தனது பெயரை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்து கொள்ளும் உரிமை கொண்டவராவார். ஒன்றுக்கு மேற்பட்ட முகவரியில் பதிவு செய்வது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

தேருநர் இடாப்பு திருத்தப் படிவத்திலுள்ள பெயர்கள் உரிய அலுவலரால் சிபார்சு செய்யப்படாமைக்குப் பின்வரும் காரணிகள் ஏதுக்களாயமைகின்றன.

குறிப்பிட்ட ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி 18 வயதைப் பூர்த்தி செய்திராமை, முன்பு பதிவு செய்யப் பட்டிருந்த முகவரி, ஆண்டு மாவட்டம் என்பவற்றைக் குறிப்பிடாமை பதிவுக்காகச் சமர்ப்பித்த முகவரியில் பதிவை உறுதிப்படுத்தாமை, தேசிய அடையாள அட்டை, பிறந்த திகதி, ஆணா பெண்ணா என்ற விபரம் பிரதான குடியிருப்பாளருக்குள்ள உறவுமுறை பற்றிய விபரம் மற்றும் தேருநர் இடாப்பு திருத்தப்படிவம் (பி.சி.படிவம்) யில் உள்ள சத்தியம் செய்யும் அதாவது பிரதம குடியிருப்பாளரால் உறுதி செய்யப்பட வேண்டிய இடத்தில் ஒப்பமிடாமை போன்ற குறை பாடுகள் சிபார்சு செய்யப்படாமைக்கான பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

அத்துடன் குடியிருப்பாளர்கள் உரிய காலத்தில் குறிப்பிட்ட படிவத்தைப் பூர்த்தி செய்து கையளிக்காமையும் ஒரு காரணியாயமைகின்றது.

வாக்காளராகப் பதிவு செய்யப்பட வேண்டியதன்

முக்கியத்துவம் ஒவ்வொருவராலும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். நம்பி வாக்களித்தவர்கள் நாதியற்றவர்களாக நம்மை ஆக்கிவிட்டு எங்கெங்கோ சென்று சுகம் காணுகின்றனர் என்று அங்கலாய்ப்பும் பொதுமக்களிடம் உள்ளது.

இருப்பினும் கூட வாக்காளராகப் பதிவு செய்து கொள்வது அதாவது வாக்காளர் இடாப்பில் பெயர் இடம்பெறுவது வாக்களிப்பதற்காக மட்டுமல்ல. கடவுச் சீட்டு, தேசிய அடையாள அட்டை உட்பட முக்கிய ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும் போது வதிவிடத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஆதாரமாக வாக்காளர் பதிவு இடம்பெறுகின்றது.

அவற்றுடன் பாடசாலைக்குப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதற்கும் ,தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ள இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் இது போன்ற தனிப்பட்ட முக்கிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் முக்கிய ஆதாரமாக வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவு விளங்குகின்றது.

செம்மையாக ஒப்படைப்பதில் நம்மவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை என்பது கவலைக்குரியது. பொறுப்பற்ற தன்மையின் வெளிப்பாடாயமைந்துள்ளது.

பொதுமக்களின் குறிப்பாகத் தமிழ் மக்களின் அக்கறையீனத்துடன் இன, மத, மொழி மற்றும் பல ஏதுக்களும் அவர்களது பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்படவும் பதியாமல் விடப்படவும் காரணிகளாக இருப்பது பல சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டுள்ளது.

மலையகப் பகுதிகளில் சுமார் இரண்டு இலட்சம் தமிழ் மக்களது பெயர்கள் தகைமையிருந்தும் வாக்காளர் இடாப்பில் இடம்பெறவில்லையென்று கூறப்படுகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் எண்பதாயிரம் பெயர்கள் விடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அவ்வாறே மாத்தளை, கண்டி, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை உள்ளிட்ட தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் பெருமளவு தமிழர்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் பதியப்படாமலுள்ளமையும் அறிக்கையிடப்பட்டுள்ளன.


யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தேர்தல்

ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ் மக்களோ, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோரோ பொறுப்புடன் கவனம் செலுத்தவில்லை செலுத்துவதாகவுமில்லை.

இடப்பெயர்வு மற்றும் பல்வேறு காரணங்களால் யாழ்.மாவட்ட வாக்காளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டமை ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாயிருந்த போதும் யாழ்.மாவட்டத்தில் உள்ளகக் குடிபெயர்ந்த வாழும் பெருந்தொகையானவர்களது பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இடம்பெறாமையும் வெளிப்பட்டுள்ளது.

பொறுப்பற்ற இந்நிலைக்கு இடம்பெயர்ந்து வாடகை வீடுகளிலோ, தற்காலிக இடங்களிலோ வசிப்பவர்களின் பெயர்கள் பதியப்படாமை பிரதான காரணியாயுள்ளது.

வீட்டுரிமையாளர்கள் வாடகைக் குடியிருப்பாளர்களது பெயர்கள் வாக்காளர் இடாப்பில் பதிவாவதைத் தடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பதும் அதேபோல் பதிவு செய்யும் அதிகாரம் கொண்ட அதாவது படிவம் விநியோகித்துப் பெற்று சிபார்சு செய்யும் அலுவலர்கள் பலரும் கூட வீட்டுரிமையாளரின் செயற்பாட்டிற்கு உடந்தையாயிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளதாக குறை கூறப்படுகின்றது.




கவலைக்குரிய இந்நிலை சமூக நல நோக்கில் சிந்தித்துக் களையப்பட வேண்டும். வன்னி, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கொழும்பு உட்பட தமிழ் மக்கள் செறிந்து வாழும் பல தேர்தல் மாவட்டங்களில் பல்வேறு காரணங்களால் தமிழர்களது பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளப்படுவதும் நடைமுறையிலுள்ளது.

தமிழ் மக்களது பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இடம்பெறாது போவதால் சமூக ரீதியிலான இழப்புகளும் சிந்திக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் மாகாண சபைகள், மாநகர , நகர, பிரதேச சபைக-ளில் தமிழ் மக்கள் தமக்குரிய அரசியல் பிரதிநிதித்துவங்கள் இழக்கப்படுகின்றன. அரசியல் பிரதிநிதித்துவமற்ற சமூகம் அரசியல் அநாதைச் சமூகமே.

தமிழ் மக்களை அரசியல் அநாதைக-ளாக்கி செயலிழந்தவர்களாக, குரலெழுப்ப முடியாதவர்களாக ஆக்கும் ஆயுதமாக பிரதிநிதித்துவ இழப்புகள் அமைவதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு, வங்கியுடன் தொ[illegible]டைய ஆவணங்கள் போன்றவற்றை நிரப்பும் போது உரிய, சரியான விபரங்கள் கொடுபட வேண்டும். விபரங்கள் பிழைக்குமிடத்து அவை நிராகரிக்கப்படும் நிலை ஏற்படும். அதனால், மேற்குறிப்பிட்டவற்றைப் பெற விண்ணப்பிப்போர் அதற்கான விண்ணப்பப்படிவத்தை சரிபார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளும் வழக்கமுள்ளது. தமது விண்ணப்பம் நிராகரிக்கப்படக்கூடாது என்பதில் எவரும் அக்கறை காட்டுகின்றனர்.

ஆனால், இருப்பை உறுதிப்படுத்தும், தேர்தலில் வாக்களிக்கும் பல்வேறு தேவைகளுக்கு அவசியப்படும் வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவுக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து சரிபிழை பார்த்து

தொகுதிகள் பதினொன்று இருப்பதுடன் 1994 இல் பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இறுதித் தேர்தலில் வாக்காளர் எண்ணிக்கை குறைவைக் காட்டி அது ஒன்பதாகக் குறைக்கப்பட்டது.

எதிர்வரும் தேர்தலில் ஐந்து பேர் மட்டுமே யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படுவர் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. யாழ்.மாவட்டத்திலிருந்து அகற்றப்படும் நான்கு பிரதிநிதித்துவங்கள் குருணாகல் உள்ளிட்ட மாவட்டங்களும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

அதாவது யாழ்.மாவட்டத் தமிழர் பிரதிநிதித்துவம் அரைப்பங்கிற்கும் அதிகமாகக் குறைக்கப்படும் நிலை



தமிழ் மக்கள் மத்தியிலே அரசியல் ரீதியில் செயற்படும் பெருந்தொகை அமைப்புகளிலிருந்த போதும் தமிழ் மக்களை வாக்காளராகப் பதிவு செய்ய எழுச்சியூட்டும் ஒரு சிலவற்றையே காண முடிகின்றது.

சேனைப் பயிர்ச் செய்பவன் ஒரு முயற்சியுமின்றி அறுவடை செய்து பயன் பெற முயற்சிப்பது போன்று பெரும்பாலான அரசியல் அமைப்புகள் தேர்தல் காலத்தில் தமிழரின் வாக்குகளைப் பங்குபோட வாரிச் சுருட்டவரும் அவலநிலை மட்டுமே புலனாகிறது. இந்நிலை மாற வேண்டும். அரசியல் வாதிகளின் மூலதனம் பொதுமக்களின் வாக்குகளே. தமிழ் அரசியல்வாதிகளதும் தமிழ் அரசியல் அமைப்புகளதும் மூலதனம் தமிழர்களது. வாக்குகளே. தேர்தல் காலங்களில் வீடு வீடாக வாக்கு சேகரிக்க வரிந்து கட்டிக்கொண்டு செல்பவர்கள் வாக்காளர் பதிவின் அவசியம் தொடர்பிலும் வீடு, வீடாகச் சென்று விழிப்பூட்ட வேண்டிய கடப்பாடு நிறையவே கொண்டவர்கள்.

இவ்வாறான நிலையில் வாக்குரிமையைப் பெற்றுக் கொள்ளும் தகைமை பெற்ற ஒவ்வொருவரும் உரிய படிவத்தை உரிய அலுவலரிடமிருந்து பெற்று சரியான முறையில், முழுமையாகப் பூர்த்தி செய்து உரிய அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட படிவத்துடன் உள்ள பற்றுச் சீட்டையும் தவறாது பெற்றுப் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். ஏதாவது ஏதுவால் பெயர்பதிவாகாத போது பற்றுச்சீட்டைக் காட்டி நிவாரணம் பெற முடியும்.

எனவே இதுவரை உரிய தேருநர் இடாப்பு புதுப்பித்த படிவம் கிடைக்காதவர்கள் உரிய கிராம சேவை அலுவலரிடமோ, விசேட கணக்கெடுப்பு அலுவலரிடமோ இருந்து அதனைப் பெற்று பூர்த்தி செய்து கொடுப்பதுடன் பற்றுச் சீட்டையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அல்லது இது தொடர்பில் தமது பகுதிக்குரிய தேர்தல் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். உரிய காலத்தில் அதாவது உடன-டியாக இதில் கவனமெடுக்காது காலம் கடந்து சிந்திப்பதானது குதிரை ஓடியபின் இலாயத்தைப் பூட்டியதற்கு ஒப்பமாகும். நம்மவர்கள் உரிய கவனம் செலுத்துவார்களா?

ரி.மனோகரன்

# வீதி அகலமாக்கும் பணிகளால் மின் விநியோகம் தடைப்படும்

யாழ்ப்பாணத்தில் வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் யாழ்.பிராந்திய நிலையம் அறிவித்துள்ளது:

இதனடிப்படையில் புன்னாலைக்கட்டுவன், அச்சசெழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களில் நாளை (12.07.2012) வியாழக்கிழமை, (14.07.2012) சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும்.

கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசங்களில் (11.07.2012) இன்று புதன்கிழமை, (13.07.2012) நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை, எதிர்வரும் 15.07.2012 திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும்.

இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், தட்டார்தெரு பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, குருநகர், பாசையூர் ஆகிய இடங்களில் எதிர்வரும் (14.07.2012) சனிக்கிழமை, மறுநாள் (15.07.2012) ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பகிரங்க ஆன்மீகப் பேருரை

சர்வதேசசத்தியசாயிசேவாநிறுவனங்களின் தலைவர் டாக்டர் நரேந்திரநாத் ரெட்டி"தெய்வீகத்தின் உருவஅருவநிலைகள்" என்ற பொருளில் ஆற்றும் பகிரங்கஆன்மீகப் பேருரை நாளை (12ஆம் திகதி) வியாழக்கிழமைமாலை 4.00 மணிக்குயாழ் இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவிருக்கிறது.

வடபிராந்தியசத்தியசாயிசேவாநிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெறுகிறது.

மருத்துவரானநரேந்திரநாத் ரெட்டிஓமோன் சுரப்பிகளின் நோயியல் நிபுணராகஅமெரிக்காவில் பணியாற்றிவருகிறார். (க)

## நல்லூரில் கோழிக்குஞ்சுகள் விநியோகம்

வாழ்வு எழுச்சித்திட்டம் திவி நெகுமவின் கீழ் கால்நடைவளர்ப் புபிரிவின் மூன்றாம் கட்டமாக பதின் நான்குபயனாளிகளுக்குகோழிக் குஞ்சுகளை வழங்க நல்லூர் பிரதேசசெயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. பொருளாதார அபிவிருத்திஅமைச்சின் மூலம் ஒருவருக்குபத்து கோழிக்குஞ்சுகளும், கூடுகள் அமைப் பதற்காக ரூபா 6500வும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிகின்றது. வாழ்வாதார மேம்பாட் டுக்காக இவ் உதவி வழங்கப்படுகின்றது. (ப)

# உரை ஓவியம் நிகழ்வுக்கு

வவுனியா

வவுனியா தமிழ் சங்கத்தால் கடந்த ஞாயிற்று க்கிழமை வவுனியா வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய கலா மண்டபத்தில் நடத்தப்பட்ட உரை ஓவியம் நிகழ்வு அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளதுடன்

வவுனியாவில் சிறந்த கலைப் படைப்புக்களை வெளிக்கொணர இது உதவியுள்ளதாக வவுனியா மாவட்ட கலை ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்ற உரை ஓவியத்தில் கவிஞரான அ. சிவபாலசுந்தரன் கல்வியலாளர்களான உதயகுமாரன்இ திருமதி நிறைமதி எஸ்.எஸ் வாசன் மற்றும் எம். முகுந்தரதன் ஆகியோர் பங்கு கொண்டிருந்தனர்.

இதன்போது கவி வரிகளில் உரை ஓவியம் நிகழ்வுகளை நடத்தியதுடன் புதுமையான சில கவி வரிகளும் இலக்கியங்களுடன் தற்போதைய பாடல்வரிகள் கொண்டுள்ள தொடர்புகள் பற்றியும் எடுத்தியம்பப்பட்டிருந்தது.

எதிர்வரும் காலங்களிலும் வவுனியா தமிழ் சங்கம் ஞாயிற்றுக் கழமைகளில் பல இலக்கிய நிகழ்வுகளை நடத்தவுள்ளதாக வவுனியா தமிழ் சங்கத்தின் தலைவர் தமிழருவி த. சிவகுமாரன் தெரிவித்தார்.

# அளவெட்டி, கும்பழாவளை பாலர் கல்விச்சோலை விளையாட்டு விழா

(அளவெட்டி)

அளவெட்டி கும்பழாவளை பாலர் கல்விச்சோலை சிறார்களுக்கான வருடாந்த விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு ஆசியுரையினை கும்பழாவளை பிள்ளையார் ஆலய பிரதமகுரு சோம.குமாரதாஸ சர்மா வழங்கினார்.

பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி இந்திரமோகன் தம்பதிகள் கலந்து சிறப்பித்தனர்.

சங்கீத பூ்ணம் வீ.கே.நடராஜா், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் க.அருளம்பலம் அவர்கள், அளவெட்டி மத்தி கிராம அலுவலர் திரு முருகதாஸ், கும்பழாவளை பிள்ளையார் ஆலய தொண்டர் சபைத்தலைவர் சனந்தன் மற்று முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் என பெருந்திரளானவர்கள் , இதில் கலந்துகொண்டு மழலைகளின் விளையாட்டு நிகழ்விற்கு சிறப்புச் சேர்த்தனர்.

# இசை, நடன பயிற்சிப்பட்டறை

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும்; யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகமும் இணைந்து நடாத்தும் இசை; நடன பயிற்சிப் பட்டறை ஓகஸ்ட் 16ம், 17ம், 18ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தியாவில் தத்தம் துறைகளில் முத்திரை பதித்த கலைஞர்களான பரதநாட்டிய கலைஞர் அலமேலு வல்லி, கர்நாடக இசைப் பாடகர்களான ஸ்ரீமத் ரி.எம். கிருஸ்ணா, உன்னிகிருஸ்ணன் ஆகிய கலைஞர்கள் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

இவர்களினால் துறைசார் அரங்கப்பயன்பாடு, ஆற்றுகை நுணுக்கங்கள் மற்றும் நுட்பங்கள் தொடர்பான பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன.

துறைசார் ஆர்வமுள்ள (பாடசாலை மாணவர்கள் தவிர்ந்த) இசை நடன கலைஞர்கள், இசையைப்பயின்று கொண்டிருப்பவர்களுக்கும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் மிக்க பயனுடையதாகும்.

பங்குபற்ற விரும்புவோர் 021.3202990 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது நேரிலோ திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நெடுந்தீவுக்கான படகுபோக்குவரத்து துண்டிப்பு: பொது மக்கள் அவதி

நெடுந்தீவுக்கானவீதிஅபிவிருத்திஅதிகாரசபைநடாத்தும் பயணிகள் படகுச் சேவைகடந்த மூன்று தினங்களாகதுண்டிக்கப்பட்டுள்ளதால் பயணிகள் கஷ்டமடைந்துள்ளதாகக் கூறுகிறார்கள்.

குமுதினிபடகுபழுதடைந்துள்ளதாலும் வடதாரகைபோதிய அளவுக்குமக்களுக்கானசேவையைவழங்குவதாக இல்லையெனவும் குமுதினிபழுதடையும்போதுவடதாரகை மேலதிகசேவையில் ஈடுபடுத்தப்படவேண்டும் எனவும் தெரிவிக்கும் பொதுமக்கள், தனியார்படகு தினமும் ஒருசேவையைமேற்கொள்ளும்போது அரசபடகுவழமை போன்று இரண்டுசேவையைமேற்கொள்ளமுடியாதுள்ளதெனக் கூறுவதுநியாயமற்றதுஎனவும் கூறுகின்றனர்.

அரசபடகுஒன்றுபழுதடையும்போதுமற்றயபடகுமேலதிகமாகஒருசேவையைமேற்கொண்டால் அது மக்களின் வழமையானபோக்கு வரத்துச் சேவைசீராகநடக்கக் கூடியதாக இருக்கும் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள். தற்சமயம் குமுதினிபடகுபழு தடைந்ததில் மக்கள் தனியார் படகைமட்டுமே நம்பி இருக்க வேண்டியுள்ளது. (ப)

# வட மாகாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுடன் கலந்துரையாடல்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமனம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் கல்வியற்கல்லூரி ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மகளிர் இந்து கல்லூரியில் நடைபெற்றுள்ளது.

வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் வடமாகாண அளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பிரதிச் செயலாளர் விக்னேஸ்வரன், அளுநரின் செயலாளர் இளங்கோவன் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தக் கலந்துரையாடலில் வட. மாகாணத்திற்கு நியமனம் வழங்கப்பட்ட 58 தொழில்நுட்ப ஆசிரியர்களும் 190 கல்வி யற் கல்லூரி ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

# சைக்கிள்-மோட்டார்சைக்கிள் விபத்து

நாவலர் வீதியில் பிறவுன் றோட் சந்திக்கண்மையில் நேற்றுகாலை 11.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தொன்றில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மின்சார சபை தலமைஅலுவலகத்தில் இருந்துசைக்கிளின் தனது அலுவலகம் நோக்கிவந்துகொண்டிருந்தவர் தனதுஅலுவலகத்திற்கு திரும்பும் பொழுதுபின்னால் வந்த மோட்டார் சைக்கிளினால் இடிக்கப்பட்டுகாயமடைந்தார்.

மின்சார சபை ஊழியரானபருத்தித்துறையைச் சேர்ந்த வே. ஜெகதீஸ்வரன் (வயது 53) என்பவராவார். அவர் சிகிச்சைக்காகயாழ் போதனாவைத்தியசாலைக்குஅழைத்துச் செல்லப்பட்டார்.

# ஐந்தாம் ஆண்டுபுலமைப்பரிசில் பரீட்சை ஆறு மாணவர்கள் ஜப்பான் பயணம்

(பருத்தித்துறை)

கடந்தஆண்டு (2011) நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுபுலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாகஅதிகபுள்ளிகளைப் பெற்ற ஆறு மாணவர்களை ஜப்பானில் நடைபெறவுள்ள 24ஆவது நேற்காசியபசுபிக் சிறுவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காககல்வி அமைச்சுஅனுப்பிவைக்கவிருக்கிறது.

இந்தமாநாடு இம்மாதம் 13ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதி-வரையிலான இருவாரகாலம் நடைபெறவுள்ளது.

கொழும்புறோயல் கல்லூரியைச் சேர்ந்தநளீம் ஷாபிக் அஹமட் (195 புள்ளிகள்), இசான் சுமணபால (194 புள்ளிகள்) கொழும் புவிசாகாகல்லூரியைச் சேர்ந்த ஓஷாதிபொன்சேகா (195 புள்ளிகள்) வியங்கிரணவீர (195 புள்ளிகள்) டினிதி இவான்டி (194 புள்ளிகள்),முல்லைத்தீவுவிஸ்வமடுமகாவித்தியாலயத்தைச் சேர்ந்ததிசோதூரகவன் பரமேஸ்வரன் (195 புள்ளிகள்) ஆகியமாணவர் களே ஜப்பான் செல்வதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளார்கள். அனைவரும் நாளை (12ஆம் திகதி) கொழும்பிலிருந்து பயணமாவார்கள் எனகல்வி அமைச்சுஅறிவித்துள்ளது. (01-தி)

# மாற்றுத் திறனாளிகளின் 'மெல்ல கற்றல்' 100 ஆவது ஆண்டு நிகழ்வுகள்

மாற்றுத் திறனாளிகளின் "மெல்ல கற்றல்" 100 வது ஆண்டு நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை தேசிய கல்வியற் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளதாக காசநோய் வைத்திய நிபுணர் சி. யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் "நில்லாத காலத்தில் கல்லாத கல்வி கல்லான கல்வி" எனும் தொனிப்பொருளில் காசநோய் வைத்திய நிபுணர் சி.யமுனானந்தா சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில், மாற்றுத் திறனாளிகள் மற்றும் விசேட தேவையுடைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# திருட்டில் ஈடுபட்ட நபருக்கு சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியிலுள்ள வீடொன்றை உடைத்து திருட்டில் ஈடுபட்ட ஒருவருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை ஒரு வருடகால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த (15.12.2011) ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி கொக்குவில் பகுதியிலுள்ள வீட்டை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த இந்நபர் 884,000 ரூபா பெறுமதியான இலத்திரனியல் சாதனங்களைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு பின்னர், பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இந்நபரின் மீது வழக்கு தொடரப்பட்டு இவர் குற்றவாளியென அடையாளம் காணப்பட்ட நிலையில் இந்நபருக்கு ஒருவருட சிறைத்தண்டனை விதித்து, யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராசா தீர்ப் பளித்தார்.

33. சதுரவடிவ காணி ஒன்றைச் சுற்றி 28 கம்பங்கள் தெரிந்தன எனின் அக்காணியின் ஒரு பக்கத்தில் நின்று பார்க்கும் போது எத்தனை கம்பங்கள் தெரியும்?

34. பெட்டி ஒன்றில் 5 சிவப்பு நிற மாபிள்களும், 7 மஞ்சள் நிற மாபிள்களும், 3 வெள்ளை நிற மாபிள்களும் இருந்தன. மஞ்சள் நிற மாபிள் ஒன்றை பெறுவதற்கு பெட்டியில் இருந்து ஆகக் குறைந்தது எத்தனை மாபிள்களை வெளியே எடுக்க வேண்டும்?

35. பண்ணை ஒன்றில் உள்ள ஆடுகளினதும் கோழிகளினதும் எண்ணிக்கை 50 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 120 எனின் அங்குள்ள ஆடுகள் எத்தனை?

36.

| |
|---|
| ஆ, கா, ம், சி |
| ர, ல, ய, ன், ரு |
| ப், வ, ர, ப, ட் |

அருகில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு உருவாக்கக் கூடிய மன்னன் ஒருவனின் பெயர் என்ன?

37. | க் | ச் | கு | சி | தீ | அருகில் உள்ள சொற்களைக் கொண்டு உருவாக்க கூடிய சொல் எது?

38. தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியான சொல்லை தெரிந்து பந்தியை பூரணப்படுத்துக.

பிரசன்னா இசையில் மிகுந்த விருப்பத்தைக் கொண்டுள்ளான். ஆகவே பெற்றோர்கள் அவனை அதற்காக 38) .......................... [(1) பயிற்சியளிப்பதற்கு, (2) உற்சாகப்படுத்துவதற்கு (3) வழிப்படுத்துவதற்கு]

இசை வகுப்பிற்கு அனுப்பினர். பிரசன்னா மிகவும் விருப்பத்துடன் வகுப்பிற்கு தவறாமல் சென்று வயலின் 39) ...................... [(1) பாட (2) வாசிக்க (3) அடிக்க]

நன்றாகக் கற்றான். அவனுடைய பெற்றோர் தமது மகனைப் பற்றி மிகவும் 40) ....................... [(1) மகிழ்ச்சி (2) கவலை (3) இரக்கம்] காட்டினர்.

---

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சை - 2012**
**தமிழ்மொழியும் இலக்கியமும் III (இரண்டு மணித்தியாலம்)**

**முக்கியம்:** அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மட்டும் (1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும்) விடை எழுதுக. **(80 புள்ளிகள்)**

**(01) சுருக்கமான விடை தருக.**

1. "குடிதழீஇக் கோல் ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"
யாருடைய பாதங்களை உலகத்தார் பொருந்தி நிற்பர்?

2. "ஈழம் ஒருகால் மிதியா வருமே நங்
கோழியர் கோக் கிள்ளி களிறு"
இங்கு கிள்ளி என்று குறிப்பிடப்படுபவன் யார்?

3. "பல்லைத்தான் றிறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்றான் பண்ணி னானே"
இங்கு பதுமத்தான் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

4. "நாங்கள் மனிதர்" என்ற நூலில் இடம்பெறும் "முன்னோக்கு"
என்ற கவிதையை எழுதியவர் யார்?

5. "இந்தக் குழல் வேதப்பொருள் பாடுகிறது. இது தெய்வ சுருதி சுருதிச்சுவை அமுதம்"
இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?



6. பத்தும் பசி வந்திடப் பறந்துபோம் எனக் கூறியவர் யார்?
இக்கூற்று இடம்பெறும் நூல் எது?

7. "நறுந்தாமரை விரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளனறன்னை ஆங்கு"
இங்கு நன்னுதலே அன்னாள் யார்?

8. "நீ வேண்டுமானால் பாரேன் எழும்பூர் ஸ்டேஷனில் வந்து இருக்கப் போகிறார்" - இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது.?

9. பழமொழிப் போதனை என்னும் நூலை இயற்றியவர் யார்?

10. வ.வே.சு. ஐயரின் சிறந்த சிறுகதைகள் இரண்டினைக் குறிப்பிடுக. **(2x10=20 புள்ளிகள்)**

(02) பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன் - நாணிப்
**பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல**
**வருஞ்செல்லும் பேருமென் நெஞ்சு.**

பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம் - **தேரின்**
**சிறியார் சிறுமையுந் தோன்றாதாம்**
நல்ல பெரியார் பெருமையைச் சார்ந்து

**மனத்தில் ஆழத்தில் பீதி அது பாட்டிற்குப் புழுப்போலத் துளைத்துக் கொண்டே இருந்தது.** மேலே மட்டும் சமாதானம். கொஞ்சநேரத்திற்கு ஒருதரம் அந்தத் திகில் மேல்மட்டத்திற்கு வந்து தலையெடுக்கும் உடம்பு பதறும் நெஞ்சு; உலரும், அடிவயிறு கலங்கும்; முகம் விகாரமடையும்; மறுபடியும் மெதுவாகச் சமாதானத்தின் பலம் அதிகமாகும். பயத்தைக் கீழே அமுக்கிவிடும்.

கோயில் இருக்கு, கோழிக்கூண்டு மாதிரி பேருக்கு இரண்டொன்று இருக்கு. அதிலே பூசையா, புனஷ்காரமா ஒண்ணும் கிடையாது. **நம்ம கங்கைகொண்ட சோழபுரம் கோயில்தான் கோயில். பெரிய கோட்டை மாதிரி ஊரிலே பாதியிலேயே இருக்கு அந்தத் தஞ்சாவூர்க் கோயிலைத்தான் எப்படிக் கட்டியிருக்கிறார்.** (20 புள்ளிகள்)

(3) "நாட்டார் பாடல்கள் மக்கள் வாழ்வின் பல்வேறு கட்டங்களிலும் பாடப்படுகின்றன"- இக்கூற்றை நீர் கற்ற நாட்டார் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. **(15 புள்ளிகள்)**

(4) கல்வியைப் பயன்படுத்தும் முறை பற்றி "கல்வியே அழியாச் செல்வம்" என்ற கட்டுரையில் திருமூலர் கூறிய கருத்துக்கள் எவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறதென்பதை விளக்குக. **(15 புள்ளிகள்)**

(5) தனிப் பாடல்களில் இரவு நீடித்தமை பற்றித் தலைவி இரங்குவதை ஒப்பிலாமணிப்புலவர் கூறும் விதத்தை விளக்குக. **(10 புள்ளிகள்)**

(6) "ஒரு பதிவிரதையின் சரித்திரம்" என்ற சிறுகதையில் காணப்படும் படிப்பினைகள், விழுமியக் கருத்துக்கள் என்பவற்றை எடுத்துக் காட்டி விளக்குக. **(10 புள்ளிகள்)**

(7) 1. மலைக்கும் சந்திரனுக்கும் உள்ள ஒற்றுமையினைக் காளமேகப் புலவர் எவ்வாறு எடுத்துக் காட்டுகிறார்?
2. "கடற்புறம்" கவிதையில் மீனவப் பெண்ணின் வாழ்வில் இருளகன்று ஒளி பிறக்க வேண்டும் என்ற தனது நோக்கத்தை நிறைவேற்றக் கவிஞர் கையாண்டுள்ள உத்திகள் எவை? **(10 புள்ளிகள்)**

நீங்கள் எழுதி அனுப்பும் விடைகளில் மிகக்கூடிய மதிப்பெண் பெறும் விடைகளை எழுதியவருக்கு பரிசுகள் காத்திருக்கின்றன.

31.இலிங்கமில் இனப்பெருக்க முறை - உதாரணம் என்ற பின்வரும் இணைப்புகளுள் எது தவறானது?
(1) Clostridium - அகவித்தி (2) Aspergillus - தூளியம்
(3) Allomyces - இயங்கு வித்தி (4) Mucor - அலைவில் வித்தி (5) Marchantia - கோரகம்

32.மனிதனின் உடற்கலம் ஒன்றின் கருவினுள் ஓ நிறமூர்த்தம் ஒன்று மேலதிகமாகக் காணப்படும் நிலை பின்வருவனவற்றுள் எது?
(1) Klinefelter சகசம் (2) Down சகசம்
(3) Turner சகசம் (4) Huntington நோய் நிலை (5) Cystic Fibrosis நிலை

33.கருமை நிற சுண்டெலிகள் வெண்ணிறமுள்ள சுண்டெலிகள் இனங்கலக்கப்பட்ட போது F1 தோன்றலில் கிடைத்த எல்லா சுண்டெலிகள் கருமை நிறத்தைக் கொண்டிருந்தன. F1 தோன்றல் ஆண் சுண்டெலிகள் பெண் சுண்டெலிகள் இணங்கலக்கப்பட்ட போது F2 தோன்றலில் 18 கருமை நிற சுண்டெலிகளும் 06 கபிலநிற சுண்டெலிகளும் 08 வெண்ணிற சுண்டெலிகளும் தோன்றின.
மேற்கூறிய பெறுபேறுகளின் அடிப்படையில் பின்வரும் முடிபுகளுள் தவறானது எது?

(1)சுண்டெலிகளின் கபில நிறம் பின்னடைவான இயல்பாகும்
(2)இது மேலாட்சிக்கு ஓர் உதாரணமாகும்
(3)முதல் இணங்கலப்பில் பயன்படுத்திய கருமை நிற சுண்டெலிகள் பல்லினநுகமுள்ளவை
(4)இங்கு பரம்பரையலகுகளின் இடைத்தாக்கம் ஏற்பட்டுள்ளது
(5)எலிகளின் தோலின் நிறத்தைத் துணிவதில் குறைந்த பட்சம் இரு பரம்பரையலகுகள் சம்பந்தப்பட்டுள்ளன.

34.தலைமுறையுரிமை பற்றிய தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க

(1) பரம்பரையலகுகளின் தொடுப்பை முதன்முதலில் கண்டுப்பிடித்தவர் T.H. Morgan ஆவார்
(2) தொடர்ச்சியான மாறல்களைக் காட்டும் இயல்புகள் எப்பொழுதும் பல்பரம்பரையலகுகளால் தீர்மானிக்கப்படுகின்றன.
(3) ஒருங்காட்சி சம்பந்தப்பட்ட தலைமுறையுரிமையில் இடைத்தோற்றவமைப்புகள் இல்லை
(4) துவிக்கலப்புப்பிறப்புச் சோதனை இனங்கலத்தலின் போது 1 : 1 : 1 : 1 என்றும் விகிதத்தில் நான்கு வகைத் தோற்றல்கள் தோற்றுவிக்கப்படும்.
(5) சோதனை கலப்புப்பிறப்பின் தோன்றல்களில் ஆட்சியான ஓரினநுகத் தனியன்கள் காணப்படுவதில்லை

35.மூலக்கூற்று உயிரியல் தொழில் நுட்பத்தில் கையாளப்படும் சில படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - கலங்கள் இரசாயனப் பொருள் மூலம் கரையச் செய்தல்
B - அடர்த்திப்படித்திறன் மையநீக்கல்
C - ஏகாரோசு ஜெல் மின்னயனம்
D - Southern முறையிலான ஒற்றியெடுத்தல்
E - இலிகேசு நொதியத்தினால் DNA துண்டங்களை பொருத்தச்செய்தல்
F - என்டோநியூக்கிளியேசு நொதியத்தினால் DNA மூலக்கூறுகளை சிறு துண்டங்களாக உடையச் செய்தல்
இவற்றுள் எவை னுயே விரலடையாளத் தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

(1) A,B,C,D மாத்திரம்
(2) B,C,D,E மாத்திரம்
(3) C,D,E,F மாத்திரம்
(4) A,B,C,D,F மாத்திரம்
(5) A,B,C,D,E,F யாவும்

36.Darwin - Wallace கொள்கையின் முக்கிய அம்சங்கள் சில பின்வருமாறு
A - உயர் இனப்பெருக்க ஆற்றல் B - வாழ்க்கைப் போராட்டம்
C - மாறாக் குடித்தொகை அளவு D - தக்கனபிழைத்தல்
E - குடித்தொகையில் காணப்படும் பல்வகைமை F - மிகை உற்பத்தி

இவற்றுள் எவை Darwin - Wallace என்பவற்றின் அவதானங்களாக் கருதப்படுகின்றன.
(1) A,B,C,D மாத்திரம் (2) A,C,E,F மாத்திரம்
(3) A,B மாத்திரம் (4) E,F மாத்திரம்
(5) B,D மாத்திரம்



21. 21ஆம், 22ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட தொடர்பை அவதானித்து விடையைத் தெரிவு செய்க.
21. புறா → பறவை எனில் நெல் → [ ]
1. விதை 2. பருப்பு 3. தானியம் 4. மணி

22. வீடு → அத்திவாரம் எனில் மரம் → [ ]
1. வேர் 2. கிளை 3. பூ 4. தாவரம்


23ஆம், 24ஆம் வினாக்களில் கட்டமிடப்பட்ட சொல்லுக்கு பொருத்தமான வேறு ஒரு சொல்
23. அந்த ஊரில் கழனிகள் நிறைய இருந்தன
1. வயல்கள் 2. தோட்டங்கள் 3. குளங்கள் 4. ஆறுகள்

24. பொய்கையில் தாமரைப் பூக்கள் பல மலர்ந்திருந்தன.
1. கடல் 2. வயல் 3. நதி 4. குளம்


25.மழை பெய்தால் நிகழக் கூடியது
1. வெள்ளப்பெருக்கு ஏற்படும் 2. மக்கள் துன்பம் அடைவர்
3. பயிர்கள் செழித்து வளரும் 4. வரட்சி அதிகரிக்கும்

26. வீடு தீப்பற்றினால் உடனடியாகச் செய்ய வேண்டியது
1. கூக்குரலிட்டு கத்துதல் 2. எரியும் இடத்தில் எண்ணெய் ஊற்றுதல்
3. எரியும் இடங்களில் தண்ணீர் ஊற்றுதல் 4. எரியும் இடங்களில் ஓலையை போட்டு மூடுதல்

27ஆம், 28ஆம் வினாக்களில் பொருத்தமான உருவை தெரிவு செய்க.
27.பின்வரும் பிராணிகளில் முலையூட்டி அல்லாதது



28.பின்வரும் விலங்குகளில் மிக வேகமாக ஓடக் கூடியது



29ஆம், 30ஆம் வினாக்களில் மிகப் பொருத்தமான வாக்கியத்தை தெரிவு செய்க.
29. 1. பொதுச் சொத்துக்கள் எம்மை பேணிப் பாதுகாக்க வேண்டும்
2. பொதுச் சொத்துக்களை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும்
3. பொதுச் சொத்துக்களையும் எம்மையும் பிறர் பாதுகாக்க வேண்டும்.

30. 1. மாலை நேரத்தில் மலர்ந்த தாமரைப் பூக்களால் குளம் அழகாக இருந்தது.
2. காலையில் மலர்ந்த ஒரு தாமரைப் பூவால் குளங்கள் அழகாக இருந்தது
3. காலையில் மலர்ந்த தாமரைப் பூக்களால் குளம் அழகாக இருந்தது.

31 தொடக்கம் 35 வரையான வினாக்களுக்கு விடையை எழுதுக.

31. 618 புத்தகங்களை 3 பாடசாலைகளுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டால் ஒரு பாடசாலைக்கு கிடைக்கும் புத்தகங்கள் எத்தனை

32. தாயினதும் மகளினதும் வயதின் கூட்டுத்தொகை 32 வருடங்கள் ஆகும். தாய் மகளை விட 3 மடங்கு வயது அதிகமானவர் எனின் தாயின் வயது யாது?

11. "ஆலையிலே சோலையிலே ஆலங்காடிச் சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுக்கியடிக்க
பாலாறு பாலாறு பாலாறு..."

மேலே கூறப்பட்ட பாடல் எவ்விளையாட்டுடன் தொடர்புடையது?

1.கரப்பந்து 2.கபடி 3.கிளித்தட்டு 4.கிட்டிப்புல்


12.பின்வரும் கூற்றுக்களில் மிகப் பொருத்தமானது

1. மரங்கள் செழித்து வளரும், மழை பெய்யும்
2. வரட்சி ஏற்படும், வெயில் அதிகரிக்கும்
3. மழை பெய்யும், நாடு செழிப்படையும்
4. சுகதேகி ஆவார், சிகிச்சை பெறுவார்

13.பின்வரும் கூற்றுக்களில் எப்பொழுதும் உண்மையாக அமையக்கூடியது.

1. நாளை மழை பெய்யும்
2. சூரியன் மேற்கில் உதித்தல்
3. மாணவன் பரீட்சையில் சித்தியடைதல்
4. மாம்பழங்கள் புளித்தல்

14.





அருகில் உள்ள உருவில் மூன்றுவகை உணவையும் உண்பவர்கள் எத்தனை பேர்?



1. 6 பேர் 2. 5 பேர்
3. 7 பேர் 4. 9 பேர்

15ஆம், 16ஆம், 17ஆம் வினாக்களில் உள்ள படத்தின் கீழ்


15.பின்வருபவற்றில் நாளுக்கு நாள் வளர்ச்சியடையக் கூடியது

1.  2.  3.  4. 

16.எரிபொருள் இல்லாது பயணம் செய்யக் கூடியது

1.  2.  3.  4. 

17.பின்வரும் மரங்களில் அதிக நிழலை தரக்கூடியது

1.  2.  3.  4. 

18ஆம், 19ஆம் வினாக்களில் எண்கோலத்திற்கு அடுத்து வரவேண்டிய எண்களை கண்டுபிடிக்குக.

18. [345] → [453] → [534] → [ ]

1. 345 2. 453 3. 435 4. 534

19. [1] [3] [7] [15] [31] [ ]

1. 52 2. 63 3. 66 4. 46

20 தென்னை மரம் ஒன்றில் எப்பொழுதும் காணப்படுவது

1. ஓலைகளும், இளநீரும் 2. ஓலையும், வேரும்
3. தேங்காயும், இளநீரும் 4. தேங்காயும், கிளியும்.



37.உலகின் உயிரினக் கூட்டங்களின் பரம்பலைத் தீர்மானிக்கும் முக்கிய அம்சம் எது?

(1) மழைவீழ்ச்சி (2) அகலக்கோடு
(3) குத்துயரம் (4) காற்று (5) பிரதேசத்தின் மண்வகை

38.பரட்டைக் காடுகள் (செப்பரல்கள்)

(1) அயனமண்டலத்தின் எடுத்துக்காட்டான தாவரவர்க்கமாகும்
(2) உயர் வெப்பநிலை ஒன்றையும், உயர் மழைவீழ்ச்சி ஒன்றையும் உடையது
(3) தொடரான விதானத்தை உடைய என்றும் பசுமையான மரங்களை உடையது
(4) தடித்த தோல் போன்ற இலைகளை உடைய என்றும் பசுமையான பதிவான செடிகளை உடையது
(5) வருடத்தில் பெரும்பகுதி பனியினால் மூடப்பட்டிருக்கும்

39.இலங்கையில் காணப்படும் நீலவுடல் பெருங்குயில்

(1) கலாச்சார இனம் ஒன்றாகும்
(2) அழித்துவிட்ட இனம் ஒன்றாகும்
(3) குடிபெயரும் இனம் ஒன்றாகும்
(4) வாழும் உயிர்ச்சுவட்டு (எச்ச) இனம் ஒன்றாகும்
(5) மையக்கல் (Keystone) இனம் ஒன்றாகும்

40.பின்வரும் நுண்ணங்கிகளுள் எது நுண்காற்றுநாடி ஒன்றாகும் ?

(1) Clostridium botulinum
(2) Lactobacillus bulgaricus
(3) Pseudomonas denitrificans
(4) Bacillus Subtilis
(5) Thiobacillus Ferroxidans

## 41 - 50 வரை வினாக்கள் பின்வரும் அட்டவணையில் தங்கியன

41.உடலுக்குள் பெருக்கலடையும் நோயாக்கிகளை உடைய உணவை உட்கொள்வதனால் ஏற்படும் நோய் நிலைமைக்குக் காரணமான நுண்ணுயிர் / நுண்ணுயிர்கள் ஆவது

(A) Shigella dysentariae
(B) Staphylococcus aureus
(C) Vibrio Cholarae
(D) Salmonella typhi
(E) Clostridium tetani

42.பின்வரும் உணவு நற்காப்பு முறைகளில் எதில் / எவற்றில் கிருமியழித்தல், அழுகலற்ற நிலை ஆகிய தத்துவங்கள் இரண்டும் ஒன்றாக அமைந்திருக்கின்றன?

(A) மீன் தகரத்திலடைத்தல்
(B) பால்மா தகரத்திலடைத்தல்
(C) பாச்சர்முறை வழங்கள்
(D) பாலை கிருமியழித்து போத்தல்களில் அடைத்தல்
(E) புகையூட்டல்

43.கழிவுப் பொருள் யூரியா தொடர்பான பின்வரும் அம்சங்களுள் எது / எவை சரியானது / சரியானவை?

(A) அமோனியாவை விட அதிகம் நச்சுத் தன்மை உடையது
(B) கழிப்பதற்கு யூரிக்கமிலத்தை விடக் குறைவான நீர் தேவைப்படும்
(C) அமோனியாவை விட கழித்தலின் போது அதிகம் காபன் விரயமாகும்
(D) முலையூட்டிகளினதும், நிறையுடலி உபயவாழிகளினதும் கழிவுப்பொருளாகும்
(E) தொகுப்பதற்கு சக்தி விரயமாகாது

44.வன்கூட்டுத் தசை நார் ஒன்று சுருங்கும் போது பின்வரும் எது / எவை நிகழும்?

(A) தசைப்பாத்துக்கள் யாவும் குறுகும்
(B) மயோசின் இழைகள் அக்ரின் இழை மீது மேவி அசையும்
(C) ஏராளமான வலுவான அடிப்புகள் நிகழும்
(D) A - பட்டி மாறாதிருக்கும்
(E) Z - கோடுகள் ஒன்றையொன்று விலகி அசையும்

45.உயிர்க்கோளம் பற்றிய பின்வரும் கூற்றுகளுள் எது / எவை சரியானது / சரியானவை?
(A) உயிர்க்கோளம் புவியின் பெரும்பகுதியை ஆக்கும்
(B) உயிர்க்கோளத்தின் பிரதான உற்பத்தியாளர்கள் அயன ஈரமழைக்காட்டுத் தாவரங்களாகும்
(C) உயிர்க்கோளத்தின் பிரதான சக்தி மூலம் சூரியன் ஆகும்
(D) உயிர்க்கோளத்தில் சக்தி எப்பொழுதும் ஒரு திசையில் பாய்வதோடு பாய்ச்சல் வட்டவடுக்கற்றதுவாகும்
(E) உயிர்க்கோளத்தில் நுகரிகள் பதார்த்தங்களின் மீள சூழற்சியில் முக்கிய பங்கேற்பர்

46.வித்துமூடியுளி சூல்வித்துக்கும், Cycas இனது சூல்வித்துக்குமிடையில் காணப்படும் ஒற்றுமை / ஒற்றுமைகள் எது / எவை?
(A) கவசத்தால் சூழப்பட்ட மாவித்திக்கலனைக் கொண்டிருத்தல்
(B) ஒடுக்கற்பிரிவினால் தோன்றும் நான்கு மாவித்திகளுள் ஒன்று மாத்திரம் விருத்தியடைகின்றமை
(C) சூல்வித்திழை ஒன்றினால் இணைக்கப்பட்டுள்ளமை
(D) ஆதிச்சனனி ஒன்று அல்லது பலவற்றைக் கொண்டுள்ளமை
(E) சேமிப்புணவை கொண்டுள்ளமை

47.கலச் சுவாசம் தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் எது / எவை சரியானது / சரியானவை?
(A) சுவாசத்தின் துணைநொதியங்கள் தாழ்த்தப்படும் அதேவேளை கீழ்ப்படை மூலக்கூறுகள் ஒட்சியேற்றப்படுகின்றன.
(B) காற்றுச் சுவாசத்தின் போது பைருவேற்று ஒட்சியேற்றம் இழைமணியில் நிகழ்கின்றது.
(C) விலங்குகளில் காற்றின்றிய சுவாசத்தின்போது ஈற்று இலத்திரன் வாங்கி இலற்றிக்கமிலமாகும்
(D) தாவரங்களின் காற்றின்றிய சுவாசத்தின் இறுதிப்படியில் கீழ்படை மூலக்கூறுகள் தாழ்த்தப்படுவதோடு தாழ்த்தப்பட்ட துணை நொதியங்கள் ஒட்சியேற்றப்படுகின்றது.
(E) காற்றுச் சுவாசத்தில் கிரெப்பின் வட்டத்திலேயே கூடிய ATP உற்பத்தி செய்யப்படுகின்றது

48.ஒளித்தொகுப்பு தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் எது / எவை தவறானது / தவறானவை?
(A) ஒளித்தொகுப்பின் ஒளித்தாக்கத்தின் இறுதியில் துணை நொதியங்கள் தாழ்த்தப்படுகின்றன.
(B) C3 தாவரங்களிலும் C4 தாவரங்களிலும் $CO_2$ நிலைநாட்டல் பச்சையவுரு பஞ்சணையில் நிகழும்
(C) ஒளித்தாக்கத்துக்கு தாழ்த்தப்பட்ட துணை நொதியங்கள் இலத்திரனை வழங்குகின்றன.
(D) C4 தாவரங்களில் முதன்மை காபரொட்சைட்டு வாங்கி ஒட்சலோ அசற்றேட்டு ஆகும்.
(E) C3 தாவரம் C4 தாவரம் ஆகிய இரண்டிலும் Rubisco நொதியம் காணப்படும்

49.மனிதனின் மூளை தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?
(A) பரிவகம் இயக்கம் கணத்தாக்கங்களை சீராக்கி ஒழுங்காக்கின்ற மையங்களைக் கொண்டிருக்கும்
(B) நடுமூளையின் ஈரிணைச்சடலங்களும் செங்கருவும் புலன் கணத்தாக்கங்களை சீராக்கி ஒழுங்காக்கும் மையங்களாகச் செய்யப்படுகின்றன.
(C) பின் மூளையின் முக்கிய பாகமான மூளி இரண்டு அரைக்கோளங்களை உடையது
(D) மூளையத்தின் கடைநுதற் சோணையில் ஞாபகம், கேட்டல் மையங்கள் அமைந்துள்ளன
(E) மூளையின் காம்பு உடல்சமநிலை, உடல் நிலை என்பவற்றை ஆளும் மையங்களைக் கொண்டிருக்கின்றது.

50.HIV வைரசு தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?
(A) நுளம்புகளால் செலுத்தப்படுவதில்லை (B) சுருளியுருவான (Helical) வைரசு ஒன்று ஆகும்.
(C) விருந்து வழங்கி கலங்களினுள் விருத்தியடையும் போது RNA யிலிருந்து DNA ஐ தொகுக்கும் ஆற்றல் உடையவை
(D) உறையிடப்பட்ட ஒரு வைரசாகும்
(E) மனிதனின் எல்லா நிணநீர்க்குழியங்களையும் அழிப்பதன் மூலம் நீர்பீடன பற்றாகுறை நிலையை ஏற்படுத்தும்

**கடந்த "கல்வி ஒளி" இதழில் வெளியாகிய உயிரியல் - 1**
**முப்பது வினாக்களுக்குரிய விடைகள் வருமாறு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01) 5 | (02) 4 | (03) 4 | (04) 3 | (05) 2 | (06) 3 |
| (07) 1 | (08) 3 | (09) 4 | (10) 3 | (11) 4 | (12) 3 |
| (13) 2 | (14) 3 | (15) 5 | (16) 2 | (17) 3 | (18) 4 |
| (19) 4 | (20) 3 | (21) 1 | (22) 5 | (23) 4 | (24) 3 |
| (25) 3 | (26) 3 | (27) 4 | (28) 3 | (29) 3 | (30) 3 |

**( உயிரியல் - II அடுத்த வாரம் பிரசுரமாகும் )**


இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 11.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது


11-07-2012
# கல்வி ஒளி
தமிழ்நாதம்
மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 04

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொள்ளவிருக்கும் மாணவர்களுக்காக...

நேரம்: 45 நிமிடம் **பகுதி I** ஆசிரியர்: திரு.U. வதன் (B.A. Hons)

1ஆம், 2ஆம் வினாக்களில் மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

1.  1. ஆறு 2. மழை 3. நீர் 4. நீர்வீழ்ச்சி

2.  1. வெயில் 2. குளிர் 3. மழை 4. அழகு

3ஆம், 4ஆம் வினாக்களில் சரியான ஒழுங்கு முறையின் கீழ் கீறிடுக.

3. 1. வலயம், கோட்டம், மாவட்டம் மாகாணம் 2. கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம்
3. மாவட்டம், மாகாணம், வலயம், கோட்டம் 4. மாகாணம், மாவட்டம், கோட்டம், வலயம்

4. 1. மணி, செக்கன், நிமிடம், நாள் 2. மணி, நாள், நிமிடம், செக்கன்
3. செக்கன், மணி, நிமிடம், நாள் 4. நாள், மணி, நிமிடம், செக்கன்

5ஆம், 6ஆம் வினாக்களுக்கு கீழே உள்ள எழுத்து நிரையை அவதானித்து விடை எழுதுக.

A 8 8 A B 9 9 A B B B A C C A 8 B Q A Q R R 9 8 A

5. மேலே உள்ள எழுத்துக்களில் எத்தனை ஆங்கில எழுத்துக்கள் உள்ளன?
1. 18 2. 17 3. 19 4. 16

6. மிக கூடுதலாக வந்த எண்ணின் கூட்டுத்தொகை
1. 30 2. 40 3. 32 4. 48


7ஆம், 8ஆம் வினாக்களில் சரியான விடையை தெரிவு செய்க.

7."எனது அப்பா தோட்டத்தில் நிற்கும் போது அயல் வீட்டுக்கார மாமா குடிபோதையில் மோசமான வார்த்தைகளால் திட்டுவார். அப்பா அவரின் செயலுக்கு காது கொடுக்க மாட்டார்"- எனது அப்பா பற்றிய கூற்றுகளில் பொருத்தமானது
1. அப்பா ஒரு சோம்பேறி 2. அப்பா ஒரு சுயநலவாதி
3. அப்பாவுக்கு காது கேட்காது 4. அப்பா மிகவும் பொறுமைசாலி

8."மிதுரன் ஓர் ஏழை. அவனிடம் ஒரே ஒரு காற்சட்டையும் சேட்டும்தான் உண்டு. அவன் பாடசாலைக்கு வரும் போது எப்போதும் சுத்தமாகவே வருவான்." இதற்கு பொருத்தமான பழமொழி
1.பொறுத்தார் பூமி ஆழ்வார் 2.கந்தையானாலும் கசக்கிக்கட்டு
3.போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து 4.காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

9.கடகம் என்னும் சொல்லை ABAC என எழுதினால் கம்பம் என்னும் சொல்லை எழுதக்கூடிய வேறொரு முறை
1. 5756 2. 5665 3. 7868 4. 7788

10. [பதவி] → [வித்து] → [தும்பி] → [ ] வெள்ளிடத்தில் அமையக்கூடிய சொல்
1. பிட்டு 2. பிளிறும் 3. படம் 4. பிணா




# பெண்களுக்கு மூன்று நிமிடம் போதும்



ஒரு பெண், மூன்றே நிமிடங்களில் ஓர் ஆணின் தோற்றம், உடல் கட்டுமானம், ஆடை அணியும் ரசனை, மணம், வார்த்தை உச்சரிப்பு, மொழித் திறன் ஆகியவற்றை அளவிட்டு விடுகிறாளாம்.

பெண் தனது தோழிகளுடன் குறிப்பிட்ட ஆண் எப்படி உரையாடுகிறான், அவன் வெற்றிகரமானவனா, இலட்சியம் மிக்கவனா என்றும் குறுகிய நேரத்துக்குள் கணித்து விடுகிறாளாம்.

பெண்கள் 3 நிமிடங்களில் தங்களுக்குச் சரியான ஆண்களைத் தேர்ந்தெடுத்து விடுகிறார்கள் என்கிறது ஒரு புதிய ஆய்வு. ஒரு நபர் தனக்குப் பொருத்தமானவரா, இல்லையா என்று தீர்மானிப்பதற்கு 180 நொடிகள் போதும் என்று பெண்கள் கருதுவதாக இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

ஓர் ஆணைப் பற்றிய தனது முதல் அபிப்பிராயத்தை பெண்கள் மாற்றிக் கொள்வதும் அரிது என்று தெரியவந்திருக்கிறது. தங்களின் கணிப்பும், தீர்ப்பும் சரியாகத்தான் இருக்கும் என்பது பெண்களின் உறுதியான எண்ணம்.

மூவாயிரம் பெண்களிடம் இதுதொடர்பான ஆய்வை மேற்கொண்ட பென் கே, ஆண்களுடன் பழகுவதில் பெரும்பாலான பெண்கள் தங்கள் உள்ளுணர்வை நம்புகிறார்கள். அது ஏதோ வெகு ஆழத்திலிருந்து வருவது போலத் தோன்றுகிறது.

ஒரு மாயாஜாலம் போல அது பெரும்பாலும் சரியாகவும் இருக்கிறது.

ஆனால் பெண்கள் மிக விரைவாக முடிவெடுப்பதுதான் ஆச்சரியமூட்டும் வி'யம். ஆண் ஒருவனுடன் சேர்ந்து சிறிது நேரம் பேசி முடிப்பதற்குள்ளாகவே அவன் நல்லவனா, கெட்டவனா, தனக்குப் பொருத்தமாக இருப்பானா, இல்லையா என்று பெண் முடிவு செய்துவிடுவது உண்மையிலேயே வியப்பான ஒன்றுதான்!

# கருவறைச் சட்டம்

அம்மா..
எங்கே போகிறாய்?
எனக்குத் தெரியும்
என்னை உன்னிலிருந்து
எடுத்து வீசப் போகிறாய்..

அம்மா..
எத்தனை கவிதைகள் எழுதியிருப்பாய்..?
என்னை மட்டும் ஏனம்மா
எழுத மறுக்கின்றாய்?

நான் உன் எழுத்தல்லவா
எனக்கு மட்டும் ஏன் உன் பக்கங்கள்
மூடிக் கொண்டன.?

எத்தனைச் சிந்தனைகளை
உன்னில் உருவாக்கி
மண்ணில் விதைக்கப் போராடுகிறாய்?

உன் உயிரணுவில்
கலந்துவிட்ட என்னை மட்டும்
ஏனம்மா..
கல்லறை இல்லாத கழிவறையில்
தள்ளுகின்றாய்..

அம்மா..
நான் உன் சிந்தனைத் துளி அல்லவா..
புரட்சியின் மனித ஆயுதமாக
என்னை மாற்ற வேண்டிய நீ...
மருத்துவச்சியின் கூராயுதங்களால்
என்னை வெடித்து
ரத்தப் பிண்டமாய்
ஏன் சிதறடிக்கப் போகிறாய்?

அம்மா..
இரண்டுக்கு மேல் வேண்டாம்
என்பதால் மட்டுமே
என்னை அறியும்




உன் முகம் காண
தடைச் சட்டமா?
உண்மையைச் சொல்..
இரண்டுக்கு மேல் வேண்டாம் என்றால்
ஏனம்மா நான் உன்
மகனா மகளா என
அறிந்துவிட துடித்தாய்?

சோதனைச் செய்யாமலேயே
என்னை நீ
கலைத்திருக்கலாம்..
அப்போது-
ரத்தப் பிண்டமாய்
சிதறும் போது மட்டும்தான்
வலித்திருக்கும்.
இப்போது..
அம்மா...
பிறப்பின் பிரபஞ்சமே வலிக்கிறது
உன் முகம் பார்க்கத் துடித்த
என் கவிதை
நீ வாசிக்காமலேயே
கிழிந்துப் போகிறது

தாய் பார்க்காத முகம்
தமிழ்ப் படிக்காத எழுத்து
நீ எழுதாதக் கவிதை..
இதோ...
மரணத்தைக் கூட அனுபவிக்காத
வேதனையில்
மறைந்துவிட்டது.

- புதியமாதவி

# கணவனுக்கு பயப்படலாமா?



பல பெண்கள் திருமணமான புதிதில் கணவனுக்கு பயப்பட்டாலும் காலம் செல்லச்செல்ல கணவனை தன் கட்டுக்குள் கொண்டு வந்து விடுவார்கள். இயற்கையிலேயே பயந்த சுபாவமுடைய சில பெண்கள் கணவனுக்கு பயந்து வாழக்கூடியவர்களாகவே காலத்தை நகர்த்துகிறார்கள்.

மனைவி தனக்கு பயப்பட வேண்டும் என்று எண்ணுகின்ற பழங்கால தலைமுறையினரின் அணுகுமுறையை இக்கால இளம்தலைமுறை பெரிது படுத்தாமல் இருப்பது உண்மையில் ஆறுதலான வஷயமாக இருந்தாலும் வரதட்சணை போன்ற வி'யங்களில் அவர்களது அடாவடி இன்றைய மனைவிமார்களை பயம் கொள்ளச் செய்கிறது என்பதையும் மறுப்பதற்கு இல்லை.

எப்போதும் கணவனுக்கு பயந்து வாழும் மனைவியால் கணவன் தவறான பாதையில் செல்லும்போது அவனை திருத்தி நேர்வழிக்கு கொண்டு வர முடியாது. இது குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றதல்ல.. கண்வன் தவறு செய்தால் துணிச்சலுடன் அதை திருத்தக்கூடியவளாக மனைவி இருந்தால் தான் குடும்பம் குடும்பமாக இருக்கும். எது எப்படி இருந்தாலும் கணவன் மனைவிக்கோ அல்லது மனைவி கணவனுக்கோ பயந்து கொண்டே இருந்தால் வாழ்க்கை சுவைக்காது. கணவன் மனைவிக்குள் பயமில்லாத வாழ்க்கை இருந்தால் தான் தாம்பத்தியமும் இனிதாக இருக்கும்.

ஹஸ்பண்ட் கணவரை நினைச்சாலே பயமாக இருக்கிறது என்று சில பெண்கள் சொல்வார்கள். பயம் என்பது திருடனுக்கு போலீஸ் மீது ஏற்படலாம். கணவன் - மனைவி உறவென்பது போலீஸ் திருடன் போன்றதல்ல! கணவன் மீது மரியாதை இருக்க வேண்டும். அதையும் மீறி இருவருக்குள்ளும் இருக்க வேண்டியது அன்பு, நட்பு, பாசம், நேசம்..

இவ்வாறு வாழ்க்கை நடத்தும் ஜோடிகள் அதிக மகிழ்ச்சியாக இருப்பார்கள். பிரச்சினைகளை தைரியமாக சமாளிப்பார்கள். இவர்கள் இல்லற வாழ்க்கையும் ரொம்ப ஜாலியாக இருக்கும்.

சில குடும்பங்களில் கணவன்-மனைவி உறவு வாத்தியார் மாணவி என்ற நிலையில் அமைந்து விடுகிறது. சமையலில் பெயர் வாங்க வேண்டும். நடை, உடை, பாவனையில் அவர் பாராட்ட வேண்டும். விழுந்து விழுந்து உபசரித்து சபாஷ் வாங்க வேண்டும் என்ற ரீதியில் அத்தகைய மனைவிகள் நடந்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட எதிர்பார்ப்புகளும் வாழ்க்கை சிறக்க உதவுவதில்லை. கடுமையாக மனைவி உழைத்தும், கணவருக்காக தன்னை மாற்றிக் கொண்டும், அதற்குரிய பிரதிபலனை கணவன் வழங்காத போது அவள் மனமொடிந்து எதிர்மறையாக நடக்கத் தொடங்கி விடுவாள். உங்க வீட்டில் நீங்க எப்படி? பயப்படவோ, எப்போதும் பாராட்டுக்காக உழைக்கவோ செய்யாதீர்கள். அன்பை, நட்பை வெளிப்படுத்துங்கள் அது போதும். ஆயிரம் விதத்தில் உங்களுக்கும் பிரிக்க முடியாத இறுக்கத்தை ஏற்படுத்திவிடும் ■


உன் கிழ வயதில் அவை உனக்கு ஆதரவாயிருந்து சந்தோஷமளிக்க வேண்டாமா? அவை என்னவாயின? ஒவ்வொரு குட்டியும் பிறந்து ஒரு வருஷமானதுமே விற்கப்பட்டு விட்டது. அவற்றில் ஒன்றைக் கூட நீ இனி பார்க்க முடியாது, இப்படிப் பெற்றெடுக்கத் தானா குட்டிகள்? அது தவிர பண்ணையில் நீ செய்த வேலைகளுக்கெல்லாம் கூலியாக உனக்குக் கிடைத்தது என்ன? லாயத்தில் கொஞ்சம் இடமும் அரைவயிறு நிரம்பத் தீனியும் மாத்திரம் தான்.

# விலங்குப் பண்ணை 03

இப்படிப் பரிதாபகரமான வாழ்வு நடத்துகிறோம் நாம். அந்த வாழ்வு தானாக முடியட்டும் என்றாவது நம்மை விடுகிறார்களா மனிதர்கள்? என்னைப் பற்றிய வரையில் நான் முணுமுணுக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் ஒரு விதத்தில் நான் அதிருட்டசாலி என்று தான் சொல்ல வேண்டும். எனக்குப் பன்னிரண்டு வயதாகிறது.

நானூறுக்கும் அதிகமாகக் குட்டிகள் போட்டிருக்கிறேன் நான். இது பன்றிக்கு இயற்கையான வாழ்க்கை. ஆனால் முடிவில் கத்திக்கு இரையாகாத மிருகம் எது? என் எதிரில் உட்கார்ந்திருக்கும் பன்றிக் குட்டிகளே இன்னும் ஒரு வருஷத்துக்குள்ளாகவே நீங்கள் ஒவ்வொருவரும் கொலைக் களத்தில் வீரிட்டுக் கத்திக்கொண்டுதான் சாகப் போகிறீர்கள். அந்தப் பயங்கரமான முடிவைத்தான் நாம் எல்லோரும் கடைசியில் அடைந்தாக வேண்டும். பசுக்கள், பன்றிகள், ஆடுகள், கோழிகள் எல்லாம். குதிரைகளும் நாய்களும் கூட இந்த முடிவைத் தப்ப முடியாது. பாக்ஸர் இப்போது பலசாலி, இருந்தாலும் பாக்ஸரின் முடிவும் இதுதான்.

உன் உடலில் வலுவு குறைந்தவுடனே, ஜோன்ஸ் உன்னை விற்று விடுவான். உன்னை வாங்குகிறவன் உன் கழுத்தை அறுத்து உன்னை உலையில் போட்டு வேகவைத்து வேட்டை நாய்களுக்கு உணவாக்கிவிடுவான். நாய்களையோவெனில், அவை கிழடு தட்டிப் பல்லில்லாது போன பிறகு, ஜோன்ஸ் அவற்றின் கழுத்தில் ஒரு கல்லைக் கட்டி குட்டையிலே வீசி எறிந்து கொன்றுவிடுவான்.



''பளிங்கு போலத் தெளிவாகத் தெரியவில்லையா, தோழர்களே? இந்த வாழ்க்கையில் நமக்குச் சம்பவிக்கும் கேடுகள் எல்லாம் மனிதர்களின் கொடுங்கோலால் தான் நமக்குச் சம்பவிக்கின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது. இல்லையா, மனிதனை ஒழித்துவிட்டோமானால் நம் உழைப்பின் பலன் நமதேயாகிவிடும். ஒரே ஒரு நாள் இரவிலேயே நாம் பணக்காரர்களாகவும் சுதந்திரமுள்ளவர்களாகவும் ஆகிவிட முடியும்.

அதற்காக நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன? இரவும் பகலும் உழைக்க வேண்டும். மனித குலத்தை வீழ்த்திக் கவிழ்ப்பதற்கு உடலும் உள்ளமும் ஒருங்கே ஒரு முகமாக நாம் இடைவிடாது உழைக்க வேண்டும். அது தான் நான் உங்களுக்குத் தெரிவிக்கிற வி'யம். தோழர்களே, புரட்சி என்பது தான் என் தத்துவத்தின் மூலாதாரமான வார்த்தை. ஆம் புரட்சி! அது எப்போது நேரும் என்று சொல்ல என்னால் முடியாது. நான் சொல்கிற புரட்சி ஒரு வாரத்திலும் வரலாம். ஒரு நூற்றாண்டிலும் வரலாம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இதோ நான் படுத்திருக்கிற இந்த வைக்கோல் எவ்வளவு நிதரிசனமான உண்மையோ. அதே போல புரட்சி வரப்போகிறது, விலங்குகளுக்கும் நீதி வழங்கப்படப் போகிறது என்பது நிச்சயம்.

இன்றோ, நாளையோ, சீக்கிரமோ அதிக நாள் கழித்தோ, நீதி வழங்கப்படப் போகிறது என்பது மட்டும் நிச்சயம். தோழர்களே! அதில் உங்கள் கண்களையும் கருத்தையும் நிலைக்கச் செய்யுங்கள். எஞ்சியுள்ள உங்கள் வாழ்க்கை வீணாகாதபடி, புரட்சிக்காக உழையுங்கள், எல்லாவற்றிற்கும் மேலே இன்னொன்று சொல்வேன் நான், புரட்சி என்கிற இந்தத் தத்துவத்தை. என் கொள்கையை உங்களுக்கும் பின் வருகிறவர்களிடமும் தெரிவியுங்கள்.

பின்வருகிற தலைமுறைகள் போராட்டத்தை நடத்திப் புரட்சியை வெற்றிகரமாக் கட்டும்.

தோழர்களே, இதை ஞாபகத்தில் வையுங்கள். நீங்கள் திட்டத்தையும் தீர்மானத்தையும் இழக்கவே கூடாது. வாதப் பிரதிவாதங்களால் உங்கள் புரட்சி நோக்கம் திரிந்துவிடக் கூடாது.

மனிதனுக்கும் மிருகங்களுக்கும் பொதுவான நோக்கம் ஒன்று உண்டென்று யாராவது சொன்னால் அதைக் காதில் போட்டுக் கொள்ளாதீர்கள். மனிதன் சுகமாக இருந்தால் தான் நீங்களும் சுகமாக இருக்க முடியும் என்று பிறர் சொல்வதை நம்பி விடாதீர்கள்.

அதெல்லாம் பொய். மனிதனுக்குத் தன் நலத்தைத் தவிர வேறு எவ்விதமான ஞாபகமும் கிடையாது. அவன் வேறு எந்த மிருகத்தினுடைய நலனுக்காகவும் பாடுபடமாட்டான்.

விலங்குகளாகிய நம்மிடையே பூரணமாக ஒற்றுமை நிலவ வேண்டும். இந்தப் புரட்சியிலே நாம் தோழர்களாக, தோளோடு தோள் கொடுத்து நிற்க வேண்டும். மனிதர்கள் எல்லோரும் நம் எதிரிகள். விலங்குகள் எல்லாம் தோழர்கள்.


இந்தச் சமயம் சபையில் பெரிய ஆரவாரம் உண்டாயிற்று. தளபதி பேசிக்கொண்டிருக்கையில் நாலு பெரிய எலிகள் தங்கள் வளைகளிலிருந்து வெளியே குதித்துக் கொண்டு வந்து, உட்கார்ந்து பிரசங்கத்தைக் கேட்டன.

அவற்றை திடீரென்று பார்த்து விட்ட நாய்கள் அவற்றை நோக்கிப் பாய்ந்தன. ஆனால் எலிகள் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தங்கள் வளைகளுக்குள் பதுங்கிக் கொண்டு தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டன.

சந்தடியை அடக்குவதற்கு தளபதி தன் முன்னங்காலைத் தூக்கிக் காட்டியது.

(நாளை தொடரும்...)

# சிறுவர் அமுதம்



**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

விடயம் 1, 2 இல் ஏதாவதொன்றை பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# அழகான புறா



**புறா** முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவையினத்தைச் சேர்ந்த உயிரினமாகும். உயிரின வகைப்பாட்டில் இது கொலம்பிடே குடும்பத்தைச் சேர்ந்தது. இக்குடும்பத்தில் ஏறத்தாழ 300 வகை இனங்கள் உள்ளன. புறாக்கள் உலகெங்கிலும் உள்ளன என்றாலும், இந்தியா, மலேசியா, இந்தோனேசியா முதலிய தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் அதிகமாக காணப்படு கின்றன. புறாக்கள் பல்வேறு வேறுபட்ட அளவுகளில் காணப்படு கின்றன. நியூகினியாவைச் சேர்ந்த க்ராண்ட் புறாக்கள் அளவில் பெரியவை. இரண்டு முதல் நான்கு கிலோ எடையுடையவை. மிகச் சிறியவை ஜெனஸ் கொலம்பினா என்ற இனத்தைச் சேர்ந்தவை ஆகும். இவை சுமார் 22 கிராம் எடை உடையவை.

இது தானிய வகைகளை மட்டும் உணவாக உண்ணும் பயிருண்ணிப் பறவை ஆகும். பறவைகளிலேயே தண்ணீரைத் தன் அலகால் உறிஞ்சிக் குடிக்கும் பழக்கமுடையது என்றும் சொல்லப்படுவ துண்டு. இது வீட்டிலும் செல்லப் பறவையாக வளர்க்கப்படு கிறது. வீட்டில் வளர்க்கப்படும் புறாக்கள் உருவத்தில் சிறியனவாகவும் சாதுவாகவும் காணப்படும். காட்டுப்புறாக்கள் உருவத்தில் சற்றுபெரியவை.

புறாக்கள் மரங்களில் குச்சிகள் மற்றும் குப்பைகளை வைத்து கூடு கட்டுகின்றன. இவை ஒன்று அல்லது இரண்டு முட்டைகள் இடுகின்றன. ஆண், பெண் புறாக்கள் குஞ்சுகளை கவனித்துக்கொள்ளுகின்றன. குஞ்சுகள் 7 முதல் 27 நாட்களில் கூட்டை விட்டு வெளியே வருகின்றன.

மன்னர்கள் காலத்தில் கடிதப் போக்குவரத்து மற்றும் தூது ஓலை அனுப்புவதற்கு நன்கு பயிற்சி கொடுத்துப் பழக்கப்பட்ட புறாக்களே பயன்படுத்தப்பட்டன. இப்போதும் இலங்கை உட்பட பல நாடுகளில் புறாக்களுக்கான பந்தயம் நடைபெறுகிறது. பழக்கப்பட்ட புறாக்கள் வெகு தொலைவில் கொண்டுவிடப்பட்டு அவை தங்கள் கூட்டுக்குத் திரும்பி வரும் நேரத்தை வைத்து இப் பந்தயங்கள் நடத்தப்படுகின்றன.

## சுடோக்கு எண் 4 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 5 | 1 | 4 | 9 | 8 | 3 | 7 |
| 9 | 3 | 7 | 8 | 6 | 5 | 1 | 4 | 2 |
| 4 | 1 | 8 | 3 | 7 | 2 | 5 | 9 | 6 |
| 1 | 7 | 9 | 6 | 5 | 3 | 4 | 2 | 8 |
| 6 | 8 | 3 | 4 | 2 | 7 | 9 | 5 | 1 |
| 5 | 2 | 4 | 9 | 8 | 1 | 6 | 7 | 3 |
| 3 | 9 | 2 | 5 | 1 | 6 | 7 | 8 | 4 |
| 7 | 4 | 6 | 2 | 9 | 8 | 3 | 1 | 5 |
| 8 | 5 | 1 | 7 | 3 | 4 | 2 | 6 | 9 |

## சுடோக்கு எண் 5

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 3 | | | | 5 | | 2 |
| | | | | | 8 | | 3 | 1 |
| | | | 5 | 9 | | | | 6 |
| | | 2 | | 4 | | | | |
| 9 | 6 | | | | | | 4 | 5 |
| | | | | 1 | | 9 | | |
| 2 | | | | 5 | 1 | | | |
| 6 | 7 | | 8 | | | | | |
| 1 | | 9 | | | | 3 | | 7 |

# தொல்காப்பியத்தில் திருமணப் பொருத்தம் பத்து



பழந்தமிழ் நூலான தொல்காப்பியம் பத்து வகையான திருமணப் பொருத்தங்களை குறிப்பிடுகின்றது. சாஸ்திர ரீதியில் அமையாமல் சமுதாய ரீதியில் இவை அமைந்திருப்பதால், எல்லா சமுதாயத்தினருக்கும் இவை பொருந்தும்.

**திருமணப் பொருத்தம்**
பிறந்த நாட்டாலும் மொழியாலும் இனத்தாலும் இருவரும் ஒப்பாக விளங்குதல், பிறப்பை முதன்மையாகவும், முதலாவதாகவும் கருத வேண்டும்.

**குடிமைப் பொருத்தம்**
அவரவர் பிறந்த குடும்பத்தின் தன்மையைக் குறிப்பிடுவது. புகழ்பெற்ற குடும்பத்தால் மதிப்பும்இ பழி-பெற்ற குடும்பத்தால் பழியும் நேரும்.

**ஆண்மைப் பொருத்தம்**
இருவரின் ஆளுமைத் திறனை குறிப்பிடுவதாகும். ஆண் பொருளீட்டவும் பெண் குடும்பத்தைச் செம்மையாக நடத்தலும் அவரவர்க்குரிய ஆண்மையாகும்.

**ஆண்டுப் பொருத்தம்**

பெண் ஆணைவிட 5-10 வயது சிறியவளாக இருக்கலாம். ஒத்த வயதாகவும் இருக்கலாம். ஆனால் ஆணை விட பெண்ணின் வயது மூத்ததாக இருக்கக் கூடாது.

**உருவப் பொருத்தம்**
உடல் உயரமும் கவர்ச்சியும் உடல்வாகும் இருவருக்கும் பொருந்துவதைக் குறிக்கும்.



**உணர்வுப் பொருத்தம்**
உணர்வுப் பொருத்தம் என்பது புலனுனர்வைக் குறிப்பதாகும். புலனுணர்வு வேறுபாடுகள் பூசலுக்கு வித்தாகலாம். எனவே இருவரும் உணர்வில் ஒத்துப் போக வேண்டும்.

**நிறுத்த காமவாயில் பொருத்தம்**
இன்ப நுகர்ச்சியில் இருவருக்கும் இருக்கும் சமமான ஆர்வத்தைப் பொறுத்ததாகும். இதில் ஒருவருக்கு வெறுப்பேற்பட்டாலும் வாழ்க்கை சிறப்பாக அமையாது.

**நிறப் பொருத்தம்**
மன அடக்கத்தையும் குணங்களின் தன்மையையும் குறிக்கும். இவை இல்லாத குடும்பம் அவலமடையும்.

**அருட் பொருத்தம்**
பிறரிடமும், பிறவுயிர்களிடமும் காட்டும் பரிவு. அருட்பொருத்தம் இல்லாத குடும்பத்தில் தற்செருக்கு தலைதூக்கி, குடும்ப அமைதி கெடும்.

**திருப் பொருத்தம்**
செல்வ நிலையில் இருவருக்கும் இடையிலுள்ள ஏற்றுமையாகும். தம்பதியரிடையே செல்வத்தால் ஏற்றத்தாழ்வு இருந்தால் இல்வாழ்வு சிதைந்து விடலாம்.

இந்தப் பத்துப் பொருத்தங்களும் சமுதாய நோக்கில் திருமணத் தம்பதிகளிடம் அமைந்திருக்க வேண்டிய பொருத்தங்களாகும்.

*-நன்றி : மஞ்சரி*

## மண நாள் குறித்தல்

தமிழர்கள் எந்தச் செயலைச் செய்தாலும் நல்ல நாள் பார்த்துச் செய்வதில் நம்பிக்கையுடையவர்கள். மண வினை முடித்தற்கு உரிய நல்ல நாள், நல்ல நேரம், மங்கல வினைக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுது ஆகிய அனைத்தையும் வல்லவரிடம் கேட்டு முடிவு செய்தனர்.

**"மனைவிளக் குறுத்து மாலை தொடரிக் கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக் கோள்கால் நீங்கிய கொடுவெண்டிங்கள்"**

மேலும் வளர்பிறை நாள்களையும், பகலின் முற்கூறான காலைப் பொழுதையுமே மண நிகழ்விற்குரிய நல்ல நேரமாகக் கருதினர். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கோவலன் - கண்ணகி மணவினை சந்திரன் - ரோகிணி என்னும் நட்சத்துடன் கூடும் வேளையில் நடந்ததாகக் குறிப்பிடுகிறார். "வானூர் மதியஞ் சகடணைய" கம்ப ராமாயணத்திலும் வசிட்டர் மண வினை நிகழ்த்தற்குரிய நாளைக் கூறினார் என்றும் அறியலாம். இதனால் நல்ல நேரம் பார்த்தல் பெரும்பாலும் எல்லா மரபினராலும் பின்பற்றப்பட்டது.

## நகருக்கு உரைத்தல்

மணம் நிச்சயிக்கப்பட்ட பின் மணச் செய்தியினை ஊருக்கு அறிவித்தல் தமிழர் மரபாகும். சங்கப் பாடல்களில் இவை இடம் பெறவில்லை. அக்காலத்தில் இயற்கையோடு இயைந்த மணம் மேற்கொண்டமையால் தங்கள் சுற்றாம் சூழ முடித்துக் கொண்டனர். பிற்காலத்தில் பல்லார் அறியப் பறையறிந்து நாள் கேட்டுக் கலியாணஞ் செய்து கடிபுக்க - மெல்லியள்" என நாலடியார் கூறுகிறது. சிறிய ஊராயின் பறையறிவித்தும், தொடர்ந்த காலத்தில் மன்னர், வணிகர் ஆகியோர் முரசறைந்து மணச் செய்தியை நகருக்கு உரைத்தனர். யானையின் மீது அணிகலன்களை அணிந்த பெண்களை அமர்த்தி முரசறைந்து அறிவித்தனர். பெருங்கதையில் மணச் செய்தியைக் கூறும் போது "வெள்ளை ஆடையை உடுத்தியும், வெள்ளைச் சந்தனத்தை உடலில் அணிந்து, அசையும் மஞ்சிகையைக் (காதணி) காதில் அணிந்து, மாலைகள் ஆட முத்து மாலை புனைந்தும், போர்க்களத்திலே தலைமை கொண்ட யானையின் மீது வன்முரசை ஏற்றினர் என்று முரசறைவோன் தோற்றம் கூறப்படுகிறது.

சிந்தாமணியில் மன்னனின் மணவினை அறிவிக்க முரசறைவோன் யானை மீதமர்ந்து, மணச் செய்தியை ஊருக்கு உணர்த்தினான். முரசு சுமக்கும் யானைக்கும் வெள்ளணியும், மாலையும், திலகமும் அணிவித்தனர் என்று சுட்டுகிறது. பெரிய புராணத்தில் புனிதவதி, (காரைக்கால் அம்மையார்) பரமதத்தன் ஆகியோர் திருமணச் செய்தி ஓலையில் எழுதி அனுப்பிய செய்தியைக் காண முடிகிறது.

மன்னர் மண வினையில் மக்கள் பங்கு அதிகம் இருந்தது. மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் தம் கடமை ஆற்றிய நிலையைக் காண முடிகிறது. மேலும் முரசறைவோன் மக்களை அணிகலன்கள் பலவற்றை அணிந்து கொள்ளும்படியும் அவை அரச கட்டளை ஆகையால் இனிய பால் சோற்றா இயல்லாமல் பிறவற்றை ஏழு நாட்களும் மனம் விரும்பினும் உண்ணாதிருப்பீராக" என்று அறிவுறுத்தி, பின்பு அவர்கள் மேற்கொள்ள வேண்டிய செய்தியையும் கூறுகிறான். இதனால் மன்னருக்கும் மக்களுக்கும் இடையே இருந்த உறவும் மக்களின் மகிழ்ச்சியை நல்ல நாளில் விரும்பி கொல்லாமை முதலிய நோன்பு வலியுறுத்தப்படுதலையும் அறியலாம்.

மண நாளின் போது இன்னா செயல்கள் எவையும் இடம் பெறாமல் அறவாழ்க்கை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் புலனாகிறது.



# யாழ்.இலக்கிய குவியம் வளர்ந்து வரும் படைப்பாளிகளின் இணையம்

யாழ்ப்பாணத்தில் சர்ச்சைக்குரியதாக பேசப்பட்ட பேஸ்புக்கை நல்ல வழியில் இலக்கிய செயற்பாட்டிற்கு பயன்படுத்தினால் என்ன என்று பரீட்சார்த்தமாக அமைக்கப்பட்ட முகப்புத்தகத்திற்கு கிடைத்த ஆதரவு இலக்கிய குவியம் தோன்றுவதற்கு காரணமாயிற்று.

இளம் தலைமுறை ஒன்றை வழிப்படுத்தவும், கட்டி எழுப்பவும் வேண்டிய தேவை இவ் அமைப்பை ஏற்படுத்த காரணமாய் அமைந்தது. என்கிறார் அமைப்பாளர் வேலணையூர் தாஸ்.

இன்று பல இளம் படைப்பாளிகளை இணைத்து செயற்படுகின்ற இவ் அமைப்பு இலக்கிய வளர்ச்சி கருதி இலக்கியக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது மாதம் இருமுறை நாம் என்ற கவிதை இதழையும் வெளியிட்டு வருகிறது.

பல இளம் படைப்பாளிகள் உருவாக காரணமாயிருக்கும் இலக்கியக் குவியத்தின் முயற்சிகள் தொடர வாழ்த்துகிறோம்.

யாழ் இலக்கிய குவியம்
தலைவர் - வேலணையூர் தாஸ்
செயலாளர்- நித்தியா யோகராஜா
இணைசெயலாளர் - கிரிசாந்
பொருளாளர் - சுமன்
ஊடக இணைப்பாளர் - வினோத
இலக்கிய இணைப்பாளர்கள் - ஆழியூர் ரதீஸ், மதுஷா மாதங்கி, ஜே.எஸ்.ராஜ், ஆதி பார்த்திபன்.
இணைய இணைப்பாளர் - மதிவதனி,
ஆலோசகர்கள் - துவாரகன் ரஜீவன்

தொடர்புகளுக்கு
yarlelakiyakuviyam@gmail.com

-சோ. அபிரா

# முதன் முறையாக நாடாளுமன்ற கூட்டத்தில் பங்கேற்றார் சூகி



25 ஆண்டுகால கடும் போராட்டத்திற்கு பின்னர் மியான்மர் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் முதன் முறையாகக் கலந்து கொண்டார் அந்நாட்டு முக்கிய எதிர்க்கட்சித் தலைவர் ஆங்சாங் சூகி.

மியான்ரில் இராணுவ ஆட்சியின் போது, வீட்டுக் காவலில் அடைக்கப் பட்டிருந்த ஆங்சாங் சூகி கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விடுதலை ஆனார்.

இதனைத் தொடர்ந்து 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த நாடாளுமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு, அமோக வெற்றி பெற்றார்.

பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்து நோர்வே நாட்டின் ஓஸ்லோ நகரில் நடந்த விழாவில் தனக்கு வழங்க வேண்டிய நோபல் பரிசினை 20 வருடங்களுக்கு பின்னர் பெற்றார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மியான்மர் நாடாளுமன்ற கூட்டத் தொடரில், முதன் முறையாக தனது கட்சி உறுப்பினர்களுடன் விவாதத்தில் கலந்து கொண்டார்.

முன்னதாக அவர் கூறுகையில், எனது நாட்டிற்கு என்னால் முடிந்தளவு சேவை செய்வேன் என்று தெரிவித்துள்ளார்.

# இராணுவத்துடன் நேரடியாக மோதும் புதிய ஜனாதிபதி



எகிப்தின் ஜனாதிபதி பதவியில் இருந்து ஹோஸ்னி முபாரக் கடந்தாண்டு நீக்கப்பட்ட பிறகு, இராணுவம் எகிப்து நிர்வாகத்தை கவனித்து வந்தது.

இந்நிலையில் சமீபத்தில் நடை- பெற்ற ஜனாதிபதி தேர்தலில் முகமது முர்சி வெற்றி பெற்றார். அவரிடம் கடந்த 30ஆம் திகதி, இராணுவம் அதிகாரத்தை ஒப்படைத்தது. ஆனால் அதற்கு முன்பே உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, நாடாளுமன்றத்தை இராணுவம் கலைத்திருந்தது.

இந்நிலையில் இராணுவத்துக்கு சவால் விடும் விதமாக, புதிய ஜனாதிபதி முர்சி கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டு மாறு உத்தரவிட்டுள்ளார். இதனால் ராணுவம் அதிர்ச்சி அடைந்துள்ளது.

இதுதொடர்பாக விவாதிக்க இராணுவ கவுன்சிலின் அவசர கூட்டம் நடைபெற்றது.

மேலும் உச்சநீதிமன்றமும் அவசர ஆலோசனை நடத்தி வருகிறது. ஜனாதிபதியின் இந்த உத்தரவு, சட்டசிக்கலை ஏற்படுத்தும் என்று சட்ட நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# இங்கிலாந்தில் மாணவர் விசாவுக்கான கட்டுப்பாடுகள் நீக்கம்




இங்கிலாந்தில் சீனா, இந்தியா நாடுகள் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் படிக்கின்றனர்.

இவர்கள் படித்து முடித்தவுடன் வேலை செய்ய வழங்கப்பட்டு வந்த விசா ரத்து செய்யப்பட்டது.

மேலும் மாணவர் விசாவுக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனால் இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கு இந்த ஆண்டு வெளிநாட்டு மாணவர்களின் விண்ணப்பங்கள் குறைந்துள்ளன.

ஆனால் ஜேர்மனியில் மாணவர் விசாவுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அறிவிப்பு வெளியாகி உள்ளது. மேலும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச தரமுள்ள கல்வி ஜேர்மனியில் வழங்கப்படுகிறது. இதனால் கடும் போட்டி நிலவுகிறது.

வெளிநாட்டு மாணவர்களின் வருகை குறைந்தால் இங்கிலாந்துக்கு வருவாயும் குறைந்துவிடும் என்று பல்கலைக்கழங்கள் சுட்டிக் காட்டின. இதையடுத்து மாணவர் விசாவுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்த பிரதமர் டேவிட் கமரூன் அரசு முடிவு செய்துள்ளது.

இதன் மூலம் வெளிநாட்டு மாணவர்கள் படித்து முடித்தவுடன் 2 ஆண்டு வேலை செய்வதற்கான விசா மீண்டும் வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

# வெவ்வேறு நாட்டில் பிறந்த இரட்டை குழந்தைகள்



இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு வெவ்வேறு நாட்டில் இரட்டை குழந்தைகள் பிறந்துள்ளன.

டோனா கீனன்(வயது 28) என்ற பெண்ணுக்கு ஏற்கனவே இரண்டரை வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது.

அப்பெண் மீண்டும் கர்ப்பம் அடைந்தார். அது இரட்டை குழந்தை என்று தெரிய வந்தது. இங்கிலாந்தில் நார்த்தம்பர்லேண்டில் உள்ள தனது தாத்தா வீட்டில் அப்பெண் தங்கி இருந்தார்.

பிரசவ திகதிக்கு 4 வாரங்கள் இருக்கும் நிலையில், டோனாவுக்கு பிரசவ வலி ஏற்பட்டது. அதையடுத்து, தாத்தா வீட்டிலேயே அவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

ஆனால், குறைபிரசவத்தில் பிறந்து இருப்பதால், மற்றொரு குழந்தையை மருத்துவமனையில் வைத்து பெற்றெடுப்பது நல்லது என்று அறிவுறுத்தப்பட்டது.

அதையடுத்து ஆம்புலன்ஸ் மூலமாக இங்கிலாந்து எல்லையை கடந்து ஸ்காட்லாந்தில் மெல்ரோஸ் என்ற இடத்தில் உள்ள மருத்துவமனையில் டோனாவை சேர்த்தனர்.

அங்கு அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதாவது, இரட்டை குழந்தைகளில் முதல் குழந்தை பிறந்த ஒரு மணி 40 நிமிடங்கள் கழித்து. அதுவும் வேறு ஒரு நாட்டில் அவருக்கு இரண்டாவது குழந்தை பிறந்தது.

இரு குழந்தைகளும் மருத்துவமனையில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

# உலக பார்வை

## பின்லேடனுக்கு உதவிய இராணுவ அதிகாரி

### புதிய தகவலால் பரபரப்பு

சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடனுக்கு, முன்னாள் ஜனாதிபதி முஷாரப் அனுமதியுடன் பாகிஸ்தான் இராணுவ அதிகாரி ஒருவர் உதவியது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாகிஸ்தானின் அபோதாபாத்தில் பதுங்கியிருந்த ஒசாமா பின்லேடனை அமெரிக்க கடற்படை வீரர்கள் கடந்தாண்டு மே மாதம் சுட்டுக் கொன்றனர்.

இந்நிலையில் பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்பான ஐஎஸ்ஐ-யின் முன்னாள் தலைவர் வெளியிட்டுள்ள தகவல் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவர் கூறுகையில், ஒசாமா பின்லேடனை உலகம் முழுவதும் அமெரிக்கா தேடிக்கொண்டிருந்த சமயத்தில், பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்த அவருக்கு இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் இஜாஸ் ஷா தேவையான உதவிகளைச் செய்தார்.

இவை அனைத்தும் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரபின் முழு அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்டதாக தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மேலும் பர்வேஸ் முஷாரப் ஜனாதிபதியாக இருந்த போது இஜாஸ் ஷா மிகவும் வலிமை பொருந்திய நபராகத் திகழ்ந்தார். அவர்தான் ஒசாமா பின் லேடனை மறைவிடத்தில் பதுங்க வைத்து தேவையான உதவிகளைச் செய்ததாகக் குறிப்பிட்டார். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியை அடிப்படையாக வைத்து சிட்னி மார்னிங் ஹெரால்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

ஒசாமா பின்லேடன் பதுங்கியிருந்த வீடு, ஷா உத்தரவின் பேரில் கட்டப்பட்டது என்றும் பட் குற்றம் சாட்டினார். ஆனால் இத்தகைய குற்றச்சாட்டுகளை பிரிகேடியர் ஷா மறுத்துள்ளார்.

உலகில் எப்பகுதியில் உள்ள பொறுப்பான பதவியிலிருந்து ஓய்வு பெற்ற எவருமே இத்தகைய குற்றச்சாட்டுகளை ஏற்கவே மாட்டார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டு ஓராண்டான நிலையில் இதுவரை உபயோகமான துப்பு எதுவும் கிடைக்கவில்லை. அவருக்கு தான் உதவி செய்திருந்தால் அந்தத் தகவல் வெளியாகாமலா இருந்திருக்கும் என்று ஷா கேள்வி எழுப்பினார். சர்வதேச அளவில் ஒரு நபரைத் தேடிக் கொண்டிருப்பது தெரியவந்த நிலையில் அவருக்கு உதவி செய்ததற்கா[illegible] ஆதாரம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்று ஷா குறிப்பிட்டார்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசீர் புட்டோ கொல்லப்பட்ட பிறகு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி அவுஸ்திரேலியாவில் குடியேறிவிட்டார் ஷா.

பயங்கரவாதிகளுடன் சேர்ந்து தன்னைக் கொல்ல ஷா சதி செய்வதாக புட்டோ குற்றம் சாட்டியிருந்தார். அவர் எழுதியிருந்த கடிதத்தில் இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

பெனாசீர் புட்டோவுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார் ஷா. ஆனால் அவரால் பேநாசீரை காப்பாற்ற முடியவில்லை.



ஐக்கிய நாடுகள் சிறப்பு தூதுவர் கொபி அனான் (இடது), சிரியா அதிபர் பஷர் ஆசாத்தை சந்தித்து சிரியாவில் அமைதியை நிலைநிறுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினார்.

# இந்திய தூதர்களை கொல்ல நினைத்தான் முகமது மெரா

### பிரான்ஸ் பத்திரிக்கை தகவல்

பல்வேறு நாடுகளில் உள்ள இந்திய தூதர்களை கொல்ல திட்டமிட்டிருந்தாக, பிரான்ஸ் நாட்டில் சுட்டுக் கொல்லப்பட்ட அல்-குவைதா அமைப்பை சேர்ந்த முகமது மெரா தனது மரண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளான்.

பிரான்ஸ் நாட்டின் துலூஸ் நகரில் கடந்த மார்ச் மாதம், பள்ளிக் கூடம் ஒன்றின் மீது முகமது மெரா என்ற பயங்கரவாதி திடீர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், யூத மாணவர்கள் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

அதன் பிறகு பொலிசார் முகமது மெராவை சுட்டுக் கொன்டனர். இறக்கும் தருவாயில், மெரா தனது வாக்குமூலத்தில் அல்-குவைதாவினர் தான் என்னை இந்த செயலை செய்ய சொன்னார்கள். பாகிஸ்தான் தலிபான்கள் தான் எனக்கு ஆயுதப் பயிற்சி அளித்தனர்.

பல்வேறு நாடுகளில் உள்ள இந்திய தூதர்களை கொலை செய்ய திட்டமிட்டிருந்தேன் என்றார். இத்தகவலை பிரான்ஸ் பொலிசார் தற்போது வெளியிட்டுள்ளனர்.

# ரைம் பத்திரிகையின் விமர்சனத்திற்கு அமைச்சர் சிதம்பரம் கண்டனம்



பிரதமரை பற்றி, அமெரிக்காவின் "டைம்" பத்திரிகை விமர்சித்துள்ளது விரும்பத்தக்கதல்ல, என, மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை என, அமெரிக்காவின் "டைம்" பத்திரிகை, அட்டைப் பட செய்தியாக வெளியிட்டுள்ளது. இந்தப் பத்திரிகை, பிரதமரை மோசமாக விமர்சித்துள்ளதால், மன்மோகன் சிங் பதவி விலக வேண்டும்" என, பாரதிய ஜனதா தலைவர்கள் கோரியுள்ளனர்.

இது குறித்து, மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் குறிப்பிடுகையில், பிரதமரைப் பற்றி, டைம் பத்திரிகை விமர்சித்துள்ளது, விரும்பத்தக்கதல்ல. டைம் பத்திரிகையின் தற்போதைய செய்தியை மேற்கோள் காட்டும் பாரதிய ஜனதா கட்சியினர், கடந்த 2002ம் ஆண்டு, குஜராத் கலவரத்தை கண்டித்து, அப்போதைய பிரதமர் வாஜ்பாயை விமர்சனம் செய்த போது, என்ன செய்தார்கள்? தற்போதைய பொருளாதார நிலையிலிருந்து, நாம் மேம்படத் தான் வேண்டும். நிச்சயமாக மேம்படுவோம், இதுதான், அந்த பத்திரிகைக்கு நாங்கள் கூறும் பதில், என்றார்.

## சுவிஸ் வங்கிகளில் வைப்பிலுள்ள

# இந்தியர்களின் கறுப்பு பணத்தின் மதிப்பு 12,700 கோடி



சுவிட்சர்லாந்து வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ள கருப்பு பணத்தின் மதிப்பு ரூ.12,700 கோடி எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இது சுவிஸ் வங்கிகளில் வெளிநாட்டினரின் மொத்த முதலீட்டில் [illegible]4 வீதம் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் கருப்பு பணத்திற்கு எதிராக அந்தந்த நாட்டு அரசுகள் கடும் போராட்டத்தில் களமிறங்கியுள்ளன.

இந்தியாவைப் பொறுத்தவரை பாஜக உட்பட பிரதான அரசியல் கட்சிகளும் சில சமூக அமைப்புகளும் இந்தியர்கள் சுவிஸ் வங்கிகளில் பதுக்கியுள்ள கருப்பு பணத்தை மீட்க வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றன.

இது போன்ற நடவடிக்கைகள் ஒவ்வொரு நாடுகளிலும் நிலவி வருவதால் கடந்த 4 ஆண்டுகளில் சுவிஸ் வங்கிகளில் வெளிநாட்டினரின் முதலீடு ரூ. 20 லட்சம் கோடி குறைந்துள்ளது.

கடந்த 2011ம் ஆண்டு இறுதியில் வெளிநாட்டினரின் மொத்த முதலீட்டில் 51 சதவீதம் குறைந்துள்ளது.

சுவிஸ் வங்கிகள் சங்கம் தெரிவித்துள்ள தகவல்படி, 2011ம் ஆண்டு இறுதியில் வங்கிகளில் உள்ள மொத்த சொத்து மதிப்பு ரூ. 302 லட்சம் கோடி. இதில் 51வீதம் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பணம் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நித்தியானந்தாவுக்கு வழங்கிய சம்மனை விளம்பரமாக வெளியிட உத்தரவு

நித்தியானந்தாவுக்கு பிறப்பித்த நீதிமன்ற சம்மனை பத்திரிக்கைகளில் விளம்பரமாக வெளியிட மதுரை மாவட்ட கூடுதல் முதலாவது [illegible]மன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை இளைய ஆதீனமாக நித்தியானந்தாவை நியமித்தது செல்லாது, சைவ நெறிமுறைகளுக்குப் புறம்பாக இந்த நியமனம் நடந்துள்ளது.

எனவே இதை ரத்துச் செய்து உத்தரவிட வேண்டும் என்று கோரி மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதை விசாரித்த நீதிமன்றம், மதுரை ஆதீனம் மற்றும் நித்தியானந்தா ஆகிய இருவரும் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க உத்தரவிட்டது. இதுதொடர்பாக சம்மனும் அனுப்பப்பட்டது.

சம்மனை மதுரை ஆதீனம் வாங்கிக் கொண்டார். ஆனால் நித்தியானந்தா பெற மறுத்து விட்டார். சம்மனை வாங்கிய ஆதீனமும் நீதிமன்றத்திற்கு வர மறுத்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று இந்த வழக்கு நீதிமன்றத்தில் வந்த போது, மனுதாரர்கள் மணிவாசகம், தியாகராஜன் ஆகியோர் சார்பில் ஆஜரான வக்கீல்கள், நித்தியானந்தா வேண்டும் என்றே நீதிமன்ற சம்மனைப் பெற மறுத்து வருவதாக குற்றம் சாட்டினர்.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி ராஜசேகர், நித்தியானந்தா வேண்டும் என்றே சம்மனை பெற மறுத்து வருவதால் அவருக்கு அனுப்பப்பட்ட சம்மனை பத்திரிகைகளில் விளம்பரமாக வெளியிடுமாறு அதிரடி உத்தரவிட்டார்.

# இந்திய சிறைகளில் வாழும் பாகிஸ்தானியர்களின் விபரம் வெளியீடு

இந்தியாவில் உள்ள சிறைகளில் பாகிஸ்தானைச்சேர்ந்த 81 மீனவர்கள் உட்பட 428 பேர் அடைக்கப்பட்டுள்ளனர் என பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் நாடாளுமன்றமான தேசிய அசெம்பிளி கூட்டம் நடந்து வருகிறது.

இக்கூட்டத்தின் போது பாகிஸ்தான் வெளிவிவகாரத்துறை இணை அமைச்சர் பாலிக் அகமது கான் கூறியதாவது. இந்தியா-பாகிஸ்தான் இடையே ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் இரு முறை வரை இருநாட்டு கைதிகள் குறித்த விவரங்கள் வெளியிடப்படும்.

அந்த வகையில் இந்திய சிறைகளில் பாகிஸ்தானைச் சேர்ந்த 428 பேர் உள்ளனர். இவர்களில் 81 பேர் மீனவர்கள் ஆவர்.

மேலும் 18 பேர் தங்களது தண்டனை காலத்தை முடித்துவிட்டு விடுதலையாகும் நிலையில் உள்ளனர்.

தற்போது இந்தியா-பாகிஸ்தான் வெளிவிவகார செயலர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதில் தண்டனை காலம் முடிந்த பாகிஸ்தான் கைதிகள் குறித்த விவரங்கள் கேட்கப்பட்டுள்ளது. அவர்களமுன்னரே விடுதலையாக வாய்ப்புள்ளது என்று கூறினார்.

# சிறுமி வாயில் சிறுநீர் ஊற்றியவர் கைது

மேற்குவங்க மாநிலத்தில் படுக்கையில் சிறுநீர் கழித்ததற்காக சிறுமியொருவரை பலவந்தப்படுத்தி சிறுநீரைக் குடிக்க வைத்த விடுதிக் காப்பாளர் கைது செய்யப்பட்டார்.

விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தின் 5-ஆம் வகுப்பு மாணவிக்கு படுக்கையில் சிறுநீர் கழிக்கும் பழக்கம் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் விடுதியில் படுத்திருக்கும்போது சிறுநீர் கழித்ததற்காக அவரை பலவந்தப் படுத்தி சிறுநீரை அவரது வாயில் விடுதி காப்பாளர் ஊற்றியுள்ளார்.

இதுகுறித்து பெற்றோருக்கு தெரியவந்ததும் அவர்கள் பொலிஸில் புகார் அளித்தனர். மேலும் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையமும் இதுகுறித்து விளக்கம் அளிக்குமாறு உத்தரவிட்டுள்ளது. இந்த சம்பவத்தில் விடுதி காப்பாளர் கைது செய்யப்பட்டதுடன், அவ்விடுதிக்குள் அனுமதியின்றி நுழைந்ததாக அந்த சிறுமியின் பெற்றோரும் கைது செய்யப்பட்டனர்.

# இந்திய செய்திகள்

# ஆழ்துளை கிணற்றில் விழுந்த 4 வயது சிறுவன் மீட்பு



மகாராஷ்டிராவில் 250 அடி ஆழ ஆழ்துளை கிணற்றில் விழுந்த 4 வயது சிறுவனை 4 மணி நேர போராட்டத்திற்கு பின்பு மீட்பு குழுவினர் மீட்டனர். இதன் மூலம் அவன் மறுபிறவி எடுத்துள்ளான்.

மகாராஷ்டிரா, அகமத் நகரின் ரகூரி கிராமத்தைச் சேர்ந்த மனோஜ் அனுஷ் கோர்படே என்ற 4 வயது சிறுவன் நேற்று மாலை தனது வீட்டருகே விளையாடிக் கொண்டிருந்தான்.

அப்போது அங்குள்ள 250 அடி ஆழ ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்துவிட்டான். இதனை தற்செயலாக பார்த்த அவனது தாய் கூச்சலிட்டார்.

பின்னர் உடனடியாக கிராம மக்கள் ஒன்று கூடி, சிறுவனை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதைத்தொடர்ந்து ஜெ.சி.பி. இயந்திரம் வரவழைக்கப்பட்டு, மீட்புக்குழுவினர் 4 மணி நேரம் போராடி மாலை 5.45 மணியளவில் மனோஜை உயிருடன் மீட்டனர்.


கடந்த மாதம் அரியானாவில் மகி என்ற சிறுமி, ஆழ்துளை கிணற்றில் விழுந்தார். 86 மணி நேர போராட்டத்திற்கு பின்பு இறந்த நிலையில் மீட்கப்பட்டார். ஆனால் நேற்று நடந்த சம்பவத்தில் சரியான நேரத்தில் உள்ளூர் வாசிகள் செயல்பட்டதால் அவன் உயிருடன் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது அகமத் நகரில் உள்ள விவேகானந்தா மருத்துவமனையில் சிகிச்சைக்காக மனோஜ் கோர்படே அனுமதிக்கப்பட்டுள்ளான்.



பள்ளிப் படிப்பை குழந்தைகள் பாதியில் கைவிடுவதை தவிர்க்க, ஆந்திராவில் விழிப்புணர்வு முகாம் மாநில அரசு சார்பில் நடந்து வருகிறது. திருப்பதி சந்திரகிரியில் நடந்த முகாமில் பங்கேற்ற முதல்வர் கிரண்குமார் ரெட்டி மற்றும் மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் சுபோத் காந்த் சகாய், பள்ளிக் குழந்தைகளுக்கு சிலேட்டுகளை வழங்கி எழுதக் கற்றுக் கொடுத்தனர்.

# ஆசிரியையுடன் இருந்த சில்மிஷ வீடியோவை வெளியிட்ட மாணவன்



தனது ஆசிரியையுடன் தனிமையில் உல்லாசமாக இருந்த காட்சிகளை கைபேசி கமெராவால் படம்பிடித்து, அதை ஊர் மக்கள் பார்க்கும் படி செய்த மாணவனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை என்ற ஊரில் உள்ள பள்ளிக்கூடத்தில் 36 வயது மிக்க ஆசிரியை பணியாற்றி வருகிறார்.

இவரது கணவர் வெளிநாட்டில் இருப்பதால் தனிமை இந்த ஆசிரியை தவறான வழிக்கு இழுத்துச் சென்றது. அவ்வூர் பஞ்சாயத்து தலைவர், ஆடவர், சக ஊழியர்கள் என அனைவரிடமும் தொடர்பு வைத்திருந்த இவருக்கு தனது மாணவனின் நட்பு கிடைத்தது.

இவரையும் தவறான வழியில் அந்த ஆசிரியை அனுபவித்து வந்திருக்கின்றார். இதற்கிடையில் அம்மாணவனுக்கு கமெரா கைப்பேசி ஒன்றை பரிசளித்தார்.

அவன் கைபேசியின் மூலம் ஆசிரியையுடன் தனிமையில் இருந்ததை படம்பிடித்துள்ளான். இதை தனது சக நண்பர்களிடம் காட்ட, இவ்விடயம் புளுரூத் மூலமாக அவ்வூர் முழுவதும் காட்சிப்படுத்தப்பட்டன.

மாணவர்கள், இளைஞர்கள் என குழித்துறை அன்கூரிடத்தில் இப்படம் தற்போது உலாவி வருகின்றது.

இந்த சம்பவத்தால் குழம்பிப் போன பள்ளி நிர்வாகம் இருவரையும் என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருக்கின்றது.

மாகாண கூடைப்பந்தாட்டம்

# வவுனியா அணி மண் கௌவ: சம்பியன் வென்றது யாழ்.மாவட்டம்

வலிகாமம்

வவுனியா அணியை புள்ளிகளை பெறவிடாது அதிரடி காட்டிய யாழ் மாவட்ட அணி அதிக புள்ளிகள் வித்தியாசத்தில் மாகாண சம்பியனை தம் வசமாக்கியது.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்ற அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் யாழ். மாவட்ட அணியும் வவுனியா மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.



நான்கு சுற்று ஆட்டங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் யாழ். மாவட்ட அணியின் கைகளே மேலோங்கிக் காணப்பட்டதுடன் வவுனியா அணியினரை புள்ளிகள் பெறவிடாது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

வவுனியா மாவட்ட அணி புள்ளிகள் பெறாத போதிலும் யாழ். மாவட்ட அணியினரை புள்ளிகள் பெறுவதற்கு முட்டுக் கட்டை போடுவதில் தவாறாது கவனம் எடுத்து விளையாடினார்கள். முதல் சுற்று ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி 26:00 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைய இரண்டாம் சுற்று ஆட்டத்திலும் யாழ் மாவட்ட அணி 14:02 புள்ளிகள் என்ற அடிப்படையில் முடிவடைந்தது.

மூன்றாவது சுற்று ஆட்டத்திலும் யாழ் மாவட்ட அணி 11:02 புள்ளிகள் என்ற அடிப்படையில் முடிவடைய நான்காம் சுற்று ஆட்டமும் யாழ் மாவட்ட அணி 12:00 புள்ளிகள் என்ற அடிப்படையில் முடி வடைந்தது. ஆட்ட இறுதியில் யாழ் மாவட்ட அணி 63:04 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று வட மாகாண சம்பியனாக மீண்டும் தெரிவானது.

# ரென்னிஸ் தரவரிசையில் பெடரர், அஸரென்கா முதலிடம்



விம்பிள்டன் போட்டியில் 7வது முறையாக சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்த ரோஜர் பெடரர் (சுவிஸ்), ஆண்கள் ஒற்றையர் பிரிவு தரவரிசைப் பட்டியலில் மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறி உள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்கா முதலிடத்தை பிடித்தார்.

அமெரிக்காவின் பீட் சாம்ப்ராஸ் சாதனையை (விம்பிள்டனில் 7 பட்டம்) சமன் செய்த பெடரர், முதலிடத்தில் 286 வாரங்கள் நீடித்த சாம்ப்ராசின் மற்றொரு சாதனையையும் சமன் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. முதலிட அந்தஸ்தை பெறும் மிக வயதான வீரர்கள் பட்டியலிலும் பெடரருக்கு (30 வயது, 335 நாள்) 2வது இடம் கிடைத்துள்ளது. இந்த பட்டியலில் அமெரிக்காவின் அகாசி (33 வயது 131 நாள்) முதலிடத்தில் உள்ளார்.

விம்பிள்டன் பெணகள் பிரிவு இறுதியாட்டத்தில் போலந்து வீராங்கனை ரட்வன்ஸ்கா அமெரிக்காவின் செரீனா வில்லியம்சை வீழ்த்தியிருந்தால் முதலடத்திற்கு முன்னேறி இருப்பார். ஆனால், ரட்வன்ஸ்கா போராடி தோற்றதால் அஸரென்காவுக்கு அந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

# ஓய்வு பெறும் முடிவிலிருந்து மாறுகிறார் கெவின் பீற்றர்சன்



ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்த இங்கிலாந்து வீரர் பீற்றர்சன், மீண்டும் விளையாடும் முடிவில் உள்ளார் எனத் தெரிகிறது.

இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர் பீற்றர்சன் (32வயது). சமீபத்தில் ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 போட்டிகளில் இருந்து திடீரென ஓய்வை அறிவித்தார். இப்போது மீண்டும் அணிக்கு திரும்பும் மனநிலையில் உள்ளதாக தெரிகிறது. இதுகுறித்து பீற்றர்சன் கூறியது:

ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்டு பெறுவது என எடுத்த முடிவு கடினமானது. ருவென்ரி-20 , ஐ.பி.எல்., போட்டிகள் வந்தபின், ஒரு நாள் போட்டிக்கு அதிக ஆபத்து உள்ளது. ஏனெனில், இவ்வகை போட்டியில் "மிடில் ஓவர்கள்" "டல்" அடிக்கின்றன. வேறு சில வீரர்களும் என்னைப் போல யோசித்தால், அவர்களும் ஓய்வு பெற்று விடுவர் என்று நினைக்கிறேன்.

ஆனால், ஒருநாள் போட்டியில் விளையாடவில்லை எனில், ருவென்ரி-20 அணியில் இடமில்லை என்கின்றது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை (இ.சி.பி.,). இது மிகவும் வருத்தமானது. என்னை ருவென்ரி-20 அணியில் விளையாட அனுமதித்தால், தற்போதைய ஒருநாள் அணியில் இருந்து 5 முதல் 6 வீரர்கள், விலகத் தயாராக உள்ளனர். ஆனால், இதை யார் கேட்பது.

தற்போதைய அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை புறக்கணிக்க வேண்டாம் என, எனது தாயார், மனைவி, சகோதரர்கள் உட்பட பலரும் முன்பு கூறினர். இதை இழக்க விரும்பவில்லை தான். என்றாலும், கடந்த ஏழு ஆண்டுகளாக அதிகப்படியான போட்டிகளில் பங்கேற்று வந்த எனக்கு, சற்று ஓய்வு தேவைப் பட்டது.

மீண்டும் ஒருநாள் போட்டிக்கு திரும்புவது குறித்து இப்போது கூறமுடியாது. எதிர்காலத்தில் எது வேண்டுமானாலும் நடக்கலாம். அதேநேரம், போட்டி அட்டவணைகள், இடைவிடாது தொடர்ந்து இருப்பதையும் கவனிக்க வேண்டியது உள்ளது. என்ன நடக்கிறது என பொறுத்திருந்து பார்க்கலாம்.

அதேநேரம், இலங்கையில் நடக்கவுள்ள ருவென்ரி-20 உலகக்கிண்ண அணி இன்னும் அறிவிக்கவில்லை. வீரர்கள் ஒப்பந்தமும் வரும் செப்ரெம்பர் மாதம் தான் புதுப்பிக்கப்படுகிறது. இதனால், மீண்டும் அணியில் விளையாட வாய்ப்பு ஏற்படும் என்று நம்புகிறேன். இது நடந்தால் நன்றாக இருக்கும் - என்றார்.

# குத்துசண்டை சம்பியனை தக்க வைத்தார் கிளிட்ச்கோ

உலகக் குத்துசண்டை போட்டி பெர்ன் நகரில் நடந்தது. தற்போதைய நடப்பு சம்பியனும், 36 வயதான உக்ரைன் வீரருமான விளாடிமிர் கிளிட்ச்கோவும், அமெரிக்க வீரர் டோனி தாம்சனும் மோதினர். இந்த ஆட்டத்தில் 6வது சுற்று முடிவில் கிளிட்ச்கோ எளிதாக வெற்றி பெற்றார்.

இதன்மூலம் மீண்டும் உலக குத்துச்சண்டை சம்பியன் பட்டத்தை கிளிட்ச்கோ தக்க வைத்து கொண்டுள்ளார். முன்னதாக 4 வருடங்களுக்கு முன் தாம்சனுடன் இவர் மோதினார். அதிலும் கிளிட்ச்கோ தான் வென்றார். 2004 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து சம்பியனாக இருந்து வருகிறார். மொத்தம் 58 போட்டிகளில் பங்கேற்றுள்ள கிளிட்ச்கோ 3 போட்டிகளில் மட்டுமே தோல்வியடைந்துள்ளார்.

# ஒலிம்பிக் ரென்னிஸ் வீரர்கள் தேர்வு யாருக்கும் எந்த பலனும் இல்லை –சானியா



லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு ரென்னிஸ் வீரர்கள் தேர்வு செய்யப்பட்ட விதத்தினால், யாருக்கும் எந்த பலனும் இல்லை. தவிர, *மகேஷ் பூபதியுடனான நட்பு தான்* பாதிக்கப்படுகிறது. என, சானியா மிர்சா புலம்பியுள்ளார்.

லண்டன் ஒலிம்பிக் ரென்னிஸ் வீரர்கள் தேர்வில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. நீண்ட இழுபறிக்குப் பின் பயஸ்-விஷ்ணுவர்தன், பூபதி-போபண்ணா ஜோடி ஆண்கள் இரட்டையர் பிரிவில் பங்கேற்பர் என, அகில இந்திய ரென்னிஸ் சங்கம் (ஏ.ஐ.டி.ஏ.) அறிவித்தது. தவிர, கலப்பு இரட்டையரில் பயசுடன் சானியா மிர்சா விளையாட வேண்டும் என, அறிவித்தது.

இதுகுறித்து சானியா மிர்சா கூறியதாவது:

வீரர்கள் தேர்வில் ஏற்பட்ட பிரச்சினையால் யாருக்கும் எந்த நன்மையும் இல்லை. இதனால் எங்களுக்கு இடையே மோதல் உருவானது தான் மிச்சம். இது துரதிருஷ்டவசமானது. ஒருவழியாக பிரச்சினை முடிவுக்கு வந்தது மகிழ்ச்சி, என்றாலும் இதை மறப்பது என்பது மிகவும் கடினம். ஏனெனில், இந்த விவகாரமே வந்திருக்கக் கூடாது.

நானும், பூபதியும் நல்ல நண்பர்கள். நான் முன்களத்தில் விளையாடுபவள். பூபதி பின்களத்தில் விளையாடுபவர். எங்கள் ஜோடிக்கு முக்கியத்துவம் தந்திருக்க வேண்டும். இப்போதைய பிரச்சினையால், எங்கள் நட்புக்கு பாதிப்பு வந்துவிட்டது. அதேநேரம், இவருடன் தான் விளையாடுவேன், இவருடன் விளையாட முடியாது என, ஒருபோதும் நான் கூறியதில்லை. நாட்டுக்காக யாருடனும் விளையாடுவேன்.

*தற்போது பயசுடன் லண்டன்* ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பது பெருமையாக உள்ளது. போட்டியின் மீது கவனம் செலுத்தி. பதக்கம் வெல்ல முயற்சிப்பது தான் முதல் இலக்கு. விம்பிள்டனில் பயஸ் கலப்பு இரட்டையரில் இறுதியாட்டத்துக்கு முன்னேறியது நம்பிக்கையை அதிகப்படுத்தியுள்ளது.

நானும், பூபதியும் முதலில் தோற்று வெளியேறியது ஏமாற்றம் தான். நாங்கள் இறுதிக்கு சென்றிருக்க வேண்டும். கொமன்வெல்த், ஆசிய போட்டி, ஆசிய-ஆப்ரோ என, மொத்தம் 12 பதக்கங்கள் வென்றுள்ளேன். ஒலிம்பிக் பதக்கம் மட்டும தான் வெல்ல வேண்டும். இம்முறை இதை வெல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

# கூட்டுறவுச் சங்க விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வலிகாமம்

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையும் கூட்டுறவு அமைப்புகளும் இணைந்து நடத்திய 90 ஆவது கூட்டுறவு ஆண்டையொட்டி நடத்திய விளையாட்டுப் போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுகிழமை நடைபெற்றது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு:

**100 மீற்றர் ஓட்டம் (அங்கத்தவர்)**

து.மயூரன் யோ.ஜெயகணேஷ்கா.அனுதிபன்

(மூவரும் ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்)

**100 மீற்றர் ஓட்டம் (பணியாளர்)**

ரி.கமலநாதன் (காரைநகர்பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)

சி.கிளின்ரன் (பண்டத்திரிப்பு பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)

எஸ்.ரகுவரன் (கோண்டாவில் பனை தென்னனை வள கூட்டுறவுச் சங்கம்)

**100 மீற்றர் ஓட்டம் பெண் (அங்கத்தவர்)**

எம்.சுபாஜினி (இணுவில் அபிராமி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்)

தி.லக்சிகா (ஏழாலை ஸ்ரீ விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்)

சி.மகிழினி (பண்டத்தரிப்பு பனை, தென்னை வள கூடடுறவுச் சங்கம்)

**100 மீற்றர் ஓட்டம் பெண் பணியாளர்**

நா.கஜனி மா.பிரியவேதினி செ. துஷ்யந்தி (மூவரும் பண்டத்தரிப்பு பனை. தென்னனை வள கூட்டுறவுச் சங்கம்)

**சைக்கிளோட்டம் ஆண் அங்கத்தவர்**

த.தனிஷ் அ.சுலக்சன் தி.கமல்ராஜ் (மூவரும் பண்டத்தரிப்பு பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)

**சைக்கிளோட்டம் பணியாளர்**

தி.பற்பராசா, நடராசா, காந்தரூபன் (பண்டத்தரிப்பு பனை, தென்னை வள கூட்டுறவுச்சங்கம்)

**சைக்கிளோட்டம் பெண் அங்கத்தவர்**

இ.பருவநிலா (தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்)

இ.தனுசா (பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்)

பு.மாலா (கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்தி கூடடுறவுச் சங்கம்)

**4 X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் ஆண்**

ஏழாலை ஸ்ரீ விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

பண்டத்தரிப்பு பனை, தென்னை வள கூட்டறவுச் சங்கம்

**4X100 பெண் அஞ்சல் ஓட்டம்**

இணுவில் அபிராமி சிக்கன கடனுதவு கூட்டற்வுச் சங்கம்.

பண்டத்தரிப்பு பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம்.

ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

**4 X200 மீற்றர் அஞ்சல் ஓட்டம் ஆண்**

ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

இணுவில் அபிராமி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

**4 X200 மீற்றர் ஓட்டம்**

இணுவில் அபிராமி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்.

இப்பத்திரிகை இன்'.போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 11.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது